

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே 03, 2012 | புரட்சி 11 | முழக்கம் 16 | விலை: ரூ.2.50

## அரசியல் சட்டத்துக்கு எதிரான 'மனுதர்மத்துக்கு' தடை போடுக!

# நவ. 26 இல் மனுதர்மம் எரிக்கப்படும்!

## திருப்பூர் நிறைவு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவிப்பு




***அரசியல் சட்டத்துக்கு எதிரான மனுதர்மத்தை மத்திய அரசு தடை செய்யக் கோரியும், வாழ்வியலில் சட்டப்பூர்வமாக திணிக்கப்படும் சாதி ஒடுக்குமுறைகளை தமிழக அரசு தடுத்து நிறுத்தக் கோரியும், கழக சார்பில் தமிழகம் முழுதும் 'மனுதர்மம்' தீயிடப்படுகிறது.***

திராவிடர் இயக்க நூற்றாண்டில் ஜாதிய வாழ்வியல் எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்தியுள்ளது. ஏப்ரல் 14 ஆம் தேதி பரமக்குடியில் மாவீரன் இமானுவேல் சேகரன் நினைவிடத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சாதி ஒழிப்பு உறுதியேற்று, பயணம் தொடங்கியது. பயணக் குழுவினர், சாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட மேலவளவு முருகேசன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தினர். ஏப். 29 ஆம் தேதி திருப்பூரில் பயணம் நிறைவடைந்தது.

அன்று காலை கோவை மாவட்டம் சோமனூரிலுள்ள செகுடந்தாளி முருகேசன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தி, பயணத்தைக் குழுவினர் நிறைவு செய்தனர். ஆதிக்கசாதியைச் சார்ந்த ஒருவரின் இருக்கைக்கு அடுத்த இருக்கையில் அரசுப் பேருந்தில் அமர்ந்து பயணம் செய்தமைக்காக முருகேசன் இல்லத்தில் சாதி வெறிக் கும்பல் அவரைத் தாக்கியது. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நீதி கேட்டு வழக்கு தொடர்ந்தார் முருகேசன். வழக்கைத் திரும்பப் பெறுமாறு, சாதி வெறியர்கள் மிரட்டினர். திரும்பப் பெற அவர் மறுத்துவிட்டதால், அவர் சாதி வெறியர்களால் வெட்டி கொலை செய்யப்பட்டார்.

சோமனூரில் சாதி தீண்டாமை எதிர்ப்புப் பரப்புரை நடத்திய தோழர்கள் அவைருக்கும் திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் துரைசாமி இல்லத்தில் உணவு வழங்கப்பட்டது. மாலை 7 மணியளவில் திருப்பூர் அரிசிக் கடை வீதியில் பரப்புரை நிறைவு விழா நிகழ்ச்சி மாவட்டத் தலைவர் துரைசாமி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது. சாதி ஒழிப்பு உறுதிமொழியைத் தொடர்ந்து பரப்புரைக் குழுவில் பயணித்த பரப்புரையாளர்கள் வெள்ளமடை நாகராசு, தூத்துக்குடி பால். பிரபாகரன், திருச்சி புதியவன் உரையாற்றினர். தொடர்ந்து, தியாகி இமானுவேல் பேரவை பொதுச் செயலாளர் சந்திரபோசு, 'தலித் முரசு' ஆசிரியர் புனிதபாண்டியன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். பயணக் குழுவில் இடம் பெற்ற தோழர்கள் தீர்மானங்களை பலத்த கரவொலிக்கிடையே முன்மொழிந்தனர்.

பயணத்தில் பங்கேற்ற தோழர்களைப் பாராட்டி நினைவுப் பரிசாக கழக வெளியீடுகளை வழங்கி, கழகத்தின் போராட்ட அறிவிப்புத் தீர்மானத்தை, தனது உரையின் இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன் மொழிந்தார். தீர்மான விவரம்:

இரண்டாயிரம் ஆண்டுகளாக பார்ப்பன மனு நீதியே எழுதப்படாத சட்டமாக மக்களை அடக்கி ஆண்டு வந்தது. இந்தியாவில் முதன்முதலாக 1950 ஆம் ஆண்டுதான் ஓர் அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த அரசியல் சட்டம்கூட மக்களுக்கு முழுமையாக நீதியைப் பெற்றுத் தரவில்லை. தீண்டாமையைத் தடைசெய்தாலும் இந்த சட்டம் சாதியைப் பாதுகாக்கிறது. பழக்க வழக்கங்களை மாற்றக்கூடாது என்று கூறி பழைமையை பார்ப்பனீயத்தை உயர்த்திப்பிடிக்கிறது. ஆனாலும் மனுதர்மம் திணித்த அடிப்படையான சமுக ஏற்றத்தாழ்வுகளை அரசியல் சட்டம் ஏற்கவில்லை.

மனிதர்கள் அனைவரும் சமமாக முடியாது என்கிறது மனுதர்மச் சட்டம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிறது அரசியல் சட்டம். கல்வி பெறும் உரிமையை சூத்திரர்களுக்கு மறுத்தது மனுதர்மம். 6 வயது முதல் 14 வயது வரை அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வியை வழங்க வேண்டும் என்கிறது அரசியல் சட்டம். பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் ( பால்ய விவாகம்) செய்து விட வேண்டும் என்கிறது மனுதர்மம். 18 வயதுக்கு முன் திருமணம் செய்வது குற்றம் என்கிறது அரசியல் சட்டம். சூத்திரர், பஞ்சமர் நாடாளக்கூடாது என்கிறது மனுதர்மம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் எவருக்கும் நாட்டை ஆளும் உரிமை வழங்குகிறது அரசியல் சட்டம். பிறப்பின் அடிப்படையில் தொழிலை நிர்ணயித்தது மனுதர்மம். விரும்பும் தொழிலை சட்டத்திற்குட் பட்டு எவரையும் செய்ய அனுமதிக்கிறது அரசியல் சட்டம்.

இப்படி ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் மனுதர்மம் அரசியல் சட்டத்தின் நோக்கிற்கும், உணர்வுகளுக்கும் நேர் எதிர் திசையில் உள்ளதால் மத்திய அரசு மனுதர்மத்தைத் தடைசெய்ய வேண்டும் என்று பெரியார் திராவிடர் கழகம் வலியுறுத்துகிறது.

அரசியல் சட்டத்தின் நோக்கங்களை முன்னெடுக்க - முறையாக அமுல்படுத்த மனுதர்மச் சிந்தனை களுக்கு எதிரான இயக்கம் அவசியமாகிறது. இந்த நிலையில் மனுதர்மத்தை அச்சிட்டுப் பரப்பி, நியாயப்படுத்துவதை பார்ப்பனர்களும் பார்ப்பனிய ஆதரவாளர்களும் மேற்கொள்வது சட்டத்தின் உணர்வுகளுக்கு எதிரானது என்பதோடு மீண்டும் மனுதர்மப் பாதையை வலுப்படுத்தும் முயற்சியாகவே இருக்கிறது.

அரசியல் சட்டம் தீண்டாமையைக் குற்றம் என்று கூறினாலும் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பல்வேறு வடிவங்களில் தீண்டாமைகள் திணிக்கப் படுவதை நாம் தீர்மானங்கள் வழியாக பட்டியலிட்டுக் காட்டியுள்ளோம். இந்தத் தீர்மானங்களைச் செயல் படுத்தவேண்டுமென்று கோருவதோடு, ஜாதி - தீண்டாமை ஒழிப்பை நோக்கி பெரியார் திராவிடர் கழகம் முன்வைத்துள்ள மேற்கண்ட செயல் திட்டங்களை நிறைவேற்ற, தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்துகிறோம். நிறைவேற்றாவிடில், பெரியார் ஜாதி ஒழிப்புக்காக அரசியல் சட்டத்திலுள்ள ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளை எரித்த நவம்பர் 26 அன்று தமிழ்நாடு முழுவதும் பெரியார் திராவிடர் கழகமும் ஜாதி ஒழிப்பில் அக்கறை கொண்ட அனைத்து முற்போக்கு அமைப்புகளும் இணைந்து மனுதர்ம சாஸ்த்திரத்தை தீயிட்டு எரிக்கும் போராட்டத்தை நடத்துவது என தீர்மானிக்கிறது.

**(ஏனைய தீர்மானங்கள் 2 ஆம் பக்கம்)**

### முழுமையாக கலந்து கொண்ட தோழர்கள்

பரப்புரைப் பயணத்தில் வெள்ளமடை நாகராசு, கோவை வடக்கு மாவட்ட செயலாளர், திருப்பூர் - சம்பூகன், மூர்த்தி, விஜயன்; பல்லடம் - வடிவேல்; மேட்டூர் - முத்துராசு, முத்துரத்தினம், கோவிந்தராசு, மூர்த்தி; கரூர் - ஸ்ரீகாந்த், திண்டுக்கல்- இராவணன் முழுமையாக பங்கேற்றனர்.

சுழற்சி முறையில் பயணத்தில் பங்கேற்ற தோழர்கள்: சூலூர் - நாராயணமூர்த்தி, ரமேஷ்குமார், வைகுண்டராமன்; கரூர் மாவட்ட செயலாளர் காமராசு; சேலம் - கோகுலக்கண்ணன்; மேட்டூர் - முத்துக்குமார், குமரப்பா, காளியப்பன், கோவிந்தராசு; வத்தலக்குண்டு - ஜெயப்பாண்டி; திருப்பூர் - பெரியார் முத்து; பழனி - பத்மநாபன்; திருச்சி - பழனி.

சொற்பொழிவாளர்களாக சுழற்சி முறையில் கலந்து கொண்ட தோழர்கள்: திருச்சி - புதியவன், சூலூர் - வீரமணி, பழனி - நல்லதம்பி, தூத்துக்குடி - பால். பிரபாகரன்.

## ‘ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு’ப் பயண நிறைவில் தமிழக அரசுக்கு வலியுறுத்தல்

# வாழ்விடங்கள் தீண்டாமைக்கு முடிவு கட்டுக!

தலித் மக்களின் வாழ்விடங்களில் பின்பற்றப்படும் தீண்டாமை வடிவங்களை தடுத்து நிறுத்த தமிழக அரசு முன் வரவேண்டும் என்று திருப்பூரில் நிறைவடைந்த ‘ஜாதிய வாழ்வியல் எதிர்ப்புப் பரப்புரை’ப் பயணத்தில் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன.

அரசு கட்டித் தரும் குடியிருப்புகள், வீட்டுமனை விற்பனைகளில் பின்பற்றப்பட்டுவரும் ‘தீண்டாமைகளை’ இத் தீர்மானங்கள் சுட்டிக்காட்டி அரசின் கவனத்தை ஈர்த்துள்ளன.

ஏப்.29 அன்று திருப்பூர் அரிசிக் கடை வீதியில் நடைபெற்ற பயண நிறைவு விழா நிகழ்வில் பயணத்தில் பங்கேற்ற தோழர்களால் கழக சார்பில் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:



பரப்புரைப் பயணத்தில்

1. தமிழ்ப் பேரரசர்கள் காலத்திலிருந்து இன்றுவரை நிலைத்து இருக்கும் “ஊர் - சேரி” என்ற இரட்டை வாழ்விடங்களை - வாழ்விடத் தீண்டாமையை ஒழிக்கும் வகையிலும், “தாழ்த்தப் பட்ட சமுதாய மக்களுக்குத் தனியாக சேரி என்று இருப்பதைத் தடைசெய்யவேண்டும்”, “இனி கட்டப் போகும் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புக்கள் ஊருக்கு உள்ளேயே கிடைக்கும் இடங்களில் அடுக்கு மாடிக் குடியிருப்புகளாகக் கட்டவேண்டும்” என்று 1947 ஆம் ஆண்டிலிருந்தே முழங்கிய பெரியாரின் இலட்சியத்தைச் செயல் வடிவமாக்கும் வகையிலும், தமிழ்நாடு அரசு இனி கட்டப்போகும் புதிய தலித் குடியிருப்புக்களை ஊருக்கு உள்ளேயே பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் தெருக்களிலேயே கிடைக்கும் சிறு சிறு இடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புக்களாகக் கட்டித் தரவேண்டும்.
2. தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் ரியல் எஸ்டேட் தொழிலில், லே அவுட் அனுமதிக்காக ஊராட்சி அலுவலகங்களை அணுகும்போது அந்த வீட்டுமனைத் தொகுப்புகளில் தலித் மக்களுக்கு வீட்டுமனை விற்பனை செய்யக் கூடாது என்று ஊராட்சித் தலைவர்கள் வாய்மொழியாக உத்தரவிடுகின்றனர். பிற்படுத்தப்பட்ட மக்களும் அப்படிப் புதிதாக உருவாகும் வீட்டுமனைத் தொகுப்புகளில் தலித் மக்களுக்கு இடம் விற்பனை செய்யக் கூடாது என மிரட்டியும் வருகின்றனர். இதனால் தலித் மக்கள் பொருளாதாரத்தில் உயர்ந்தாலும் சேரித் தீண்டாமையிலிருந்து விடுபட்டு ஊரைத் தாண்டி வீட்டுமனை வாங்கக்கூட இயலாத நிலை உள்ளது. எனவே புதிதாக உருவாக்கப்படும் வீட்டுமனைத்தொகுப்புகளில் தலித்துகளுக்கு கட்டாயம் இடஒதுக்கீடு வழங்கவேண்டும். அவை மொத்தமாக ஒரே பகுதிக்குள் ஒதுக்குப்புறமாக இல்லாமல், கலந்து இருக்க வேண்டும். தலித் மக்கள் இடம் வாங்கிய பிறகு மறு விற்பனை செய்தாலும் மீண்டும் ஒரு தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவருக்குத் தான் அந்த வீட்டுமனையை விற்பனை செய்ய வேண்டும் என்ற வகையில் அரசு சட்டமியற்ற வேண்டும்.
3. சாதி மறுப்புத் திருமணத் தம்பதியினருக்கும், அவர்களது வாரிசுகளுக்கும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் கல்வி-வேலை வாய்ப்புகளில் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் “சாதியற்றோர்” (No Caste Quota )என்ற பெயரில் தனி இடஒதுக்கீடு வழங்க சட்டம் இயற்ற வேண்டும்.
4. அரசுத் துறைகள் வேக வேகமாக தனியார் துறைகளாக மாற்றப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலில் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பன்னாட்டு நிறுவனங்களில் சாதிவாரிப் பிரதிநிதித்துவத்தை நடை முறைப்படுத்த சட்டம் இயற்ற வேண்டும்.
5. இடஒதுக்கீட்டைத் தவிர வேறு எந்த வடிவிலும் ஜாதியை அடையாளப்படுத்தும் ஊர்களின் பெயர்கள், தெருக்களின் பெயர்கள், வணிக நிறுவனங்கள், திருமண மண்டபங்கள், தனியார் பேருந்துகள், கடைவீதியில் உள்ள கடைகள் அனைத்தின் பெயர்களையும் திருத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவற்றைத் திருத்தாத நிறுவனங்களின் மீது தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வழி செய்யவேண்டும்.
6. தனியார் பெரும் தொழிற்சாலைகளில் - பஞ்சாலைகளில் உரிமையாளர்களின் சொந்த சாதியினரை அதிகமாக வேலைக்கு அமர்த்திக் கொள்வதைத் தடைசெய்ய வேண்டும். ஆலைகளின் நிர்வாகப் பிரிவு உட்பட அனைத்துப் பிரிவுகளிலும் கட்டாயம் சாதி அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும்.
7. சாதி அடிப்படையில் இயங்கும் திருமணத் துணைதேடும் மய்யங்களைத் தடைசெய்ய வேண்டும். திருமணத்திற்குத் துணைதேடும் விளம்பரங்களில் ‘ப்ராமின்ஸ் ஒன்லி’, ‘எஸ்.சி, எஸ்.டி’ தவிர என்று வரும் விளம்பரங்களையும், கவுண்டர், செட்டியார், வன்னியர், தேவர், நாடார் என்று குறிப்பிட்ட ஜாதிகளை அடையாளப்படுத்தி வரும் விளம்பரங்களையும் தடைசெய்யவேண்டும்.
8. திருமண மண்டபங்களில் மறைமுகமாக பார்ப்பன சைவக் கலாச்சாரத்தைப் பரப்பும் வகையிலும், தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் உணவுமுறையைக் கொச்சைப்படுத்தும் வகையிலும், தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி மறுக்கும் நோக்கத்திலும் ‘சைவம் மட்டும்’ என்று சொல்வதைத் தடைசெய்ய வேண்டும். சைவம் மட்டும் புழங்கச்சொல்லும் மண்டப உரிமையாளர்கள் மீது தீண்டாமை வன்கொடுமை சட்டத்தின் வழியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நகரங்களில் வீடு வாடகைக்கு விடுவோர் ‘சைவம் புழங்குவோருக்கு மட்டும்’ என்று கூறுவதும் மறைமுகமாக தீண்டாமையைக் கடைபிடிக்கும் செயல்தான் என்பதால் அப்படிச் சொல்லும் வீட்டு உரிமையாளர்கள் மீதும் தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வழிசெய்ய வேண்டும்.
9. டாக்டர் அம்பேத்கர் எழுதிய ஜாதியை ஒழிக்க வழி என்ற நூலை பள்ளி - கல்லூரிகளில் துணைப் பாடமாக (Non - Detailed ) வைக்கவேண்டும். பெரியாரின் குடி அரசு 1925 முதல் 1949 வரை உள்ள தொகுப்பு நூல்களையும், அம்பேத்கரின் 37 தொகுப்பு நூல்களையும் தமிழ்நாட்டின் அனைத்து அரசு நூலகங்களிலும், பள்ளி - கல்லூரிகளிலும் இடம்பெறச் செய்யவேண்டும்.
10. ஜாதி ஒழிப்புக்கு என தனி அமைச்சகம் - தனி துறை உருவாக்கப்பட வேண்டும். தீண்டாமை ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பில் அக்கறை செலுத்தாத மாவட்ட ஆட்சியர்கள் மீது நடவடிக்கை, சாதி மறுப்புத் திருமணங்களுக்குப் பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கி உச்சநீதி மன்றம் 19. 04. 2011 அன்று லதாசிங் எதிர் உ.பி அரசு, ஆறுமுக சேர்வை எதிர் தமிழ்நாடு அரசு ஆகிய வழக்குகளில் அறிவித்த ஆணைகளின் அடிப்படையிலும், அந்த ஆணைகளின் நோக்கங்களைச் செயல்படுத்தும் வகையிலும், முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டதாக ஜாதி ஒழிப்புத் துறை உருவாக்கப்படவேண்டும். அத்துறைக்குப் போதுமான நிதிஒதுக்கீடு அளித்து, அறிவொளி இயக்கம், தடுப்பு ஊசிகள், பொதுசுகாதாரம் போன்றவற்றிற்கு மேற்கொள்ளப்படும் பரந்துபட்ட பிரச்சாரங்கள் போன்று தெருத்தெருவாக, கிராமம் கிராமமாக சாதிக்கு எதிராகவும், தீண்டாமை வன்கொடுமைகளுக்கு எதிராகவும், பாகுபாடுகளுக்கு எதிராகவும் பரந்துபட்ட தொடர் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். ✦

## போராட்டத்தை விளக்கி பரப்புரை

மனுதர்ம எரிப்புப் போராட்டத்தை விளக்கி தமிழகம் தழுவிய பரப்புரை இயக்கத்தை கழகம் தொடங்குகிறது. இது குறித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி திருப்பூர் கூட்டத்தில் வெளியிட்ட செயல் திட்டம்:

1. இந்து – ஜாதீய வாழ்வியலுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லவும், ஜாதி – தீண்டாமை ஒழிப்புக்காக தமிழ்நாடு அரசும் மக்களும் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்த திருப்பூர் தீர்மானங்களை விளக்கும் வண்ணமும், மனுஸ்மிருதி எரிப்புப் போராட்டம் ஏன்? எதற்கு? என விளக்கவும் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக முழுமையான பரப்புரைகளை நடத்த உள்ளோம். இந்தப் பரப்புரைகளில் இன்றும் மனு தர்மம் எந்தெந்த வழிகளில் உயிர்ப்புடன் உள்ளது என்பவைகளை எளிதாக விளக்கும் வகையில் புகைப்படங்கள் நிறைந்த சாதி ஒழிப்புக் கண்காட்சியும் இடம்பெறும்.
2. முதற்கட்டமாக சேலம் கிழக்கு, தஞ்சை, திருவாருர், நாகை ஆகிய மாவட்டங்களில் கிராமப் பிரச்சாரப் பயணங்கள் நடக்க உள்ளன.

   ஒரு குழு மே மாதம் 14 ஆம் நாள் சேலம் மாநகரத் தில் தொடங்கி, மே 26 அம் நாள் ஓமலூரில் பிரச்சாரப் பயணத்தை நிறைவு செய்ய உள்ளது.

   மற்றொரு குழு நாகை மாவட்டம் மணல் மேட்டில் மே மாதம் 21 ஆம் நாள் தொடங்கி, மே மாதம் 30 ஆம் நாள் திருவாருர் மாவட்டம் மன்னார்குடியில் நிறைவு செய்ய உள்ளது.

   அந்த மாவட்டங்களைத் தொடர்ந்து மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கிராமப் பிரச்சாரப் பயணங்கள் நடைபெற உள்ளன.
3. மேலும், நவம்பர் 26 ஆம் நாள் வரை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் அனைத்துப் பொதுக் கூட்டங்களிலும் ஜாதீய வாழ்வியல் எதிர்ப்பும், மனு சாஸ்த்திர எரிப்புப் போராட்ட விளக்கமுமே தலைப்புகளாக இருக்கும்.

# மக்கள் கவனத்தை ஈர்த்த ஊர்தி - பயணக் காட்சிகள்



**பெரியாரின் அனைத்து சாதியினர் அர்ச்சகராகும் போராட்டத்தின் விளைவால் அரசின் அர்ச்சகர் பயிற்சி பெற்றும் அர்ச்சனை உரிமை மறுக்கப்பட்ட தமிழர்கள்**



அர்ச்சகர் பயிற்சி சான்றிதழ்




பெரியாருக்கு மரியாதை செய்யும் அர்ச்சகர் தமிழர்கள்


**எதிர்க்கும் பார்ப்பன வர்க்கம்**



**உணவகங்களில் ஜாதி**




**உணவில் ஜாதி**



**இசையில் ஜாதி**



**நடனத்தில் ஜாதி**






**ஆலயக் கட்டுமுறையில் ஜாதி**



**சுடுகாட்டில்ஜாதி**



ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு பரப்புரைப் பயணத்தில் தோழர்கள் பயணித்த ஊர்தியில் சாதிய வேறுபாடுகளை சித்தரிக்கும் புகைப்படங்கள் கண்காட்சி போல் அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் மக்கள் இதைப் பார்த்து சிந்தித்தனர். ஊர்தியில் இடம் பெற்ற படங்கள்:

**கல்வியில் ஜாதி**






# உண்டியலில் மக்கள் தந்த நிதி

**பயணத்தில் நன்கொடை வழங்கியவர்கள்:**

| | | |
|---|---|---|
| புதுவை பேராசிரியர் இராம கிருஷ்ணன் | - | ரூ.2500 |
| போடி சரவணன் | - | 500 |
| ஆத்தூர் பாலகிருஷ்ணன் (முன்னாள் ராணுவத்தினர்) | - | 250 |
| ஆத்தூர் பாரூக் | - | 100 |
| திண்டுக்கல் நகரத் தலைவர் சுப்ரமணி | | -500 |
| திருச்சி மாவட்ட கழகம் | - | 1500 |
| அரியலூர் பெருநர்கிள்ளி, தி.மு.க. | - | 500 |
| நாமக்கல் மாவட்டகழகம் | - | 1000 |
| கரூர் மாவட்ட கழகம் | - | 1500 |
| பெருந்துறை ஒன்றிய கழகம் | - | 1500 |
| கெம்பநாய்க்கம்பாளையம் மூர்த்தி | - | 500 |
| ஈரோடு மாவட்ட கழகம் | - | 3500 |
| அன்னூர் ஒன்றிய கழகம் | - | 1000 |
| பொள்ளாச்சி விடுதலை சிறுத்தைகள் | - | 200 |
| உடுமலை மலர் இனியன் | - | 1000 |
| சித்தம்பலம் கருப்புசாமி (பல்லடம்) | - | 1000 |
| கீற்று இரமேஷ் | - | 2000 |
| உண்டியல் மூலமாக வசூல் செய்த தொகை | - | 26,911 |

**இரவு தங்கிய இடங்களும், ஏற்பாடு செய்தவர்களும்:**

மதுரை சின்ன உடைப்பு - வழக்கறிஞர் பெரியசாமி (கழக மாவட்டத் தலைவர்); திருப்பரங்குன்றம் - செந்தில் (நாம் தமிழர் கட்சி); பெரிய குளம் - தேனி மாவட்டக் கழகம்; திண்டுக்கல் - கருந்திணை இல்லம்; திருச்சி - தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை; அரியலூர் - வழக்கறிஞர் பகுத்தறிவாளன், மாவட்ட தலைவர்; பெரம்பலூர் - துரை.தாமோதரன், மாவட்டத் தலைவர்; சின்ன தாராபுரம் - சண்முகம். கருக்கம்பாளையம் - கைலாசம் (கழக ஆதரவாளர்); பவானி - பவானி ஒன்றிய கழகம்; கோபி - ஜெயராமன்; கருமத்தம்பட்டி - பொன்னுசாமி, ம.தி.மு.க.; சூலூர் - சூலூர் ஒன்றிய கழகம்; பல்லடம் - பல்லடம் ஒன்றிய கழகம்.

**உணவு வழங்கிய தோழர்கள்:**

தேனி மாவட்ட கழகம் சார்பாக மூன்று வேளை உணவு, பெரம்பலூர் மாவட்ட கழகம் சார்பாக மூன்று வேளை உணவு; அரசலூர் சிவா மூன்று வேளை உணவு வழங்கினார். மதுரை மாவட்ட கழகம், சின்னதாராபுரம் ஒன்றிய கழகம், பல்லடம் ஒன்றிய கழகம், திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி ஆகியோர் தலா இரண்டு வேளை உணவு வழங்கினர். திருப்பரங்குன்றம் செந்தில் (நாம் தமிழர்), திண்டுக்கல் ஆத்தூர் வின்சென்ட், திண்டுக்கல் மாவட்ட தலைவர் துரை. சம்பத், மாவட்ட செயலாளர் இரவணா, தஞ்சை மணிவண்ணன், திருச்சி காட்டூர் ஆரோக்கியசாமி, திருச்சி மாவட்ட செயலாளர் குமார், இலால்குடி முத்துச்செழியன் மற்றும் பூவாளூர் செகந்நாதன், அரியலூர் பகுத்தறிவாளன், அரியலூர் வழக்கறிஞர் சசிக்குமார், அரியலூர் திருவிழி (விடுதலை சிறுத்தைகள்), கொடுமுடி ஒன்றிய கழகம், ஈரோடு சசி, கழக ஆதரவாளர் கைலாசம், திருச்செங்கோடு ஒன்றிய கழகம், ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திக சோதி, குமாரபாளையம் சாக்கிய அருந்ததியர் சங்கம், பெருந்துறை ஒன்றிய கழகம், கோபி ஒன்றிய கழகம், கோபி நாகப்பன், சக்தி ஒன்றிய கழகம், கண்ணம்பாளையம் கழகத் தோழர்கள், தி.மு.க. பேச்சாளர் தமிழ்ப்பித்தன், செந்தில் ம.தி.மு.க. ஆகியோர் ஒவ்வொரு வேளை உணவு வழங்கினர்.

## காற்றில் பறக்கும் ஒப்பந்தம்

மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி அருகே உள்ளது வில்லூர். வில்லூரில் வாழும் தலித் மக்கள், ஆதிக்கசாதியினர் வாழும் வீதிகளில் சைக்கிளில் போக முடியாது. 2011 ஆம் ஆண்டு மே முதல் தேதி தலித் இளைஞர் ஒருவர், பொது வீதியில் சைக்கிள் ஓட்டிச் சென்றார் என்பதற்காக சாதிவெறியர்களால் தாக்கப்பட்டார். இது கலவரமாக மாறி, காவல் துறை தலையிட்டது. சென்னை உயர்நீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. இந்த நிலையில் மாவட்ட காவல்துறை அதிகாரி தலித் பிரதிநிதிகளையும், ஆதிக்கசாதி பிரதிநிதிகளையும் அழைத்து சமரசப் பேச்சு நடத்தினார். கடந்த ஏப். 24 ஆம் தேதி இரு பிரிவினருக்கிடையே உடன்பாடு கையெழுத்தானது. இதன்படி இரு தரப்பும் சமாதானமாக நட்புறவுடன் பழகி வருகிறார்கள் என்று காவல்துறை கூறிக் கொண்டாலும், உண்மை நிலவரம் அப்படி அல்ல என்று நேரில் பார்வையிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தியாளர் கூறுகிறார். 'உடன்பாடு காகிதத்தில் தான் இருக்கிறது, மீண்டும் தலித் மக்கள் பொது வீதிகளில் சைக்கிள் ஓட்ட அனுமதிக்கப்படுவது இல்லை' என்று அந்நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ஏப்.27) வில்லூர் தலித் குடியிருப்பில் வாழும் ஒரு இளைஞர், சைக்கிள்களில் குடிநீர்ப் பானைகளைக் கட்டிக்கொண்டு, சைக்கிளில் ஏறிப் போக முடியாமல் தள்ளிக் கொண்டு போகும் காட்சியை படமாக, அந்நாளேடு வெளியிட்டுள்ளது. உயர்நீதிமன்ற ஆணையானாலும், காவல்துறை ஆணையிட்டு உருவாக்கிய சமரச உடன்பாடானாலும் எதையும் மதிக்க சாதி ஆதிக்கவாதிகள் தயாராக இல்லை. பார்ப்பனீயம் அவ்வளவு ஊறிப்போய் கிடக்கிறது. தொடர்ச்சியாக சாதி தீண்டாமைக்கு எதிரான தீவிர இயக்கங்களும் போராட்டங்களும் தேவைப்படுவதையே இவை உணர்த்துகின்றன.



# எதிர்ப்பு; மவுனம்; வரவேற்புக்கிடையே நடந்த பயணம்



மேலவளவு முருகேசன் நினைவிடத்தில்





செகுடந்தாளி முருகேசன் நினைவிடத்தில்



# வரலாற்றை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

# வாழ்நாள் முழுதும் இனத்துரோகம் செய்தவர் ம.பொ.சி.

***கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை-தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து:***

பெரியார் விநாயகர் சிலை உடைப்புப் போராட்டம் நடத்தியபோது தி.மு.க.வினர் சொன்னார்கள்... "நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம், பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம்" என்று. தேர்தலுக்கு போனவுடன் இப்படி கொஞ்சம் கொஞ்சமாக கொள்கையில் வழுவ ஆரம்பித்து, சன் டி.வி.யில் இராமாயணம் போட ஆரம்பித்து விட்டார்கள். இராமாயண எதிர்ப்பு என்பது அந்த கதையை எதிர்ப்பதாக பொருள் அல்ல. அதை வைத்துக் கொண்டு தமிழர்கள் மத்தியில் பார்ப்பனியத்தை புகுத்தும் ஏற்பாடு என்பதால் தான் எதிர்க்கப் படுகிறது.

1938 இல் பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தியபோது சொன்னார்... "இந்தி எதிர்ப்பு போராட்டம் என்பது மொழிப் போராட்டம் அல்ல. பண்பாட்டு போராட்டம். தமிழர்களின் கலை, இலக்கியம், பண்பாடு, சமய, இயல் ஆகியவற்றில் மனுதர்மத்தை புகுத்தும் சூழ்ச்சியை எதிர்க்கும் போராட்டம் இது" என்று சொன்னார். ஆங்கிலம் வந்தபோது அறிவியலும் சேர்ந்து வந்தது. ஆனால் சமஸ்கிருதம் வந்தபோது அடிமைத்தனமும் சேர்ந்து வந்தது என்று சொன்ன பெரியார், இந்தியை சமஸ்கிருதத்தின் ஒரு வடிவமாகப் பார்த்தார். நாங்கள் சமஸ்கிருதத்தை தான் இந்தியாவின் ஆட்சி மொழியாக செய்திருக்க வேண்டும். முதலில் இந்தியை மக்களிடம் அறிமுகப்படுத்தி, பின்னால் சமஸ்கிருதத்தை கொண்டுவரப் போகிறோம் என்று இராஜாஜி சொல்லியிருந்தார். எனவேதான் பெரியார் இந்தியை எதிர்த்தார்.

மொழிப் போராட்டம் என்பது பண்பாட்டுப் போராட்டத்தின் ஒரு வடிவம்தானே தவிர, அதுவே முழு போராட்டம் ஆகிவிடாது என்றும் பெரியார் சொல்லியிருக்கிறார். 1965 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் மொழிப் போராட்டமாக மட்டுமே இருந்தது அதில் பண்பாட்டு தன்மை சிறிதும் இல்லை. அதில் பார்ப்பன எதிர்ப்போ, வடவர் எதிர்ப்போ சிறிதும் இல்லை. சுயமரியாதை திருமணத்தை தமிழர் திருமணம் என்று மாற்றி செய்தார்கள். அதில் பார்ப்பன எதிர்ப்போ, பெண் விடுதலையோ, பகுத்தறிவோ இருக்காது. சமஸ்கிருதத்திற்கு பதிலாக தமிழ் இருக்கும். பெரியார் ஒரு முறை சொன்னார்... "பக்தவச்சலம் கும்பாபிஷேகம் செய்தார், கலைஞர் அதையே குடமுழுக்கு என்ற பெயரில் நடத்துகிறார், இரண்டிற்கும் என்ன வேறுபாடு?" என்று. மொழிவாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டபோது, சித்தூர், பீர்மேடு உள்ளிட்ட பகுதிகள் போய் விட்டது. பெரியார் எல்லைப் போராட்டத்திற்கு வரவில்லை என்று சொல்வார்கள். பெரியாரை அழைத்த போது பெரியார் சொன்னார்- "நான் வருகிறேன். ஆனால், இதோடு போராட்டத்தை நிறுத்தக் கூடாது. இந்தி ஆட்சி மொழி ஆகக் கூடாது. தட்சிணப் பிரதேசம் (தமிழ்நாடு, கர்நாடகம், கேரளமாகிய மூன்று மாநிலங்களையும் ஒன்றாக இணைப்பது) என்பதை எதிர்க்க வேண்டும். இதையும் சேர்த்து போராடுவதாக இருந்தால் உங்களோடு சேர்ந்து வருகிறேன்" என்று. எனவே பெரியார் ம.பொ.சி. யுடன் இணைந்து போராட மறுத்து விட்டார்.

தமிழ் தேசியத்தின் தந்தை என்று சிலரால் தூக்கிப் பிடிக்கப்படும் ம.பொ.சி. தமிழ்நாடு இந்தியாவில் இருந்து பிரிந்து போக வேண்டுமென தாம் ஒரு போதும் சொல்லவில்லை என்றார். இந்தியாவின் ஒற்று மையைக் கருதி இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொன்னார். நான் இந்து என்பதால் வழிபடுவதற்கு சமஸ்கிருதம் இருக்க வேண்டும் என்றார். இவர் தமிழ் வழிபாடும் பேசவில்லை, இந்தி எதிர்ப்பும் பேசவில்லை. தமிழ்நாடு தன்னுரிமை யோடு இருக்க வேண்டும் என்றார். பெரியாரை தூக்கிப் பிடிக்க கூச்சப்படும் (அல்லது) விரும்பாத, இராஜாஜியின் தொண்டர்களான சில தமிழ் தேசியவாதிகள் ம.பொ.சி.யைத் தூக்கிப் பிடித்து கொண்டிருக்கிறார்கள். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடத்தி விளம்பரம் பெற்றார். பெரியார் இந்தி எழுத்துகளை தார் பூசி அழித்தால், மண்ணெண் ணெய் ஊற்றி தாரைத் துடைத்தவர் தான் ம.பொ.சி. இப்படிப்பட்ட ம.பொ.சி., தி.மு.க. வில் எம்.எல்.ஏ. ஆனார். மேலவைத் துணைத் தலைவர் ஆனார். அ.தி.மு.க.விற்குப் போனார். அவசர நிலை (மிசா) காலத்தில் காங்கிரசிற்கும் போனார். ஈழத்தில் தமிழர்களை அழிக்க அமைதிப்படை வந்தபோது ஆதரித்துப் பேசினார். தமிழின துரோகத்தைதான் தன் வாழ்நாள் முழுவதும் செய்தார்.

(தொடரும்)

## 'அக்சய திருதி'யும் 'இந்து' நாளேடும்

'அக்சய திருதி' என்று ஒரு புதுக்கரடி இந்து மதத்தின் பெயரில் பிரபலமாக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, நகை வர்த்தகம் செய்யும் வணிக நிறுவனங்களும், ஊடகங்களும் இதை ஊதிப் பெருக்கி, பாமர மக்களின் மடமையை சுரண்டி வருகின்றன. அன்றைய நாளில் ஒரு கிராம் நகையாவது வாங்கினால், ஆண்டு முழுதும் நகை குடும்பத்தில் குவியுமாம். ஒவ்வொரு ஆண்டும் இப்படி ஒரு பெரும் கூட்டம், கடைகளில் அலைமோதுகிறது. கூட்டத்தில் நகை வாங்க வந்து, நகையை திருட்டுக் கொடுப்போரும் அதிகம். போலி தங்கக் காசுகள் மோசடி வேறு. இவ்வளவு கூத்துகளுக்கிடையில், 'அக்சய திருதியா' என்பது குறித்து 'இந்து' நாளேட்டில் ஒரு சர்ச்சை எழுந்துள்ளது.

ஏப்ரல் 23 ஆம் நாள் 'அக்சய திருதி' அன்று அந்த நாளேட்டின் முதல் பக்கம் முழுதும் ஒரு நகை வணிக நிறுவனம் தந்துள்ள விளம்பரத்தில் 'இந்து' ஏடே தனது வாசகர்களுக்கு இந்தப் 'புனித நாளில்' வாழ்த்துகளைத் தெரிவிப்பதுபோல குறிப்பிடப்பட்டிருந்தது. "இந்த நாளில் தங்கம் வாங்கினால், ஆண்டு முழுதும் உங்களுக்கு வளம் கொழிக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் அனைவருமே பகிர்ந்து கொள்கிறார்கள்" என்ற வாசகம் அதில் இடம் பெற்றிருந்தது. அடுத்த நாள் ஏப்ரல் 24 ஆம் தேதி 'இந்து' நாளேட்டின் முதல் பக்கத்தில் அதன் ஆசிரியர் சித்தார்த்த வரதராசன், இந்த விளம்பரம் பற்றி, ஒரு தன்னிலை விளக்கத்தை அளித்திருந்தார். 'இந்து'வில் வந்த அந்த விளம்பரத்தில் வெளி வந்த கருத்து, 'இந்து' ஆசிரியர் குழுவின் கருத்து அல்ல என்றும், இப்படி ஒரு விளம்பரம் வருவது குறித்து தன்னிடமோ, ஆசிரியர் குழுவிடமோ கலந்து ஆலோசிக்கப்பட வில்லை என்றும் 'இந்து'வின் ஆசிரியர் குழு கொள்கைக்கு எதிராக 'இந்து'வின் பெயரால் வெளியிடும் விளம்பரங்கள் எதிர்காலத்தில் உறுதியாக தவிர்க்கப்படும் என்று ஆசிரியர் விளக்கமளித்துள்ளார்.

'இந்து மதத்தின் - மிக புனிதமான நாள் இது' என்ற வாசகமும், 'அனைவராலும் இது ஏற்கப்படுகிறது' என்ற வாசகமும் 'இந்து' ஆசிரியர் குழுவின் கொள்கை அல்ல என்றும், மிக சமீபகாலமாகத்தான் இந்த 'அக்சயதிருதி' பெரிதுப்படுத்தப்படுகிறது என்றும் 'இந்து' ஏட்டின் ஆசிரியர் குறிப்பு கூறுகிறது. 'இந்து' நாளேட்டின் பல்வேறு கருத்துகளில் நமக்கு முரண்பாடு உண்டு என்றாலும், இப்படி ஒரு தன்னிலை விளக்கம் தர முன் வந்ததைப் பாராட்ட வேண்டும்.

# மதுரை ஆதீனமும் காஞ்சி ஜெயேந்திரனும்

*மதுரை 'குருமகா சன்னிதானமாக' இருந்த அருணகிரி, மதுரை ஆதினத்தின் 293வது மடாதிபதியாக நித்யானந்தாவுக்கு முடிசூட்டி விட்டார். மடாதிபதியாக தனது வாரிசை நியமிக்கும் முழு உரிமை தனக்கு உண்டு என்கிறார் மதுரை ஆதினம். 'சிவபெருமானும் பார்வதியும்' தனது கனவில் வந்து கேட்டுக் கொண்டதற்கேற்ப இந்த முடிவை எடுத்துள்ளதாக மதுரை ஆதினம் அடித்துக் கூறுகிறார். 'தினமலர்' பார்ப்பன நாளேடும், இந்து மக்கள் கட்சி போன்ற இந்து அமைப்புகளும் இதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றன. "சிவபெருமானாவது, கனவில் வருவதாவது; என்ன காதில் பூசுற்றுகிறார்களா? இந்தக் கதை எல்லாம் நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை" என்று இந்து அமைப்புகளே தமிழ்நாட்டில் **பகுத்தறிவுடன்** சிந்திக்கத் தொடங்கி விட்டதாக சந்தேகிக்க வேண்டியிருக்கிறது! இதேபோல் பெரியாரியல்வாதிகள் கேள்வி கேட்டால், பக்தர்கள் உணர்வைப் புண்படுத்துவதாக இதே இந்து அமைப்புகள் போராடக் கிளம்பி விடுவார்கள். 'இந்து' அமைப்புகளுக்கு மட்டும் இப்படி பகுத்தறிவு வந்து விட்டதாக கூறி விட முடியாது. சைவ மடங்களுக்கும்கூட பகுத்தறிவு வரத் தொடங்கி விட்டது. அப்படித்தான் ஆதினத்தின் செயல்பாடுகளும் பறைசாற்றிக் கொண்டிருக் கின்றன!*

*சமூகத்தின் சரிபாதியாக உள்ள பெண்களை புறக்கணித்த திருஞான சம்பந்தன் காட்டிய வழிகளில் இனி சைவத்தைப் பரப்ப முடியாது. ஆண்கள் பெண்களுடன் ஆடிப்பாடி கூடி மகிழ்ந்து, சைவத்தைப் பரப்பினால் தான் உண்டு என்ற '**பகுத்தறிவு**' சிந்தனைக்கு மதுரை ஆதினமும் வந்து விட்டது. அது மட்டுமல்ல, சைவம் தமிழை வளர்த்திருக்கலாம், அது அந்தக் காலம். ஆங்கிலப் புலமை தான் இப்போது அவசியம். எனவே, நன்றாக ஆங்கிலம் பேசக் கூடியவரை சைவ மடாதிபதியாக்க முடிவு செய்து விட்டார் ஆதினம்.*

*இந்து அமைப்புகளுக்கும் மதுரை ஆதினத்துக்கும் இப்போது 'பகுத்தறிவு' உதிர்த்துக் கிளம்பியது போல், ஞானசம்பந்தன் காலத்திலேயே மக்களுக்கு பகுத்தறிவு இல்லாமல் போய் விட்டதுதான் ஒரு குறை. அப்போது பெரியார் இல்லாமல் போய் விட்டாரே! இருந்திருந்தால் 'கனவிலாவது... சிவனாவது வருகிறதாவது...?' என்று இன்று கேட்பதுபோல், அன்றைக்கே ஞானசம்பந்தன் அவிழ்த்துவிட்ட புருடாக்களை கேள்விகளால் துளைத்தெடுத்திருப்பார்கள். இப்போதும்கூட பகுத்தறிவாளர்கள் ஞானசம்பந்தன் திருவிளையாடல்களை கேள்விக்குள்ளாக்கினால் இதே இந்து அமைப்புகளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும். இவர்களுக்கு அந்தக் கால மடமைகள் ஆன்மீகம்; இக்கால மடமைகள் தான் பகுத்தறிவு. ஆக, காலம் 'பகுத்தறிவு யுகம்' என்பதால், தங்கள் 'வாய்ப்பு வசதிகளுக்கு' மட்டும் பகுத்தறிவு தேவை என்று அவர்களே முடிவுக்கு வந்து விட்டார்கள் போல!*

*ஆனால், ஒரு கேள்வி மட்டும் நெருடுகிறது. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திரர் எப்படி மடத் தலைவராக நீடிக்கலாம்? அறநிலையத் துறை பதவியிலிருந்து ஜெயேந்திரனை நீக்கி வெளியிட்ட அறிவிப்பு, அப்படியே அமுக்கப்பட்டது ஏன்? விஜயேந்தரனுக்கு பட்டம் சூட்டிவிட்டதாக அறிவித்துவிட்டு, பிறகு தானே மீண்டும் மடாதிபதியாக ஜெயேந்திரர் ஒட்டிக் கொள்ள சட்டம் எப்படி அனுமதித்தது?*

*- என்ற கேள்விகள் மட்டும் 'தினமலரி'டமோ, இந்து அமைப்புகளிடமோ வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறது. பார்ப்பனர் என்று வந்துவிட்டால் மட்டும் 'பகுத்தறிவு' வேலை செய்ய மறுத்து விடுகிறது போலும். ஆனால், ஜெயேந்திரன் என்னவோ முழுமையான பகுத்தறிவுவாதியாகி விட்டார் என்றே தெரிகிறது. "குற்றங்களுக்கு ஆண்டவனாகப் பார்த்து தண்டனை தந்து விடுவான் என்று மக்களை ஏமாற்ற முடியாது; அதுஅந்தக் காலம். குற்றங்களுக்கு இப்போதே தண்டனையை பெற்றுவிட வேண்டும்" என்று அரசாங்கம் உருவாக்கிய இந்தியத் தண்டனைச் சட்டங்களை ஏற்றுக் கொண்டு, எப்போது வழக்கறிஞர் வைத்து தனக்காக வழக்காடத் தொடங்கினாரோ, அப்போதே அவரும் பகுத்தறிவாளராகிவிட்டார்!*

*ஆனால், 'தினமலரும்', இந்து அமைப்புகளும், சைவ மடத்திடம் பகுத்தறிவு முகம் காட்டிக் கொண்டு பார்ப்பானிடம் மட்டும் பகுத்தறிவை அடகு வைப்பது நியாயம் தானா என்று சிந்திக்க தெரிந்த ஒருவர் கேட்கிறார்! வில்லங்கமான கேள்விதான்!*

**– கோடங்குடி மாரிமுத்து**

### நீலகிரியில் நடந்த மாபெரும் கண்டனக் கூட்டத்தில் கழகத் தலைவர் அறிவிப்பு

# தளி சட்டமன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் ஆட்களின் வன்முறை அடாவடியை எதிர்த்து 'மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு'

கெலமங்கலம் ஒன்றியம், நீலகிரியில் கழகத் தோழர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக் கூட்டம், கிருட்டிணகிரி மாவட்டம் கெலமங்கலத்தில் 28.4.2012 மாலை நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், கழக வழக்கறிஞர் குமார தேவன், மாவட்டத் தலைவர் குமார், தருமபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.



இந்திய பொதுவுடைமைக் கட்சியின் தளி சட்ட மன்ற உறுப்பினர் இராமச்சந்திரன் மற்றும் அவரது ஆட்களால் தொடர்ந்து நடந்தேறி வரும் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டிருந்த பொது மக்கள் பெருமளவில் திரண்டு கண்டன உரைகளை உற்சாகமாக வரவேற்று கையொலி எழுப்பியும் ஆரவாரம் செய்தும் தமது ஆதரவைத் தெரிவித்தனர். 6.4.2012 அன்று நீலகிரிக்கு அருகே கோவில் திருவிழாவில் ஏற்பட்ட தனி நபர்களின் சிறு சச்சரவைச் சாக்காக வைத்து, நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினரின் உறவினரை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளர் சந்திராம்மாவின் கணவர் வெங்கட்ராஜி மற்றும் அவரது மகனும், கழகத் தோழருமான மாருதி, அவரது இரு சகோதரர்களையும் சட்டமன்ற உறுப்பினரின் அண்ணனும் அவரது அடியாட்களும் நான்கைந்து வாகனங்களில் வந்து கடுமையாக தாக்கியுள்ளனர். ஊர்ப் பொது மக்களும், கழகத் தோழர் களும் அந்த வன்முறைக் கும்பலை விரட்டி யடித்துள்ளனர். அதன் பின்னர் தாக்குதலுக்குள்ளானவர் களை ஓசூர் மருத்துவ மனையில் சேர்க்கச் சென்ற போது விடியற்காலை 3 மணியளவில் சட்ட மன்ற உறுப்பினர் இராமச் சந்திரனே நேரில் அடியாட் களுடன் வந்து மீண்டும் தாக்கினர். இதில் மேலும் மூன்று பேருக்கு எலும்பு முறிவும் ஏற்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக தங்கள் வன்முறையால் அந்த வட்டாரத்தையே மிரட்டி வந்த அந்த வன்முறையாளர்களின் செயல்பாடுகளையும், அவர்களுக்கு உடந்தையாக வழக்குகளைத் திரித்து பதிவு செய்திருக்கிற காவல்துறை கருப்பு ஆடுகளின் நடவடிக்கைகளையும் கண்டித்து அனைவரும் உரையாற்றினர்.

மேலும் கழகத் தலைவர் தமது உரையின் இறுதியில், பாதிக்கப்பட்ட அனைத்து அமைப்பு மற்றும் கட்சிகளும் சேர்ந்து, "மக்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு" ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தபோது, மக்கள் கூட்டம் வரவேற்று கையொலி எழுப்பியது, உணர்ச்சிகரமாக இருந்தது.

மிரட்டலுக்கு பயந்து கிடந்த மக்கள், அச்சத்தை உதறிவிட்டு, 1500-க்கும் அதிகமானோர் சட்டமன்ற உறுப்பினருக்கு எதிராக திரண்டது, அப்பகுதியில் பலராலும் வியந்து பேசப்படுகிறது.

**– நமது செய்தியாளர்**

## அத்தாணியில் பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டம்

அந்தியூர் ஒன்றிய பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக தந்தை பெரியாரின் 133-வது பிறந்த நாள் விழா, கீழ்வானி இந்திராநகர் கிளையின் பெயர் பலகை திறப்பு விழா, கழகத்தின் புதிய நூல் வெளியீட்டு விழா பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டம் ஆகியவை 8.3.2012 அன்று நடைபெற்றது. விழாவிற்கு பகுத்தறிவாளர் பேரவைத் தோழர் ஜீ.மா. சுந்தரம் தலைமையேற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கீழ்வானி இந்திரா நகரில் கழகத்தின் பெயர்ப் பலகையை திறந்து வைத்து கொடியேற்றினார். சுந்தரம் இல்லத்தில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டு, அனைவரும் ஊர்வலமாக அத்தாணி பொதுக் கூட்ட திடலுக்கு வந்தடைந்தனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த கொடிக் கம்பத்தில் தலைவர் கழகக் கொடியினை ஏற்றி வைக்க, பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்கின.



வீரன் வரவேற்புரையாற்ற, மடத்துகுளம் மோகன், 'மந்திரமல்ல தந்திரமே!' நிகழ்ச்சி நடத்தினார். பொள்ளாச்சி விஜய ராகவன் கழக வெளியீடுகளை அறிமுகம் செய்தார். மாவட்ட கழகத் தலைவர் நாத்திக சோதி, தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் இரத்தினசாமி, மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். கழகத்தின் புதிய வெளியீடான "இராவண லீலா-தமிழ்நாட்டின் தேசிய விழா" என்ற மணியம்மையார் நூலை கழகத் தலைவர் வெளியிட, மாவட்ட ம.தி.மு.க. துணை செயலர் இராமன் பெற்றுக் கொண்டார். "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற ஈ.வெ.ரா. மணியம்மையார் எழுதிய நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, பகுத்தறிவாளர் பேரவை மோகன்ராசு பெற்றுக் கொண்டார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். வீரக்குமார் நன்றி கூறினார்.

கோவில் திருவிழா கூட்டங்களையும், மக்களை முட்டாளாக்கும் அரசியல் கூட்டங்களையும் கண்ட அத்தாணி மக்களுக்கு, இக்கூட்டம் புதியதாக இருந்ததால் அதிக அளவில் திரண்டிருந்தனர். கழக வெளியீடுகள் ரூ.2500-க்கு விற்பனை ஆனது.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இ.ம.சுந்தரம், வீரக்குமார், அர்சுணன், நடராஜ், கார்த்தி, யுவராஜ், சேகர், தேவராஜ், சென்னையப்பன், செல்வராசு, மாரிமுத்து, குமரி, கனகு, ரமேசு மற்றும் பகுத்தறிவாளர் பேரவை, பெரியார் தி.க. தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

கூட்டத்தில் தலைவரிடம், மாவட்ட கழகம் சார்பாக 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கான 127 சந்தா தொகையும், வளர்ச்சி நிதியாக ரூ.1000-த்தையும் சுந்தரம் வழங்கினார்.

### நன்கொடை

அன்னூர் ஒன்றிய கழக பொறுப்பாளர் ஜோதிராம் தமது மகனின் பிறந்த நாள் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.500 பயணக் குழுவிடம் வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## நெல்லை இந்து கல்லூரியில் விடுதலை இராசேந்திரன் உரை

திருநெல்வேலி இந்து கல்லூரியில் மதுரை பல்கலை ஆசிரியர் சங்கம் நடத்திய சமூகநீதி கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 16.4.2012 பகல் 12 மணியளவில் சிறப்புரையாற்றினார். 'சமூக நீதியும் கல்வியும்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில், சமூக நீதிப் போராட்ட வரலாறு, சமூக நீதிக் கொள்கைகள் தற்போது உலகமயமாக்கல் சூழலில் சந்திக்கும் நெருக்கடிகளை விளக்கினார். எழுத்தாளரும், மார்க்சிய சிந்தனையாளருமான அருணன், இஸ்லாமியர்கள், பெண்களுக்கு மறுக்கப்படும் சமூக நீதிகளை விளக்கியும், இந்துத்துவ மதவாத சக்திகளின் பிற்போக்கு கருத்தியலால் சமூகம் சந்திக்கும் நெருக்கடிகளை யும் விளக்கினார். பேராசிரியர் முனைவர் செல்லப்பா தலைமை தாங்கினார். சங்கத்தின் தலைவர் பேராசிரியர் முனைவர் நீலகண்டன் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கை கல்லூரி முதல்வர் தொடங்கி வைத்தார். கல்லூரி பேராசிரியர்கள், பேராசிரியைகள் பெருமளவில் பங்கேற்றனர்.


ஏப்ரல் 15 ஆம் தேதி அன்று நெல்லையில் மாலை 7 மணி அளவில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் மன்றத்தின் சார்பில் அம்சா அரங்கில் நிகழ்ந்த அம்பேத்கர் பிறந்த நாள் கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் அமலநாதன், பேராசிரியர் முனைவர் செல்லப்பா தலைமைக் கழக பேச்சாளர் பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். பேராசிரியர்களும், மாணவர்களும் திரண்டிருந்தனர். பார்வையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பதிலளித் தார். 9 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th May 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே 10, 2012 | புரட்சி 11 | முழக்கம் 17 | விலை: ரூ.2.50


## பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தி சட்டத் திருத்தம் வருகிறது

தாழ்த்தப்பட்டோர் பழங்குடிப் பிரிவினருக்கு அரசுப் பதவிகளில் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கிடும் மாயாவதி ஆட்சியின் ஆணையை உ.பி. உயர்நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. இந்த பதவி உயர்வை உறுதி செய்யும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று மாநிலங்களவையில் அனைத்துக் கட்சியினரும் வலியுறுத்தியுள்ளனர். வகுப்புவாரி பிரதிநிதித்துவ கொள்கையை காங்கிரஸ் ஏற்க மறுத்தபோது 1925 இல் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறினார். பெரியார் அன்று வலியுறுத்திய கொள்கையையே இன்று காங்கிரசாரும் பேசுகிறார்கள் என்பதே பெரியார் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி. நாடாளு மன்றத் துறை இணை அமைச்சர் வி.நாராயணசாமி பதிலளிக்கையில், இடஒதுக்கீட்டின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி, புதிய மசோதா ஒன்றைக் கொண்டு வரும் முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது என்றும், இது தொடர்பாக விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

இத்தகைய இடஒதுக்கீடுகளின் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் ஏற்கனவே பல மாநில அரசுகள் இது தொடர்பாக கொண்டு வந்த பல சட்டத் திருத்தங்களை நீதிமன்றங்கள் ரத்து செய்து விட்டன என்றார். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான நிரப்பப்படாத இடஒதுக்கீட்டுக்கான இடங்களை நிரப்புவதற்கான தீவிர முயற்சிகள் 2008 இல் தொடங்கப்பட்டது. ஆனால் 75 சதவீத இடங்களை மட்டுமே நிரப்ப முடிந்தது என்றார் அமைச்சர். பகுஜன் சமாஜ் கட்சி, இந்த பதிலில் திருப்தியடையாமல் வெளிநடப்பு செய்தது. பா.ஜ.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் இடஒதுக்கீடு பிரச்சினையில் முடிவுகளை ஏற்காமல், அரசு காலம் தாழ்த்தி வருவதாகக் குற்றம்சாட்டினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி. இராஜா, தனியார் துறையில் இடஒதுக்கீட்டை வலியுறுத்தினார். விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய சட்டத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், பிற்படுத்தப்பட்டோருக்கு மக்கள் தொகை அடிப்படையில் வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இடஒக்கீடு 50 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது என்ற நீதிமன்றத் தீர்ப்பு, அரசின் கைகளை கட்டிப் போட்டுள்ளது என்றார்.

இந்தக் கூட்டத் தொடரிலேயே ‘தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் பதவி உயர்வில் இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும்’ என்று சந்திர மிஸ்ரா (பகுஜன் சமாஜ்) வற்புறுத்தினார். காங்கிரஸ் உறுப்பினர் பல்சந்த் முங்கேக்கர் இடஒதுக்கீட்டுக் கொள்கையை அழுத்தமாக ஆதரித்துப் பேசினார். **“இந்திய அரசுத் துறைச் செயலாளர்களில் தாழ்த்தப்பட்ட பழங்குடிப் பிரிவைச் சார்ந்த ஒருவர்கூட இல்லை. இயக்குனர் மட்டத்தில் மட்டும் குறைவான அதிகாரிகள் மட்டுமே உள்ளனர்”** என்ற உண்மையையும் அவர் சுட்டிக் காட்டினார். ‘பதவி உயர்வுகளை தீர்மானிக்கும் குழுவில் தாழ்த்தப்பட்ட பழங்குடிப் பிரிவினருக்கு இடமளிக்கப்பட வேண்டும்’ என்றார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டி.கே.ரெங்கராஜன். ‘உ.பி. உயர்நீதிமன்றத் தீர்ப்பை நிராகரிக்கும் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்’ என்று பா.ஜ.க. உறுப்பினர் தவர்சந்த் கெலோட் வலியுறுத்தினார். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பா.ஜ.க., பகுஜன் சமாஜ் என்று கட்சி வேறுபாடின்றி பெரியார் போராடிய இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு ஆதரவான குரல் மாநிலங்களவையில் ஒலித்தது, குறிப்பிடத்தக்கது.

## ‘மனுதர்ம’த்தின் அதிகாரம்: ஆய்வாளர் ரொமிலா தாப்பர் கேள்வி

இராமாயணத்தையோ மதநூல்களையோ சமூகப் பார்வையில் ஆய்வு செய்து ஏதேனும் நூல் வந்தால், உடனே அதைத் தடை செய்ய பார்ப்பனர்களும் இந்துத்துவா அமைப்புகளும் மத அமைப்புகளும் கூக்குரலிடுகின்றன. ஆனால், ‘பிராமணனை’ உயர்வுபடுத்தி ‘சூத்திரனை’ பார்ப்பனரின் வைப்பாட்டி மகன் என்று இழிவுபடுத்தும் ‘மனுதர்மம்’ தடைபோடப்படவில்லை. ‘மனுதர்மத்தின்’ புதிய பதிப்புகள் இப்போதும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பார்ப்பன ஏடுகள் அதற்கு மதிப்புரை எழுதி பாராட்டுகின்றன.

எந்த ஒரு நூலுக்கும் தடை கோரும்போது கண்மூடித்தனமாக ஊடகங்கள் அதற்கு ஆதரவாக கருத்துகளை உருவாக்குவது சரிதானா? என்ற கேள்வியை மிகச் சிறந்த வரலாற்று ஆய்வாளர் ரொமிலா தாப்பர் எழுப்பியுள்ளார். “இந்த நூல் எங்கள் மதத்தினரின் உணர்வுகளை ஒட்டு மொத்தமாகப் புண்படுத்துகிறது என்று எதிர்ப்பு வந்தால், ஊடகங்கள் அப்படிப் புண்படுத்துவது என்று கூறப்படுவது உண்மையா என்பதை ஆய்வு செய்ய வேண்டாமா? எதிர்ப்பு தெரிவிக்கும் மத அமைப்பு எது? அந்த மதத்தில் குறிப்பிட்ட எந்தப் பிரிவினரின் உணர்வு பாதிக்கப்பட்டுள்ளது? இது குறித்து ஆராய்வது கிடையாது. ஒவ்வொரு மதத்திலும் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. ஒரு பிரிவினர் இத்தகைய நூல்களை மற்றொரு பிரிவினரைத் தாக்குவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தும் வாய்ப்புகளே அதகம் இருக்கின்றன” என்று ரொமிலா தாப்பர் கூறியுள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு பயிற்சியளிக்கும் பத்திரிகை பயிற்றிக்கான ‘ஆசிய கல்லூரி’ அறக்கட்டளை சொற்பொழிவுக்காக ரொமிலா தாப்பர் ஆற்றிய உரையின் பதிவு, கடந்த மே 3 ஆம் தேதி மாணவர்களுக்கு ஒளிபரப்பப்பட்டது. ‘இந்து’ நாளேடு (மே 4) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. அந்த உரையில் “கடந்த கால இந்திய வரலாற்றை எழுதுவது என்பதும் சவாலாக உள்ளது. காரணம், கடந்த கால வரலாற்றை எழுதிய ஆசிரியர்களின் கண்ணோட்டத்தையும் நோக்கத்தையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கிறது” என்றார் ரொமிலா தாப்பர். “வரலாற்று காரணங்கள் ஏதுமின்றி ஒரு நூலை தடை செய்ய வேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது? சல்மான் ருஷ்டி எழுதிய சாத்தானின் வேதம் நூலில் என்ன வரலாற்றுப் பிழை வந்து விட்டது? சிவாஜியின் பிறப்பு பற்றி தனது நூலில் மறைமுகமாகக் குறிப்பிட்ட ஜேம்ஸ் லேய்ன் நூலுக்கு ஏன் தடைபோட வேண்டும்? பல்வேறு இராமாயணங்கள் இருப்பதை எடுத்துக்காட்டிய பேராசிரியர் இராமானுஜம் எழுதிய நூலை ஏன் டில்லி பல்கலைக்கழகம் பாடத்திலிருந்து நீக்க வேண்டும்?” அரவிந்தர் பற்றி சில கருத்துகளை தனது நூலில் எழுதியதற்காக எழுத்தாளர் பீட்டர் ஹீஸ்

(4 ஆம் பக்கம்)

## காடுவெட்டி குருவின் பேச்சு: மருத்துவர் ராமதாசு ஏற்கிறாரா?

மாமல்லபுரத்தில் வன்னியர் சங்கம் நடத்திய சித்திரைப் பவுர்ணமி நாள் விழாவில் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி குரு, பா.ம.க. நிறுவனர் மருத்துவர் ராமதாசு முன்னிலையில், “வன்னிய சாதிப் பெண்களை எவராது கலப்பு திருமணம் செய்தா தொலைச்சுப்புடுவேன்” என்று மிரட்டியுள்ளார்.

ஒரு பாதிக்கப்பட்ட சமூகம் தனக்கான உரிமைகளைக் கோரும்போது இப்படி சாதி வெறி பேசுவது மிக மோசமான பார்ப்பனியத்தை உறுதிப்படுத்தும் பேச்சாகும். மக்கள் தொலைக் காட்சி ஒளிபரப்பிய அந்த நேரடி நிகழ்ச்சியில் குருவின் பேச்சை பலரும் கேட்டார்கள். ‘ஜூனியர் விகடன்’ பத்திரிகையும் (மே 13) இவ்வாறு வெளியிட்டுள்ளது:

“நம் இனத்துப் பெண்களைப் பலாத்காரம் செஞ்சு கலப்புத் திருமணம் செய்றாங்க. நாம எச்சரிக்கையா இருக்கணும். நம்ம சாதியில்தான் நாம கல்யாணம் செய்யணும். எவன்டா சாதிய ஒழிச்சான்? நான் வன்னியர் சங்கத் தலைவர் சொல்றேன். யாராவது எங்க பொண்ணுங்களுக்கு கலப்புத் திருமணம் செஞ்சு வைச்சா... தொலைச்சுப் புடுவேன்” என்று மிரட்டியுள்ளார்.”

காடுவெட்டி குருவின் பேச்சு, மருத்துவர் ராமதாசுக்கு உடன்பாடுதானா என்று கேட்க விரும்புகிறோம். இதுதான் மருத்துவர் பேசிவரும் தமிழினத்துக்கான அடையாளமா?

இப்படிப்பட்ட சாதிவெறிக் குரல்கள் தமிழகத்தில் தலைதூக்குவது சமூகத்தை எங்கே கொண்டுபோய் சேர்க்கும்?

இதேபோல் சில மாதங்களுக்கு முன்பு பழ. கருப்பையா என்ற அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தினர் அதே சாதியில் தான் திருமணம் செய்ய வேண்டும். அந்த சாதிக்கென்று சில தனித்த பண்புகள் உண்டு. அதைக் காப்பாற்ற வேண்டும் என்று பேசினார்.

ஒவ்வொரு சாதியும் அந்த சாதியின் தர்மத்தைக் கட்டிக் காப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்தால் இந்த சமூகத்தினர் மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் வந்திருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறோம்.

மருத்துவர் ராமதாசு, பழ கருப்பையா போன்றவர்கள் திராவிட இயக்கம் தான் நாட்டைக் கெடுத்தது என்று பேசி வருகிறார்கள். திராவிட எதிர்ப்பு என்பது, சாதி, சாதிச் சடங்கு, சாதி தர்மப் பாதுகாப்பில்தான் அடங்கியிருக்கிறதா?

திராவிடர் இயக்கம் எதிர்த்துப் போராடிய சாதி பார்ப்பனிய இழிவுகளை மீண்டும் கொண்டுவரத் துடிக்கிறார்களா?

இவை நவீன ‘மனுதர்மக்குரல்’ தான். மனுதர்ம சிந்தனைகளுக்கு எதிராக மனுதர்ம நூலின் பரப்புரைக்கு தடை போடக் கூறி அதற்குத் தீயிடும் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

அப்போராட்டத்தின் நியாயங்களையும் அவசியத்தையும், காடுவெட்டி குரு, பழ. கருப்பையாவின் பேச்சுகள் உறுதிப்படுத்துகின்றன. ‘தமிழினப் போராளி’யாக போற்றப்படும் மருத்துவர் ராமதாசு இத்தகைய கருத்துகளை ஆதரிக்கிறாரா? எதிர்க்கிறாரா?

மருத்துவர் ராமதாஸ் அவர்கள் இது குறித்து தனது கருத்தை விளக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

# ‘மனுதர்ம’ப் பிடிக்குள் 1,18,674 தோழர்கள்

‘மனுதர்மம்’ - ‘பிராமணர்களுக்கு’ உரிய தொழிலாக, ‘வேதம் கற்றல், வேதம் கற்பித்தல், யாகம் நடத்துதல், யாகம் நடத்த உதவுதல் பணக்காரர்களாக இருந்தால் பிச்சை கொடுத்தல், ஏழையாக இருந்தால் பிச்சை எடுத்தல்’ என்று கூறுகிறது. (அத் 1 - ஸ்லோகம் 88)

ஷத்திரியனுக்கு ‘மக்களைக் காத்தல், பிச்சைப் போடுதல், வேள்வி செய்வது, வேதம் கற்பது, புலன் இன்பத்தில் பற்றுக் கொள்ளாது இருத்தல்’ என்று கூறுகிறது. (அத் 1, ஸ்லோகம் 89)

‘ஆடு மாடு மேய்த்தல், கொடையளித்தல், யாகம் செய்தல், வாணிபம் செய்தல், வட்டிக்கு கடன் தருதல், நிலத்தைப் பயிர் செய்தல்’ ஆகியவை வைசியனுக்குரிய தொழிலாகக் கூறுகிறது. (அத் 1 - ஸ்லோகம் 90)

‘சூத்திரனு’க்கு உரிய தொழிலாக ‘மனுதர்மம்’ கூறுவது .....?

“மேலாண்மை படைத்த இறைவன் சூத்திரருக்கு விதித்துள்ள ஒரே கடமை, மேல் வர்ணத்தாருக்கு, அவர் தம் மதிப்பு மரியாதை குன்றாமல் உழைத்தல்”. (அத் 1. ஸ்லோகம் 91)

‘பிராமணன்’, ‘சத்திரியன், வைசியனுக்கு மனு விதித்த தொழில்களை எல்லாம் மீறி விட்டார்கள். ‘சூத்திரர்களுக்கு’ விதிக்கப்பட்ட பல தொழில்களும் மீறப்பட்டு விட்டன. ஆனாலும், இன்னும் சூத்திரர்களுக்கும் கீழான அவர்ணஸ்தர்களாக்கப்பட்ட பஞ்சமர்கள் மீது திணிக்கப்பட்ட சில இழி தொழில்கள் அப்படியே மாறாமல் தொடருகிறது. அதில் ஒன்றுதான் மனித மலத்தை மனிதரே எடுக்கும் இழிவு, ஒரு குறிப்பிட்ட தீண்டப்படாத சாதியின் தொழிலாகவே இது இன்றும் நீடிக்கிறது என்றால் ‘மனுதர்மம்’ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதுதானே அதன் அர்த்தம்?

எதிர்வரும் மழைக்கால நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மசோதா ஒன்று வரப் போகிறாராம்! மனித மலத்தை மனிதனே எடுக்கும் இழிதொழிலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் மற்றொரு சட்டம் இது. இதுகூட அரசு ஏதோ, இந்த இழிவை ஒழிக்க வேண்டும் என்ற கவலையில் கொண்டு வந்துவிடவில்லை. 1993 ஆம் ஆண்டு மனிதக் கழிவை மனிதன் எடுப்பதற்கும், உலர் கழிப்பறைக்கும் தடை போடும் சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. ‘மனுதர்ம’ ஆட்சியில் மனுதர்ம ஒழிப்புக்கு ஒரு சட்டம் வந்தால், அதை எப்படி, உளப்பூர்வமாக நிறைவேற்றுவார்கள்? இப்படி ஒரு சட்டம் வந்த பிறகும், பல மாநிலங்களில் ஆயிரக்கணக்கான தோழர்கள் மலம் அள்ளும் இழி தொழிலிலிருந்து விடுவிக்கப்படவே இல்லை. கடந்த ஆண்டு இந்த மக்களுக்கு மறு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்துக்காக அரசு ஒரு புள்ளி விவரம் எடுத்தது. அதன்படி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களின் கிராமங்களில் 1,18,474 பேர் இன்னும் கைகளால் மலம் எடுத்து வருவதாக அரசு அறிவித்தது. அடிப்படை சுகாதார வசதிகள் நிறைவேற்றப்படாத கிராமங்களில் இன்னும் உலர் கழிப்பறைகள் ஒழிக்கப்படவில்லை. கிராம பஞ்சாயத்துகள் சாக்கடைகளை சுத்தம் செய்வதற்கும், சாக்கடைக் குழிக்குள் இறங்கி அடைப்புகளை நீக்கவும் இந்த தாழ்த்தப்பட்ட பழங்குடி சாதியினரையே பயன்படுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சியில் இப்படி சாக்கடைக் குழிக்குள் இறங்கி, நச்சு வாயுவால் மரணத்தைத் தழுவும் செய்தியும் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கிறது.

இறப்பது மனுதர்மப்படி ‘கீழ் சாதி’ மனிதன் உயிர் என்பதால், ‘மனுதர்ம’ சிந்தனையில் ஊறிப் போன சமூகம். இந்த மரணங்களை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. 1993 ஆம் ஆண்டு சட்டம் கிடப்பில் போடப்பட்டுக் கிடப்பதை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப் பட்டது. உயர்நீதிமன்றம் ஓர் அதிரடி ஆணையைப் பிறப்பித்தது. மலத்தை மனிதன் எடுப்பதை தடை செய்யும் சட்டம் உடனடியாக கடுமையாக திருத்தியமைக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் பிரதமர் போன்ற உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களே நீதிமன்றத்துக்கு நேரில் அழைத்து விளக்கம் கேட்க வேண்டியிருக்கும் என்று உயர்நீதிமன்றம் அறிவித்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணை உச்சநீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதற்குப் பிறகு தான், டெல்லி ஆட்சி அசைந்து கொடுத்து, மழை காலக் கூட்டத் தொடரில் புதிய மசோதாவைக் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளது. கடந்த ஆண்டு உள்துறை அமைச்சகமும், மாநில அரசுகளுக்கு ஒரு அறிவுறுத்தலை வாங்கியது. மலம் அள்ளும் வேலையில் மனிதர்களை ஈடுபடுத்துவோர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டாலும் இதுவரை ஒரு வழக்குகூட அப்படிப் பதிவு செய்யப்படவே இல்லை. பார்ப்பன உயர்சாதி ‘வர்ணத்தவர்கள்’ தங்கள் வாழ்க்கை வசதிகளுக்கு ‘மனுதர்மம்’ விதித்த கட்டளைகளை மீறிக் கொள்கிறார்கள். ஆனால், அடித்தட்டில் உழலும் மக்கள் மீது மனுதர்மச் சிந்தனையைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியாளர்களும் இதற்கு துணைப் போகும் அவலம் நீடிக்கிறது. எனவேதான் பெரியார் திராவிடர் கழகம் அழைக்கிறது:

**“சாகாமல் உயிர்த் துடிப்போடு இயங்கும் மனுதர்மத்துக்குத் தடை போட வேண்டும்!**

**நவம்பர் 26 இல் அந்த இழிவுக் குப்பைக்குத் தீ வைப்போம்”!**

### சோனியா உருவ பொம்மை எரிப்பு

ஜெனீவா தீர்மானம் பற்றிய கேள்விக்கு எந்த ஒரு நாட்டின் மீதும் கொண்டுவரப்படுகிற கண்டனத் தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியதை அடுத்து மார்ச். 16 ஆம் நாளன்று பொள்ளாச்சியில் ஒன்றிய செயலாளர் சம்பத் தலைமையில் கூடிய தோழர்கள் காங்கிரஸ் தலைவர் சோனியாவின் உருவ பொம்மை எரிப்புப் போராட்டம் நடத்தினர். இதில் 33 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

# பொள்ளாச்சியில் கழகக் கூட்டம்

கழகத்தின் சார்பில் 09.04.2012 திங்கள் மாலை 5.00 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலிலும் மாலை 7.00 மணிக்கு பேருந்து நிலையம் அருகிலும் தெருமுனைக் கூட்டங்களும் இரவு 8.00 மணிக்கு ஆனைமலை முக்கோணம் பகுதியில் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டன. நகர செயலாளர்கள் வே.வெள்ளயங்கரி வே.அரிதாசு ஆகியோரது தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கழகப் பொதுச் செயலாளர் கோவை கு . இராம கிருட்டிணன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கழக மாவட்ட தலைவர் கலங்கல் மு. வேலுசாமி மாவட்ட செயலாளர் காசு. நாகராசன் ஒன்றியப் பொறுப்பாளர்கள் சம்பத் மணிமொழி ஆனந்த் நிர்மல் சீனிவாசன் த. கண்ணன் அப்பாதுரை மாணவர் கழகப் பொறுப்பாளர்கள் பிரபாகரன் மற்றும் ம.தி.மு.க. நகர அவைத்தலைவர் எம். ரவி துரைபாய் நகர மன்ற உறுப்பினர்கள் முரளி அண்ணாதுரை தோழர் வேலு நேதாஜி பேரவைத் தலைவர் வெள்ளை நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

### ஆனைமலையில் கண்டன ஆர்ப்பாட்டம்

இடிந்த கரையில் அறப்போராட்டம் நடத்திவரும் மக்கள் மீது ஆயுதப்படை முற்றுகை மேற்கொண்ட தமிழக அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து 24.03.2012 சனி அன்று ஆனைமலையில் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் கோவை மாவட்ட செயலாளர் காசு. நாகராசன் பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளியங்கிரி ஆனைமலை செயலாளர் வே. அரிதாசு ம.தி.மு.க மாணவர் அணி தோழர் சரவணன் தமிழ்நாடு மாணவர் கழகம் . பிரபாகரன். வெற்றி உள்ளிட்ட கழக பொறுப்பாளர்கள் தோழர்கள் மாணவர்கள் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (9)

## லண்டனில் தடையை தகர்த்து உரிமை முழக்கமிட்டவர் டாக்டர் நாயர்

1918 ‘தேசிய’ பார்ப்பனக் காங்கிரஸ்வாதிகள், அவர்களின் கையாளாகப் பயன்பட்ட அன்னி பெசண்டின் ஹோம் ரூல் இயக்கத்தின் யோக்கியதை, ஆகியவற்றை நீதிக்கட்சித் தலைவர்கள் அவ்வப் போது தோலுரித்துக் காட்டி வந்ததோடு பார்ப்பனரல்லாதார் இன எழுச்சியை தூண்டியும் வந்தனர்.

நாயரின் எழுத்துகள் அன்னிபெசன்ட் அம்மையாருக்கு குலை நடுக்கத்தை ஏற்படுத்தின. அன்னி பெசன்டின் வாழ்க்கை வளர்ச்சிகள் என்று, நாயரால் எழுதப்பட்ட ஆங்கில நூல், அன்னிபெசன்டின் அரசியல் வீழ்ச்சிக்குப் பெருங்காரணமாய் அமைந்தது. இந்நூல், “Lead beater scandal of 1913” என்ற தலைப்பில் நாயரால் மெயில் ஆங்கில நாளிதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். அன்னிபெசன்டுக்கும் லெட் பீட்டருக்கும் நடந்த கடிதப் போக்குவரத்தை அம்பலப்படுத்திட அவரின் ஊழல்களை வெட்ட வெளிச்சமாக்கியது. இதற்கென அன்னிபெசன்ட் நாயர் மீது மான நஷ்ட வழக்கு தொடர்ந்து பெரிய (பாரிஸ்டர்) வழக்கறிஞர்களைக் கொண்டு வாதாடினார். நாயர் வழக்கறிஞர் எவருமின்றி, தமது தரப்பு நீதியை மன்றத்தில் வாதாடி வென்றார். அம்மையார் தொடுத்த வழக்கு தள்ளுபடி ஆயிற்று.

பார்ப்பனர் தூண்டுதலால், காங்கிரசுக்குள் ஏற்படுத்தப்பட்ட ‘சென்னை மாகாண சங்கத்தை’ ஒழித்துக் கட்டும் உள்நோக்கத்தோடு, பார்ப்பன ஆதிக்கக் காங்கிரஸ்வாதிகள் ‘நேஷனலிஸ்ட் அசோஷியேசன்’ என்பதாக ஒரு சங்கத்தை ஏற்படுததினர். இதன் தலைவராக கஸ்தூரி ரங்க அய்யங்கார், வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆகியோரும், விஜயராகவாச்சாரியும், உபதலைவராக சி.ராஜகோபாலாச்சாரியும், தமிழ்நாட்டுக்குச் செயலாளராக பெரியார், மலையாளத்திற்கு கே.பி.கேசவமேனனும், ஆந்திராவுக்கு பிரகாசமும் இருந்தனர். இந்த நேஷனலிஸ்ட் அசோசியேஷனிலும் பெரியார் முயற்சியால் பார்ப்பனரல்லாதாருக்கு 50 சதவீதம் பிரதிநிதித்துவம் அளிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்த அறிக்கை சட்டமாக்கப்படுவதற்கு முன்னர், இங்கிலாந்து நாடாளுமன்றம் ஒரு கமிட்டியை அமைத்து, இந்தியாவில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்களையும் தங்களது நோக்கங்களைச் சொல்லுவதற்காக இங்கிலாந்து வருமாறு அழைத்தது. நாயர் இக்கமிட்டியின் முன் பார்ப்பனரல்லாதார் சார்பில் கருத்துகளைச் சொல்ல லண்டன் சென்றடைந்தார். ‘மாண்டேகு செம்ஸ்போர்ட்’ அறிக்கையானது, ஜூலை 2 இல் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை, சீக்கியருக்கும் முஸ்லிம்களுக்கும் மட்டுமே பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் அமைந் திருந்தது. பார்ப்பனரல்லாதாருக்கும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சட்டமன்றத்தில் எந்த ஒதுக்கீடும் பிரதிநிதித்துவமும் இடம் பெறவில்லை. நாயர் லண்டனில் இருக்கும்போதே வெளியான இவ்வறிக்கையை எதிர்த்து அவர் பேச இயலாவண்ணம் எந்தக் கூட்டத்திலும் பேசக்கூடாது என்று தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த தடை ஆணையை ஒரு ராணுவ அதிகாரி நாயரிடம் நேரில் சென்று அளித்து ‘சர்வ்’ செய்தார். நாயர் சோர்வடையாமல் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமது நண்பர்களை தனியே சந்தித்து, பார்ப்பனரல்லாதாருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டியதின் நியாயத்தை வலியுறுத்தியதோடு அவர்கள் உதவியோடு தடை ஆணையை நீக்கவும் முயற்சி செய்தார். ஏற்கனவே இந்திய மாநிலங்களில் கவர்னர்களாக இருந்து பணியற்றிய லாமிங்க்டன், சிடன்ஹாம், கார்மிசெல் ஆகியோர், ஜூலை 31 இல் நடந்த பிரபுக்கள் சபையில் நாயரின் அறிவாற்றலைப் புகழ்ந்தும், தடை ஆணையை நீக்கி நாயரைப் பேச அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டனர். அதன் விளைவாக தடை ஆணை நீக்கப்பட்டு, ஆகஸ்டு 2 இல் பிரபுக்கள் சபை, காமன் சபை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் உரையாற்றினார். அந்த உரையில், மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த அறிக்கையில் உள்ள ஊழலை எடுத்துக் காட்டி, வகுப்புவாரி உரிமையை வற்புறுத்தினார். பார்ப்பனரல்லாதாருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சட்டமன்றத்தில் தனித்தொகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

மதுரையில் ‘பார்ப்பனரல்லாதார் மாநாடு’ அக்டோபர் 13 இல் நிகழ்ந்தது. உத்தமபாளையம் ஜமீன்தார் எம்.டி.சுப்பிரமணிய (முதலியார்) வரவேற்புரை நிகழ்த்தினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் பல மாநாடுகளிலும், பார்ப்பனரல்லாதாருக்கு பிரதிநிதித்துவம் அளிக்காத மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆங்கிலேய அரசு, ‘சவுத்பரோ கமிட்டி’ என்ற பெயரில் ஒரு குழுவை ஏற்படுத்தி, வகுப்பு அடிப்படையில் தொகுதிகள் அமைக்கலாமா என்பது குறித்து ஆராய்ந்துஅறிக்கை தருமாறு பணித்தது. நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல் இந்தக் குழுவில், வி.எஸ்.சீனுவாச சாஸ்திரி, எஸ்.என்.பானர்ஜி என்ற இரு பார்ப்பனர் இடம் பெற்றிருந்தனர்.

**(தொடரும்)**

**கழக வெளியீடான ‘திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம்’ நூலிலிருந்து**

## வரலாற்றை சுட்டிக்காட்டி கொளத்தூர் மணி உரை

# அயோத்தியிலிருந்து ராமன் தெற்கே வந்தது ஏன்?

***கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை-தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து:***

பெரியார் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம் தொடர்ந்து செய்தார். எம்.ஆர்.இராதா நாடகத்தின் வழியாக இராமாயண எதிர்ப்பு செய்யும்போது, பெரிய கலவரம் ஏற்படுகிறது. அப்போது காங்கிரஸ் காரர்கள் தான் எதிர்த்தார்கள். ஒரு அவதாரத்தை போட்டதற்கே இவ்வளவு கூச்சலிடுகிறார்களே, பத்து அவதாரத்தையும் காட்டியாக வேண்டும் என்று குத்தூசி குருசாமியிடம் சொன்னாராம் இராதா. அதன் பிறகு, குத்தூசி குருசாமி எழுதிய 'தசாவதாரம்' என்ற நாடகத்தை எம்.ஆர். இராதா நடித்தாராம். புராணம் என்ற பெயரால், அவர்கள் புரட்டுகளை நம்ப வைத்து நம் மீது பார்ப்பனப் பண்பாட்டைத் திணிப்பதற்கு எதிரானதுதான் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம்.

இராமர் பாலம் என்பதை எங்களுடைய மத நம்பிக்கை என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு என்று சொல்கிறோம். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவது என்பதுதான் காந்தி சொல்லிக் கொடுத்த மதச் சார்பின்மை. அரசின் எந்த கடமைகளிலும் மதத்தைச் சார்ந்து அல்லது மதத்தின் நுழைவு இருக்கக் கூடாது என்பது தான் பெரியார் சொன்ன மதச்சார்பின்மை. நிர்வாணமாக இருக்கலாம். குளியலறையில், படுக்கை அறையில் மட்டும். வீதியில் வரக் கூடாது. கடவுளை வணங்கலாம். உன் வீட்டில் மட்டும். அலுவலகத் திற்கு வர வேண்டாம். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவது தான் மதச்சார்பின்மை என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னபோது பெரியார் சொன்னார், "எந்த ஆணுடனும் தொடர்பில்லாத பெண் தான் கன்னிப் பெண் என்று நான் சொல் கிறேன். அனைத்து ஆண்களையும் சமமாக பாவிப் பவள் தான் கன்னிப்பெண் என்று நீ சொல்கிறாயே" என்று. அவர்கள் சொல்கிறபடி அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவது என்றாலும் கூட...

ஆடம் பிரிட்ஜ் என்பது ஆதாம் பாலம். இஸ்லாம் மதத்திலும், கிருத்துவ மதத்திலும், இரண்டு மதத்திலுமே ஆதாம் ஏவாள் தான் முதல் மனிதர்கள் என்று சொல்கிறார்கள். இஸ்லாம் மதப்படி ஏசுநாதரும் ஒரு நபி (கடவுளின் தூதர்). இஸ்லாமியர் களின் கதைப்படி ஆதாம் கடவுளிடம் சென்று தன் பாவத்திற்காக மன்னிப்புக் கேட்டு ஆயிரம் ஆண்டு தவம் இருக்கிறான். இலங்கையில் உள்ள ஆதாம் சிகரம் என்ற மலையின் மீது நின்று. இங்கிருந்து இலங்கை செல்லும்போது சென்ற பாலம் தான் ஆதாம் பாலம். இந்துக்களுக்கு நம்பிக்கைப்படி இராமர் பாலம் என்றால், இஸ்லாமியர்களின் நம்பிக்கைப்படி அது ஆதாம் பாலம். இந்து மத நம்பிக்கைப்படி மட்டும் தான் என்றாலும்.

வால்மீகி இராமாயணம், துளசிதாச இராமா யணம், கம்ப இராமாயணம். இப்படி இந்தியாவில் பல இராமாயணங்கள் உள்ளது. வால்மீகி இராமாயண காலத்திலேயே பவுத்த இராமாயணம், சமண இராமாயணம் என்று உள்ளது. பவுத்த இராமாயணப்படி, காசி மன்னனின் மகன்தான் இராமன். இராமனின் தங்கை சீதை என்று சொல்லப்படுகிறது. சமண இராமாயணத்தில் - தந்தையால் துரத்தப்பட்ட இராமன், இமயமலை சென்று விடுகிறான். ஆந்திராவில் ஒரு இராமாயணம் பெண்களால் நடத்தப்படுகிறது. அதில் இராமனை அயோக்கியனாகவும், பெண்களை மதிக்கத் தெரியாதவனாகவும், பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தியவனாகவும், இன்றளவிலும் அதுவும் பார்ப்பன பெண்களால் கிராமியப் பாடல்களாக பாடி நடத்தப்படுகிறது. அனைத்து இராமாயணங் களையும் தொகுத்து, பலாரிக்ஸ்மன் என்ற ஒரு பெண்மணி, மெனி இராமாயணாஸ் (Many Ramayanas) என்ற ஒரு புத்தகம் எழுதியுள்ளார்கள். ஆக, அந்த இராமாயணப்படி, இராமன் கீழே வரவில்லை. இமயமலை சென்று விடுகிறான். ஆக அனைத்து மதங்களையும் சமமாக பாவிப்பவர்கள் என்றால் சமண இராமாயணத்தையும் தானே ஏற்றுக் கொள்ள வேண்டும்?

இராமன் விந்திய மலையை தாண்டி வரவில்லை என்பதுதான், பல ஆய்வாளர்கள் சொல்கிற உண்மை. விந்திய மலைக்கு அந்தப் பக்கம், சுற்றிலும் நீர் சூழ்ந்த ஒரு சமவெளிப் பகுதி இருக்கிறது. லங்கா என்ற பெயரில் இன்னும் அந்த பகுதி இருக்கிறது. அதேபோல் சுயலா மலை என்ற மலை ஒன்றும் இருக்கிறது. இந்த மலையில் இருந்து தான் இராமன் படையை நடத்திச் சென்றான் என்று சொல்லப்படுகிறது. மகேந்திரமலையில் இருந்துதான் அனுமன் ஒரே தாவாக தாவிச் சென்றான் என்று இராமாயணம் சொல்கிறது. மகேந்திர மலையும் அங்கு இருக்கின்றது. லங்கா, சுயலாமலை, மகேந்திர மலை ஆகிய மூன்றும் அருகருகில் உள்ளது. எனவே தான் அவர்கள் சொல்கிறார்கள்... "மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் பெயர் தமிழில் தாமிரபரணி என்றும், கிரேக்க, இத்தாலிய இலக்கி யங்களில் தாம்ரோன் என்றுதான் அழைக்கப்பட் டிருக்கிறது. பின்னாளில் சிங்களத் தீவு என்று சொன்னார்கள். அது சிலோன் ஆனது. ஆக வரலாற்றில் இலங்கை என்று அழைக்கத் துவங்கியது ஒரு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து தான். இராமாயணம் நடந்ததாக சொல்லப்படுகிற காலத்தில் அது தாமிரபரணி - தாம்ரோன் தான்.

தமிழ்நாட்டைச் சார்ந்த பரமசிவ அய்யர் என்பவர் ஆய்வு செய்து ஒரு புத்தகம் வெளியிட்டிருக் கிறார். அதன் பிறகு அவருடைய தம்பி அமிர்தலிங்கம் அய்யர் (சி.பி.எம். கட்சியின் மாநில செயலாளராக இருந்த திண்டுக்கல் ஏ.பாலசுப்ரமணியம் அவர்களின் தந்தை) கிரிட்டிக் ஆன் இராமாயணா (Critic on Ramayana-இராமாயணத்தின் மீதான விமர்சனங்கள்) என்ற புத்தகத்தை எழுதுகிறார். அவரோடு சங்காலியா என்ற இன்னொரு ஆய்வாளர் ஆய்வு செய்தார். இப்படி பல ஆய்வாளர்கள் செய்த ஆய்வுப்படி இராமன் விந்தியமலையோடு நின்று விட்டான் என்று சொல்கிறார்கள். அமிர்தலிங்க அய்யர், இலங்கா, சுயலாமலை, மகேந்திர மலை ஆகிய மூன்றும் அருகருகில் இருப்பது பற்றி வரைபடம் வெளியிட்டார். அதை அனைத்து அறிஞர்களும் ஏற்றுக் கொண்டனர். பல அறிஞர் களின் கட்டுரைகளைத் தொகுத்து, கே.முத்தையா (சி.பி.எம். கட்சியை சார்ந்தவர்) அவர்கள் ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். இராமன் எப்போதும் தெற்கே வரவில்லை என்று இவரும் சொல்கிறார். மேலும் அந்த நூலில்... இராஜராஜ சோழன் இலங்கைக்கு படையெடுத்துப் போனதற்கு பின்னால், சோழர்கள் அதை நியாயப்படுத்துவதற்காக, கம்பரை வைத்து இராமாயணம் எழுதி, எங்களுக்கு முன்னரும் பலர் இலங்கையின் மீது படையெடுத்துள்ளார்கள் என்று காட்டுவதற்காக செய்யப்பட்ட முயற்சிதான் சிங்களத் தீவை இலங்கை என்று சொல்லி, இராமன் இங்கு வந்ததாகச் சொல்லி கதைகளை உண்டாக்கி விட்டார்கள் என்று சொல்கிறார்.

ஆறாயிரம் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் (கி.மு.4000-5000) கடல் மட்டம் இப்போதையவிட பதினேழு மீட்டர் குறைவாக இருந்தது என்று, பழங்காலத்தை ஆய்வு செய்யும் தொல்புவியல் துறையின் இயக்குநர் சொல்கிறார். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், நீர் மட்டம் இப்போது இருப்பதைவிட அறுபது மீட்டர் குறைவாக இருந்தது. Last classical maxims என்று அழைக்கப் படுகிற ஒரு காலகட்டத்தில், ஒரு இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் (கி.மு.18000) நூற்றி பதினெட்டு மீட்டர் கடல் மட்டம். இப்போது இருப்பதைவிட குறைவாக இருந்தது என்று தான் தொல்புவியல் ஆய்வு சொல்கிறது. அதன்படி கி.மு.18000 ஆண்டு வரை இலங்கையும் இந்தியாவும் இணைந்த நிலப்பகுதிகளாகத் தான் இருந்தது. ஆக, தண்ணீர் இல்லாதபோது பாலம் கட்ட வேண்டிய அவசியம் இராமனுக்கு இருந்திருக்க முடியாது.

இராமாயணப்படி இராமன் இலங்கைக்கே வரவில்லை. விந்திய மலையோடு நின்று விட்டான். அயோத்தியில் இருந்து காட்டிற்குப் போகச் சொன்னால், இமயமலைதான் பக்கத்தில் இருக்கிறது. அதைவிட்டு விட்டு இரண்டாயிரம் மைல் தூரம் வரவேண்டிய அவசியம் இல்லை. அப்படியே வந்தாலும் கங்கை, யமுனை, கோதாவரி ஆகியவற்றை கடந்து வந்திருக்க வேண்டும். ஆனால், அங்கெல்லாம் பாலம் கட்டாமல் இங்கு மட்டும் தான் கட்டியதாக சொல்வது நம்பும்படியாக இல்லை. இராமாயண கதையின்படியேகூட, வால்மீகி சொல்வது... "இராமன் பாலம் கட்ட வேண்டும் என்று முடிவு செய்கிறபோது, தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால் கட்ட முடியவில்லை. உள்ளே உள்ள கற்களின் மீது ராம் ராம் என்று அனுமன் எழுதுகிறார். உடனே அந்த கற்களெல்லாம் தண்ணீரில் மிதக்க ஆரம்பிக் கின்றது. மிதக்கும் கற்களை பாலமாக பயன்படுத்தி தான் அந்தப் பக்கம் செல்கிறார்" என்பதுதான். இது வடநாட்டு தொலைக்காட்சி நாடகத்திலும் உள்ளது.

பின்னர் எழுதப்பட்ட இராமாயணக் கதைகளில் தான் பாலம் கட்டியதை, அணில் உதவியதை எல்லாம் சேர்த்து எழுதியுள்ளார்கள்.

**(தொடரும்)**

## பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்

*உள்நாட்டுப் பாதுகாப்புகளில்கூட மத்திய அரசு நேரடியாக தலையிடுவதை மாநில அரசுகள் எதிர்க்கின்றன. அரசியல் சட்டம் உருவாக்கிய காலச் சூழல் வேறு; இப்போதைய நிலை வேறு; அரசியல் நிர்ணய சபை, வலிமையான மத்திய அரசையே விரும்பியது. பாகிஸ்தான் பிரிவினைக்கு ஜின்னா போராடியதையும் சமஸ்தான மன்னர்கள் தங்களின் ஆளும் உரிமைகளை விட்டுக் கொடுக்க மறுத்ததை யும் கவனத்தில் கொண்டு, மாநிலங்கள் வலிமையாகி விடக் கூடாது. மத்திய அரசு வலிமையாக இருக்க வேண்டும் என்றே காங்கிரஸ் விரும்பியது. நேருவின் அமைச்சரவையில் இடம் பெற்ற அமைச்சர்கள் பலரும் தங்கள் துறைகளுக்கான முழு அதிகாரம் தங்களிடமே இருக்க வேண்டும் என்று விரும்பினர். 1950 ஆம் ஆண்டு நேரு உருவாக்கிய திட்டக் கமிஷன்கூட இதே கண்ணோட்டத்தில் தான் உருவாக்கப்பட்டது.*

*இது பேரதிகார மிக்க அமைப்பாக எதிர்காலத்தில் மாறிவிடும் என்று சர்தார் பட்டேல்கூட அச்சம் தெரிவித்தார். அதுதான் நடந்தது. திட்டக் கமிஷன் பற்றி அரசியலமைப்பில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை. ஆனால், அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி ஆணையம், தேசிய வளர்ச்சிக் கவுன்சிலைவிட திட்டக் குழுதான் அதிகாரம் செலுத்துகிறது. ஒவ்வொரு மாநில அரசும் தங்கள் மாநிலத்துக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு திட்டக் குழு முன்புதான் கைகட்டி நிற்க வேண்டியிருக்கிறது. 1960 ஆம் ஆண்டில் இந்தியா 'கூட்டுறவு கூட்டமைப்பாக' செயல்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இப்போது அந்த நிலையும் போய், மாநிலங்கள் நகரசபைகளாக மாற்றப்பட்டுவிட்டன. இந்தியாவுக்கு இத்தகைய வலிமையான மத்திய அரசு தேவை இல்லை என்று அரசியல் கட்டுரையாளர் சுவப்பன் தாஸ் குப்தா, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் (ஏப்.22) எழுதியுள்ளார்.*

*மாநில உரிமைகளைப் பறித்து மத்தியில் அதிகாரங்களைக் குவித்து வரும் டில்லி ஆட்சி, இப்போது மாநிலங்களின் சட்டம் ஒழுங்குகளிலும் தலையிடத் தொடங்கிவிட்டது. 'பயங்கரவாத தடுப்பு மய்யம்' என்ற மத்திய அரசின் தீவிர முயற்சிக்கு மாநில அரசுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சட்டம் வேண்டும்; அதில் மாநில உரிமைகள் பறிக்காதவாறு திருத்தங்கள் வேண்டும் என்பதே பல மாநில அரசுகளின் கோரிக்கை. இத்தகைய சட்டமே தேவையற்றது என்பதே நமது கருத்து. இந்தியா என்ற அமைப்பை கட்டிக்காக்க முடியாமல், பல்வேறு தேசிய இனங்களின் முரண்பாடுகளுக்கு இடையே பலவீனமாகிக் கொண்டிருக்கும் மத்திய அரசு 'பயங்கரவாத ஆபத்துகள்' என்ற அச்சத்தையூட்டி, இந்தியாவை உடையாமல் இணைத்து வைக்க நடக்கும் பார்ப்பனிய சிந்தனை இதில் அடங்கியிருக்கிறது. 'பயங்கரவாதம்' என்று இவர்கள் கூறிவரும் பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணமாக இருப்பதே இந்தியா என்ற கட்டமைப்புதான் என்பதே உண்மை!*

# பெண்ணுரிமையை வலியுறுத்திய ஓர் விவகாரத்து வழக்கு

மும்பை உயர்நீதிமன்றத்தில் கடந்த மே 3 ஆம் தேதி வந்த ஒரு விவகாரத்து வழக்கு, பெண்ணுரிமைக் கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அமர்வு நீதிபதிகள் பி.பி.மஜீம்தார் மற்றும் அனூப்போத்தா இந்த வழக்கில் எழுப்பிய கேள்விகளும் மிகவும் அர்த்தமிக்கதாகும். 30 வயது கணவன், தனது 26 வயது மனைவியிடமிருந்து விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்திருந்தார். திருமணமானவுடன் இந்த இணையர் தேனிலவுக்கு சென்றபோது மணமகள் கணவருடன், குழந்தை பிறப்புத் தடைக்கான ஆணுறை இல்லாமல் உடல் உறவு கொள்ள மறுத்துவிட்டார். 'குழந்தை பெற்றுக் கொள்வதற்கு இப்போது உரிய நேரமல்ல; பொருளாதார ரீதியாக என்னை வளர்த்துக் கொண்ட பிறகே குழந்தை பெற்றுக் கொள்வேன்' என்று அந்தப் பெண் கூறிவிட்டார். இது தனக்கு மன உளைச்சலை உருவாக்கிவிட்டது என்று கணவர் வழக்கு தொடர்ந்தார். 'தனது குழந்தைக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைய தன்னை பொருளாதாரத்தில் நிலைப்படுத்திக் கொள்ள விரும்பியிருக்கிறார் இந்தப் பெண்' என்று கூறிய நீதிபதி, 'இதில் முடிவெடுக்கும் உரிமை கணவனுக்கு மட்டுமே இருக்க முடியாது' என்று கூறினார்.

"இந்தப் பெண்ணுக்கு சமைக்க தெரியாது; மத நம்பிக்கை இல்லாதவர்; ஊதியத்தை தன்னிடம் பங்கு போட்டுக் கொள்ள மறுக்கிறார்; உடையணிவதில் ஒழுங்குமுறை இல்லை" என்று விவாகரத்து மனுவில் கணவன் கூறியிருந்த காரணங்களை ஏற்க நீதிபதிகள் மறுத்தனர். 'இதில் கணவனுக்கு மன உளைச்சல் ஏன் வரவேண்டும்?' என்ற கேள்வியை நீதிபதி எழுப்பினார்.

மணமகனின் வழக்கறிஞர் வாதிடுகையில், "எனது கட்சிக்காரர் மணமகள் தேடும் விளம்பரத்தில் வேலை பார்க்கும் பட்டதாரிப் பெண்ணாகவும் கூட்டுக் குடும்பத்தில் வீட்டு வேலைகளை செய்யக் கூடிய பெண்ணாகவும் இருக்க வேண்டும் வெளியிட்டிருந்ததை ஏற்றுத்தான் மணமகள் திருமணத்துக்கு சம்மதித்தார்" என்றார்.

இதற்கு பதிலளித்த நீதிபதி மஜீம்தார், "ஒரு பெண் என்பவர் அடிமையல்ல. அவரின் கருத்துரிமையை பறித்துவிட முடியாது. வீட்டில் நடக்கும் குடும்ப சச்சரவுகளை நீங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளீர்கள். இவையெல்லாம் மன உளைச்சல் என்று ஏற்றுக் கொண்டுவிட்டால், எந்த ஒரு திருமணத்தையும் பாதுகாப்பாகக் கருதிட முடியாது" என்றார்.

"இந்தப் பெண் குடும்பத்தில் மூத்தவர்; இவருக்கு திருமணமாகாவிட்டால் அவரது தங்கைக்குத் திருமணம் நடக்காது" என்று பெண்ணின் குடும்பச் சூழலை பெண்ணின் வழக்கறிஞர் கூறியபோது, "பெண்களை பெற்றோர்கள் ஒரு சுமையாகவே கருதுகிறார்கள். திருமணத்துக்குப் பிறகு எப்படிப்பட்ட ஒரு வீட்டுக்குப் போகிறோம் என்பதை ஒரு பெண் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும்" என்றார், நீதிபதி மஜீம்தார்.

"இந்த வழக்கு திருமணம் செய்து கொள்ளப் போகும் இளைஞர்களுக்கு வழிகாட்டக்கூடிய வழக்காகும். பெற்றோர்கள் ஏற்பாடு செய்யும் திருமணங்களில் பெண்ணும் ஆணும் முன் கூட்டியே சந்தித்து, கலந்து பேசி, எதிர்காலத்தில் மகிழ்ச்சியுடன் இணைந்து வாழ முடியுமா என்பதை முடிவு செய்திட வேண்டும்" என்று கூறிய நீதிபதிகள், "திருமணத்துக்குப் பிறகு கணவர் வீட்டுக்கு வரும் பெண், முற்றிலும் ஒரு புதிய சூழலுக்கு தள்ளப்படுகிறார். எனவே அவர் அன்பையும் அரவணைப்பையும் எதிர்பார்க்கவே செய்வார். கணவரும் குடும்பத்தாரும் இதைப் புரிந்துக் கொண்டு, அந்தப் பெண்ணுக்கு தனித்து விடப்பட்ட உணர்வு இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும்" என்று நீதிபதிகள் கூறினர். விவகாரத்துக்கு நீதிமன்றம் அனுமதித்தது.

'டைம்ஸ் ஆப் இந்தியா' (மே 4) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

**சென்னையில் கழகம் நடத்தும்**
**முள்ளிவாய்க்கால் நினைவு நாள்**

மே 19 அன்று மாலை சென்னை எம்.ஜி.ஆர். நாளில் முள்ளி வாய்க்கால் நினைவு நாளில் ஈழ விடுதலைக்கு அய்.நா. வாக்கெடுப்பு நடத்தக் கோரும் பொதுக் கூட்டம் பெரியார் திராவிடர் கழக சார்பில் நடக்கிறது. துணைத்தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கழகத் தலைவர், பொதுச்செயலாளர்கள் உரையாற்றுகிறார்கள்.

# கோவை மாவட்டக் கழக முடிவுகள்

கோவை வடக்கு தெற்கு மாநகர மாவட்ட கழகங்களின் கலந்துரையாடல் கூட்டம் 8.4.2012 ஞாயிறு காலை 11 மணிக்கு கோவை அண்ணா மலை அரங்கில் பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது.

சமீபத்தில் முடிவெய்திய பெரியார் பெருந்தொண்டர் ஈரோடு சுப்பையா, சிந்தனையாளர் சங்கமித்ரா ஆகியோருக்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து தோழர்களின் கருத்துரைகளையடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கோவை மாநகரில் பார்ப்பன சங்கம் நடத்தும் மின் மயானத்தை அனைத்து சாதியினருக்கான பொது மயானமாக அறிவிக்க வலியுறுத்தி மே மாதம் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும்,

தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அனுமதி மறுக்கம் அன்னூர் வடவள்ளி கிராம அங்கன்வாடி மையத்திலும் அஞ்சல் நிலையத்திலும் நிலவும் தீண்டாமையைக் கண்டித்து எதிர்வரும் 16 ஆம் நாள் வடவள்ளியில் ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும்,

திராவிடர் இயக்க நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் திராவிடர் இயக்கத்தின் தோற்றம் வளர்ச்சி சாதனைகளை விளக்கம் பயிலரங்குகள் புகைப்படக் கண்காட்சிகளை மாவட்டம் முழுவதும் நடத்துவது எனவும்

கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு மே மாத இறுதிக்குள் 1000 சந்தாக்களை சேர்த்து சூன் முதல் வாரம் 1000 சந்தா வழங்கும் விழாப் பொதுக் கூட்டத்தை தலைவர் பொதுச் செயலாளர்களை அழைத்து நடத்துவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் வே. ஆறுச்சாமி, மாவட்ட தலைவர்கள் து.இராமசாமி, கலங்கல் மு.வேலுசாமி, வே.கோபால், மாவட்ட செயலாளர்கள் காசு. நாகராசன், இமு. சாஜித், மாவட்ட அமைப்பாளர் சண்முக சுந்தரம், மாவட்ட பொருளாளர் அகில் குமரவேல், மாநகர பொருளாளர் ரஞ்சித் பிரபு, மாநகர துணை செயலாளர்கள் தமிழரசன் இளங்கோ, ஒன்றிய பொறுப்பாளர்கள், அன்னூர் ஜோதிராம், ஈஸ்வரன் கிணத்துக்கடவு நிர்மல், பொள்ளாச்சி சீனிவாசன், ஆனைமலை ஆனந்த், நகர செயலாளர்கள் பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, ஆனைமலை அரிதாசு, பெ.நா.பாளையம் சீனிவாசன், பகுதிக் கழக பொறுப்பாளர்கள் மணிமாறன், அண்ணாமலை, மனோகரன், சோமு, செல்வம், ராசன், ஈசுவரன், செபஸ்டியன், செந்தில், காளப்பட்டி அம்பேத்கர், ஜெயப் பிரகாஷ் பொறியாளர் பன்னீர் செல்வம், பேராசிரியர், திருநாவுக்கரசு மற்றும் கிளை கழகங்களின் பொறுப்பாளர்கள் தோழர்கள் பங்கேற்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என்பவரை ஏன் இந்தியாவிலிருந்து வெளியேற்ற வேண்டும்? என்று கேட்டார் ரொமிலா தாப்பர். மேற்குறிப்பிட்ட நூல்களைத் தடை செய்யக் கோரியவர்கள் பா.ஜ.க. பார்ப்பன இந்துத்துவ சக்திகள் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடனே இப்படி பேசுகிறார்கள் என்று கூறிய ரொமிலா தாப்பர் மற்றொரு முக்கிய கேள்வியை எழுப்பினார். இந்தியர்களின் அடையாளம் என்பதே சாதிகள் மதங்களின் அடையாளங்கள்தான் என்று பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் வரலாறுகள் பதிவு செய்யப்பட்டதை இவர்கள் ஏன் எதிர்க்கவில்லை? ஒரு மத நிறுவனம் அந்த மதத்துக்குள் அடங்கியுள்ள அனைத்து சமூகக் குழுவினருக்குமான அதிகாரத்தை எடுத்துக் கொண்டு அனைத்துப் பிரிவினருக்கும் பேசக் கூடிய அதிகாரம் தங்களுக்கே உண்டு என்று உரிமை கோருவதை ஏன் எதிர்ப்பதில்லை?" என்ற கேள்விகளை அவர் முன் வைத்தார். இந்து மதத்தின் அதிகாரத்தை பார்ப்பனர்கள் கையில் எடுத்துக் கொண்டதையே அவர் கூறுகிறார். ஒவ்வொரு சாதிக் குழுவுக்கும் சமூகப் பிரிவுக்கும் தனித்தனியே உரிமைகளைக் கேட்பதை நிறுத்திக் கொண்டு பாதிக்கப்பட்ட ஒட்டு மொத்த மக்களின் சமூக நீதிக்கு முன்னுரிமை தரப்பட வேண்டியதே அவசியம்" என்று ரொமிலா வற்புறுத்தினார். அதே குரலைத்தான் பெரியார் திராவிடர் கழகமும் இப்போது எழுப்புகிறது.

இந்து மதத்தின் சமூக அமைப்புக்கான அதிகாரத்தை பார்ப்பனர்களே எடுத்துக்கொண்டு 'சூத்திர-பஞ்சம' மக்களை இழிவுபடுத்தும் அடக்கியாளும் 'மனுதர்மத்தை'த் திணிக்கும் அதிகாரத்துக்கு எதிராக கழகம் குரல் எழுப்புகிறது. ரொமிலா தாப்பர் வலியுறுத்தும் சமூகநீதிப் பார்வையில் மனுதர்மத்துக்கு வேண்டும் என்று முழங்குகிறோம். அதை வலியுறுத்த நவம்பர் 26 இல் தீயிட்டுப் பொசுக்கப் போகிறோம்.

தோழர்களே தயாராவீர்!

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## மும்பையில் கூடங்குளம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மும்பையில் கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக தமிழர்கள் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் மும்பை பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும் பங்கேற்றனர். பல்வேறு இயக்கங்களை ஒருங்கிணைத்து 26 மார்ச் 2012 திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரை தாதர் தொடர்வண்டி நிலையம் எதிரே உள்ள அனுமான் மந்திர் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் மா.கதிரவன், நாடோடி தமிழன், கதிரவன் (தமிழ் விடிவெள்ளி), இரா. அறிவழகன் உள்பட பலரும் கலந்து கொண்டனர். கூடங்குளத்தில் போராடும் தோழர்களை ஒடுக்குவதைக் கண்டித்து பலரும் முழக்கமிட்டனர்


**மயிலாடுதுறை கழகத் தோழர் கு. செந்தில்குமார் நன்கொடை**

மயிலாடுதுறை பெரியார் திராவிடர் கழகத் தோழர் கு.செந்தில் குமார் அவர்களின் மயிலாடுதுறையில் மின்னியல் பழுது பார்க்கும் நிறுவனத்தை (எஸ்.கே. சர்வீஸ் சென்டர்) ஏப்.21 மாலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். விழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடையை கழகத் தோழர் வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோர். (ஆர்.)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 11th May 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே 17, 2012 | புரட்சி 11 | முழக்கம் 18 | விலை: ரூ.2.50


## கிராமம் கிராமமாய் சுழன்று வீசுகிறது பிரச்சார அலை!

# சேலம் (மேற்கு) மாவட்டத்தின் தீவிரகளப் பணிகள்!

*சேலம் மேற்கு மாவட்டக் கழகம் கிராமம் கிராமமாக பரப்புரை இயக்கத்தை தீவிரப்படுத்தி வருகிறது. புயலாய்ச் சுழன்று வீசும் மாவட்டக் கழகப் பரப்புரை இயக்கம் பற்றிய தொகுப்பு.*

**கொங்கனாபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்**

தமிழர்களின் வாழ்வுரிமைகளை பாதிக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை, முல்லை பெரியாறு, கூடங்குளம் அணுமின் நிலையம் ஆகிய பிரச்சினைகளில் மத்திய அரசின் தமிழின வாழ்வுரிமை விரோதப் போக்கைக் கண்டித்து 26.1.2012 சனிக் கிழமை மாலை 4 மணிக்கு கொங்கனாபுரம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத் திற்கு சேலம் மாவட்ட அமைப்பாளர் முத்து மாணிக்கம் தலைமை தாங்கினார்.

சேலம் மேற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் நங்கவள்ளி கிருட்டிணன், கோகுலக் கண்ணன் முன்னிலை வகித்தனர். சேலம் மேற்கு மாவட்ட தலைவர் முல்லை வேந்தன், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத் தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தோழர்களும்,பொறுப்பாளர்களும் ஏராளமாக கலந்து கொண்டனர். இளம்பிள்ளை வெ.பிரபாகரன் நன்றி கூறினார். ஏராளமான துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டு, பொது மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டது.

**காவேரி கிராஸ்**

கடந்த 7.1.12 மாலை 5 மணிக்கு மேட்டூர் அருகே உள்ள காவேரி கிராஸ் பகுதியில் பெரியார்-அம்பேத்கர் பிறந்த நாள் விழாவும், மத்திய அரசின் தமிழின வாழ்வுரிமை விரோதப் போக்குகளை கண்டித்தும் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு கொளத்தூர் ஒன்றிய தலைவர் க.ஈசுவரன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட அமைப்பாளர் நங்க வள்ளி அன்பு ஆகியோர் சிறப்புரையாற்றினர். முன்னதாக காவை இளவரசன், 'மந்திரமல்ல தந்திரமே!' நிகழ்ச்சியும் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறை முழக்கமும் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி நன்றி கூறினார்.

**கோல்நாயக்கன்பட்டி – ரெட்டியூர்**

8.12.12 மாலை 5 மணிக்கு மேட்டூர் அருகே உள்ள ரெட்டியூர் என்ற பகுதியில் பெரியார் திராவிடர் கழக கொள்கை விளக்கத் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கொளத்தூர் ஒன்றிய தலைவர் ஈசுவரன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் சிறப்புரையாற்றினர். மேட்டூர் கோவிந்தராசு 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி சிறப்பாக நடத்தினார். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பறை முழக்கம் நடைபெற்றது.

**மாசிலாபாளையம்**

மேட்டூர் அருகே உள்ள மாசிலாபாளையம் என்ற பகுதியில் 21.1.12 மாலை 5 மணிக்கு கழக சார்பில் பெரியார், அம்பேத்கர் பிறந்த நாள் விழா மற்றும் மத்திய அரசின் தமிழின விரோதப் போக்குகளைக் கண்டித்து தெருமுனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஈசுவரன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு சிறப்புரை யாற்றினார். மாவட்ட பிரச்சாரக் குழுப் பொறுப் பாளர் கோவிந்தராசு 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சியும், மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழு வினரின் பறை முழக்கம் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**அச்சங்காடு**

22.1.12 ஞாயிறு மாலை 5 மணிக்கு மேட்டூர் அருகே உள்ள அச்சங்காடு என்ற இடத்தில் கழகத்தின் சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு கொளத்தூர் ஒன்றிய தலைவர் ஈசுவரன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் சிறப்புரையாற்றினார். முன்னதாக டி.கே. இசைக் குழுவினரின் பறை முழக்க நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 'மந்திரமல்ல தந்திரமே!' நிகழ்ச்சியை காவை இளவரசன் சிறப்பாக செய்து காட்டினார். மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுற்றது.

காவேரி கிராஸ், கோல்நாயக்கன்பட்டி, மாசிலா பாளையம், அச்சங்காடு ஆகிய நான்கு பகுதிகளும், தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் கிராமப்புற பகுதிகளாகும். மேற்குறிப்பிட்ட நான்கு ஊர்களிலும் நடைபெற்ற தெருமுனை கூட்டங்களில் அப்பகுதிகளை சார்ந்த பெண்களும், குழந்தைகளும் ஆர்வமாக திரண்டு வந்து செய்திகளை கேட்டனர். அவர்களிடம் கழக செயல்பாடுகளை விளக்கிடும் துண்டறிக்கைகள் ஏராளமாக வழங்கப்பட்டன. மேற்கண்ட நான்கு நிகழ்ச்சிகளுக்குமான ஏற்பாடுகளை மேட்டூர் நகர தலைவர் பாஸ்கர், நகர செயலாளர் சம்பத்குமார், கோவிந்தராசு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமரப்பா, மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

**(அடுத்த இதழிலும் தொடரும்)**

# ஆகமக் கோயிலிலிருந்து அறநிலையத் துறை அமைச்சர் வரை ஆட்டிப் படைக்கிறது 'மனுதர்மம்'

***"சூத்திரன் அருகில் இருக்கும்போது பிராமணன் வேதம் ஓதலாகாது."***

***– மனுதர்மம் அத்4; சுலோகம் 99***

"கோயில் கர்ப்பகிரகத்துக்குள் 'சூத்திரர்' அர்ச்சகர் ஆகக் கூடாது என்ற நிலையே இன்றும் நீடிக்கிறது. அந்த உரிமை பார்ப்பனருக்கு மட்டுமே உண்டு என்கிறது மனு நீதி. இப்போதும் சட்டங்களை புறந்தள்ளி விட்டு, 'ஆட்சி' செய்து வருகிறது. 'மனுநீதி' இதற்கு சான்றாக சட்டமன்றத்தில் மே 8 ஆம் தேதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஆற்றிய உரையை கீழே தருகிறோம்:

தமிழகச் சட்டமன்றத்தில் 8.5.2012 இந்து சமய அறநிலையத் துறைக்கான மானியக் கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் கே.தங்கவேல் பங்கேற்றுப் பேசுகையில்:

"பெரியார் நூற்றாண்டையொட்டி, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அமைத்த நீதிபதி மகாராஜன் குழு அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகிட ஆகமங்கள் தடை விதிக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தது.

இதைத் தொடர்ந்து திருச்சி கம்பரசம்பேட்டையில் அனைவருக்குமான வேத - ஆகம பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழகத்தில் 6 இடங்களில் தொடங்கி நடத்தப்பட்ட அர்ச்சகர் பயிற்சி நிலையங்களில் சுமார் 200 மாணவர்கள் பயின்றுள்ளனர். அவர்களுக்கு முக்கியத் தலங்களில் வேலை வழங்குவதுடன், அர்ச்சகர் பயிற்சியை மீண்டும் தொடங்கி நடத்த வேண்டும்.

மடாதிபதிகள், பாலியல் குற்றங்களைப் புரிவதும், வரி ஏய்ப்புச் செய்வதும், கொலை போன்ற குற்றங்களில் தொடர்புடையவர்களாக இருப்பதும் தொடர்கதை யாகியுள்ளன. மடங்களின் பெயரில் ஏராளம் சொத்துகள் இருக்கின்றன.

எனவே, மடங்களின் சொத்துகளை அரசே நிர்வகிக்க சட்டம் இயற்ற வேண்டும். மடங்களின் தலைவர்களை ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்க அரசு தலையிட வேண்டும்.

தமிழ்நாடு கோவில் நுழைவுச் சட்டம் 1950 ஆம் ஆண்டே இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி தனியார் கோவிலில்கூட, அதே மதத்தைச் சேர்ந்தவர் வழிபடும் உரிமையை ஒருவர் மறுக்க முடியாது.

ஆனால், சாதிப் பாகுபாடுகளைக் காரணம் காட்டி, பல கோவில்களில் தலித் மக்களின் வழிபாட்டு உரிமை அனுமதிக்கப்படுவதில்லை. இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பல கோவில்களில் தலித் மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

விழாக் காலங்களில் ஒரு குறிப்பிட்ட எல்லையுடன் நிறுத்தப்படுகின்றனர். இதற்கு செட்டிப்புலம், காளப்பட்டி, காங்கியனூர் என ஏராளமான உதாரணங்களைக் கூற முடியும். இந்து சமய அறநிலையத் துறை இது போன்ற பாகுபாடுகளுக்கு எதிராகவும், அனைவரின் வழிபாட்டு உரிமையைப் பாதுகாக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளாட்சி மன்றங்களில் செய்வதைப் போல, கோவில் அர்ச்சகர்கள், அறநிலையத் துறை அதிகாரிகள், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியேற்பதை கட்டாயமாக்கலாம்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தில் பேசினார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், "தமிழ்நாட்டில் அனைத்துக் கோவில்களிலும் அனைத்து சாதியினரும் நுழைந்து வழிபட உரிமை இருக்கிறது. எங்கும் மக்களுக்கு வழிபாடு மறுக்கப்படவில்லை" என்றார்.

ஆகமக் கோயில்களில் மட்டுமல்ல, ஆதிக்கசாதி கட்டுப்பாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார் கோயில்களிலும் 'தலித்' மக்கள் அனுமதிக்கப்படு வதில்லை என்ற உண்மையையும் சட்டமன்றத்தில் உறுப்பினர் எடுத்துக் காட்டியுள்ளார்.

அப்படி எதுவுமே நடக்கவில்லை என்று அறநிலையத் துறை அமைச்சர் துணிந்து சட்டமன்றத்தில் கூறியிருப்பது நகைப்புக்குரியது. முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் முயற்சி. சட்டங்கள் போட்டாலும், ஆய்வாளர்கள் பரிந்துரைத்தாலும் 'மனுதர்மத்தின்' ஆதிக்கத்தை ஒழிக்க முடியவில்லையே! ஆக, 'மனுதர்ம' சிந்தனை, ஆகமக் கோயில்களிலிருந்து அறநிலையத் துறை அமைச்சர் வரை ஆட்டிப் படைக்கிறது.

இந்த மனுதர்மம் எரிக்கப்பட வேண்டாமா?

இது மானமுள்ள மனிதனின் கடமை அல்லவா?

# இமயமும் பசிபிக்கும் எமக்கே சொந்தம்

**சங்க மித்ரா**

மேல்கோடி பலூர்ச்சி முதல் கீழ் முனையின் பர்மா வரை படர்ந்து, அகன்று, பாரின் உச்சி என உயர்ந்து நிற்கும் இமயத்தை பற்றி என்ன தோன்றும்? அதன் ஒப்பிலாக் குளிர் உறை பேரூர்களான ஸ்ரீநகர், சிம்லா, முசௌரி, நைனிடால், டார்ஜிலிங், ஷில்லாங் பற்றி எல்லாம் என்ன உணர்வு ஏற்படும்? வியப்பு - இனிய பூரிப்பு - அமைதியான ஆனந்தம் - இந்த இமயம் எமது என்ற பெருமை - எந்த நினைவை எப்படி அளந்து எப்படித்தான் சொல்ல முடியும்? அது அளவையில் அடங்காப் பேருணர்வு!

**பசிபிக் பெருங்கடல்**

நான்கில் மூன்று பகுதி நீர் சூழ் உலகில் - கடலில் பெருங் கடலாய் இருக்கும் பசிபிக் கடலைப் பற்றி என்ன தோன்றும்? ஆழ்கடல்! இமயம் அளவு உயரம் தலைகீழாகப் போவது போன்ற பள்ளங்களை - படுபாதாளங்களை, ஆழ அகலங்களைக் கொண்ட கடல்! இந்தக் கடலினுள்ளேயே எரிமலைகளாம், மூழ்கி மூழ்கிப் போன கோடிக்கணக்கான கப்பல்களாம், நாகரிகத்தின் எத்தனையோ புதிய வாய்ப்புகளைப் பார்த்துவிட்ட அமைதிப் பெரும் பரப்பு - ஆழம் மிகுந்தாலே அமைதி வருமோ! இந்தக் கடலும் எமக்குச் சொந்தம் என்ற நினைவு? ஓ, உயரத்தில் உயரமும் எமது; ஆழத்தில் ஆழமும் எமது. அது மலை. அது கடல். அது பெரியார்!


**என்னடா உன் வாழ்வு?**

காலக் கலத்தில் கொஞ்சம் பின்னோக்கிச் செல்வதாக - காலத்தை கடந்து பனிக்காலம், கற்காலம் என்று காலங்களைக் கடப்பதாக வைப்போம். கிழக்கிலிருந்து மேற்காக, வடக்கிலிருந்து தெற்காக உலகை அளப்பதாக நினைப்போம். நாம் என்ன காண்போம்- விசித்திரமான மனிதர்களின் பேராட்சி - வேடிக்கையாக அவர்களுடைய பெரும் வீழ்ச்சி. ஆங்கிலோ - சாக்ஸன் காட்டுமிராண்டிகளின் படையெடுப்பு, மொகஞ்சதாரோவில் ஆரியர்களின் படையெடுப்பு - ரோம சாம்ராஜ்யத்தில் குதிரைப்படையின் குளம்பொலிகள், கிளியோ பாட்ராவின் அழகுப் படையில், அலக்சாந்தரின் உலகம் தழுவிய வெற்றிப் பேரணி, செங்கிஸ்கான், ராஷ்டிரகூடர்கள், களப்பிரர்கள், மவுரியர்கள், கஜினி, கோரி, விஜயநகரப் பேரரசு, நெப்போலியன், ஹிட்லர், முசோலினி, ஹிரோசிமா-நாகசாகி! என்ன ஆயிற்று? ஆயிரம் டன் எடையுள்ள இரும்புத் தளவாடங்களை அமைத்துப் போடப்பட்ட பாலம்தான்!

பாண்டிச்சேரியில் பாருங்கள். நாகப்பட்டணத்தில் பாருங்கள். இப்போது இரும்புத் தூள்தான் இருக்கிறது! காலம் மண்ணும் தண்ணீருமான மாபெரும் சக்திகள் - ராஜ கம்பீரங்களை எல்லாம் விழுங்கி ஏப்பமிட்டிருக்கின்றன. பேரரசுகளை எல்லாம் பொட்டைத் திடலாக்கியிருக்கின்றது. நயில் நதிக்கரையில் இருக்கும் மலைபோல் உயர்ந்த பிரமிடுகள் சொல்லும் செய்தி என்ன தம்பி! சர்வ ஆட்டங்களிலும் கடைசியில் மிஞ்சுவது சமாதிதான் என்பதல்லவா? அது நியதி. அதில் கவலைப்பட எதுவுமே இல்லை.

**வாதி – பிரதிவாதி!**

குதிரைப் படையின் குளம்பொலிக்குக் கொஞ்சமும் சளைக்காதபடி புழுதி கிளப்பிப் பீதி விளைத்தவர்கள் மதவாதிகளும்தான்! அக்கினிக் கண்டங்கள், எண்ணெய்க் கொப்பரைகள், சிரச்சேதங்கள், கழுவேற்றல்கள்! அட அறுவைச் சிகிச்சையில் மரப்பு ஊசி போடாதே என்று தடுத்தவன் எத்தனை பேர்? காலராவுக்கு மருந்து கொடுக்காதே என்று குதித்தவன் எத்தனை பேர்? பெண் - வேதனையில் - அழுதழுது - பிள்ளை பெறுவாள் - என்று பைபிளில் தேவன் சொல்லி விட்டாராம். அதற்காக, வலி - மரப்பு ஊசிகளைப் போடாதே, வலி குறைக்கும் மருந்துகளைக் கொடுக்காதே - வலி குறைக்கும் மருந்துகளைக் கொடுக்காதே - வலி அவளுக்கு விதி என்று சொன்னவர்கள், காலத்தின் பின்னோட்டத்தில் சரித்திரத்தின் காட்சிகளை, அருங்காட்சியகங்களில் பார்வையிட நேர்ந்தால், ஆம், நாம் நிச்சயம் பார்ப்போம் - பரம பிதாவின் பெயரால் கருணை வழியும் முகத்தோடு கொடுமைகளை வினியோகம் செய்தவர்களை! ஆண்டவன் கடமையாக இவர்கள் புரிந்த கொலைகள், செய்த மாபாதகங்கள், அட்டூழியங்கள் கொஞ்சமா? மனிதத் தொகுதியின் ஒரு பகுதி - ஒரு காலகட்டத்தில், இரத்தமும் சதையும், உயிருமாக இவர்களுக்கும் பணயம் கட்டி செத்தது -



செத்துப் பிழைத்தது - பிழைத்துதான் வந்திருக்கிறது. எனவே சர்வ ஆட்டங்களிலும் - சர்வ ஓட்டங்களிலும் மிஞ்சுவது எது என்றால் -

**மனித மேம்பாட்டுச் சிந்தனை**

சிந்தனை; மனித மேம்பாட்டுச் சிந்தனைகள்! ஒரு நாகரிகத்தின் சாறுபோல, ஒரு ஆயிரம் ஆண்டுத் தமிழ் மக்களின் சிந்தனைத் தொகுப்புபோல திருக்குறள் இல்லையா? ஆங்கில சமூக வாழ்வு - அரசியல் - மந்திரம் - தந்திரம் - அத்தனையும் இணைப்பதாக ஷேக்ஸ்பியர் என்ற ஒரே மனிதனின் சிந்தனைகள் இல்லையா? ஷேக்ஸ்பியரின் முழு வேலைகள் - என்ற அந்தப் புத்தகமே பெரிய சைஸ் புத்தகம் - அதில் பொடி எழுத்தில் இரண்டாயிரம் பக்கத்திற்கு மேல் அத்தனையும் தத்துவத் தொகுப்புகள்! ஒரு ஆயிரம் ஆண்டுகள் - சினிமாக்காரர்கள் படம் பிடிக்கவும், எழுத்தாளர்கள் மேற்கோள் காட்டவும், உலகம் முழுதும் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கவும் ஷேக்ஸ்பியர் சிந்தனைகளே என்றால் - அது எளிய செய்தியா? சொந்த அறிவல்ல - வெறும் தொகுப்புதான் என்றே வைத்துக் கொண்டாலும் அது அறிவும் விவரமும் கொண்ட மாபெரும் பண்டக சாலை போல ஷேக்ஸ்பியரின் ஒரே நூல் இருக்கின்றது. ஷேக்ஸ்பியர் காலத்தில் அரசர்களிடம் உதைபட்டிருக்கலாம். தேவடியாள்களிடம் தேநீர் யாசித்துக் குடித்திருக்கலாம். பிச்சை எடுத்திருக்கலாம். ரோமப் பேரரசும்,

> **அனல் வீசும் எழுத்துக்களால் ஆரியத்தைச் சுட்டெரித்த எழுத்தாளர் சங்கமித்ரா முடிவெய்திவிட்டார். ஆனாலும் அவர் எழுத்துக்கள் உயிர்த் துடிப்புடன் வாழ்கின்றன. பெரியாரை மதிப்பீடு செய்து, அவரது பேனா முனையிலிருந்து வெடித்து எழுந்த இந்தக் கருத்து விதைப்பை, அவரது நினைவாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பதிவு செய்கிறது.**

ஆங்கில சாம்ராஜ்யமும் செய்ய முடியாத காரியங்களை ஒரு தனி மனிதன் - ஷேக்ஸ்பியர் செய்திருக்கிறான்.

**எழுத்தல்ல – செயல்!**

எழுத்து ஒரு வகை; சாய்வு நாற்காலி விட்டு எழ முடியாதவர்கள் - உயிருக்குப் பயந்தவர்கள் - வேறு வழி தெரியாதவர்கள் எழுதி வைத்துவிட்டுத்தான் போக வேண்டும். ஷேக்ஸ்பியர், ஷா, வால்டேர் ஸ்பினோசா, நீட்ஷி, கான்ட் - எல்லாப் பயல்களும் எழுதி வைத்து விட்டுப் போனார்கள். எழுதியாவது வைத்தார்களே - அது சிறப்புதான். எழுதியதைவிடச் சிந்தித்துப் பிரச்சாரம் செய்தவர்களும் இருந்தார்கள். கிரேக்கத்தில் சாக்ரட்டீஸ், சீனத்தில் கன்பியூசியஸ், இந்தியாவில் புத்தர்! நடையாக நடந்து, ஊர் ஊராகத் திரிந்து அறிவை, அன்பை, தாம் அறிந்த வாழ்க்கை நெறிகளை பிரச்சாரம் செய்தார்கள். இந்தப் பிரச்சாரங்கள் - பகுத்தறிவு இயக்கமாக, புத்தமதமாக, கன்பியூசியன் சிந்தனைகளாகப் பிறகு வளர்ந்து அப்படி ஒரு வகை. மதமாக வளர்ந்து பிரிந்து உடைந்து அழிந்து அப்படி ஒரு வகை!

**அடி, உதை**

எழுத்தாவது, பேச்சாவது, எடுடா கத்தியை என்று காரியத்தில் இறங்கியவர்களும் உண்டு. குருகோவிந்தர் - ஒரு குரு மட்டும் அல்ல, ஒரு போர் வீரரும்கூட! சீனத்தின் மாசேதுங் 30 ஆண்டுகள் - சீனத்தின் தென் பகுதி மலைச் சரிவுகளில் பதுங்கிக் கொண்டு - உலகின் மாபெரும் சக்திகளை எதிர்த்துப் போரிட்டார். தமிழ் ஈழத்தில் நடப்பது என்ன? தத்துவ பரிவர்த்தனையா? ஜீவ மரணப் போராட்டம்! மனிதச் சுரண்டல்களை எதிர்த்து மனித வர்க்கம் நடத்தும் ரத்த யாகம்! உலக வரலாற்றில் எத்தனையோ போர்கள், கொலைகள், ரத்தக் களறிகள் - சில சிலரின் ஆசை வெறிகளால்; பல பல சூழ்நிலைகளில் மனித விடுதலை முயற்சிகளினால்! ஒரு சில மிகச் சில மட்டுமே மனித நேயக் காதல் சித்தாந்தங்களால் நடந்த போர்களாகும். மனித மேம்பாட்டுச் சிந்தனைகளால் - மனித ஒருமைப்பாட்டு எண்ணங்களால் இங்கு நடந்த போர்கள் மிகச் சில தான்! மனித மேம்பாடு - மனித ஒருமை என்றால் அதற்குப் போர் எப்படி நடத்துவது? மனிதனை எப்படி அழிப்பது? அதுதான் சிக்கல்!

**வாழ்ந்தவர்களும் – செய்தவர்களும்!**

எனவே உலகில் பலர் விலங்குத் தன்மையோடு, உணவு, இன விருத்தி என்று வாழ்ந்து ஒழிந்ததும் உண்மை. சிலர் பேரரசு ஆண்மைகளோடு, போர், யுத்தம், உலக சாம்ராஜ்யம் என்று கனவு கண்டு, அலைந்து போரிட்டு, கொஞ்சம் வென்று, கொஞ்சம் தோற்று மாண்டதும் உண்மை. ஒரு சிலர் - சுரண்டல் முடியும் என்றால் மனிதனையும் சுரண்ட முடியும்; அடக்க முடியுமென்றால் மனிதனையும் அடக்க முடியும்; ஆள முடியும் என்றால் மனிதனையும் ஆள முடியும் - என்று மத மோட்ச பிதிர்லோக ஏற்பாடுகளுடன் தர்பார் நடத்தியதும் பிறகு நிர்வகல்ப சமாதி அடைந்ததும் உண்மை. இடை யிடையே மனித மேம்பாட்டுச் சிந்தனையாளர்கள் தோன்றுவதும் சிந்தனை மாளிகைகளில் ஒட்டடை அடிப்பதும் தூசு தட்டுவதுமாக இருந்து மறைந்ததும்கூட உண்மைதான். இத்தனை உண்மைகளுக்கும் இடையே -

**இந்த மண் – இது வாழ்வு – இதை எண்ணு!**

இத்தனை போர் பூசல், ஆட்சி, மதம், சித்தாந்த வேதாந்தங்களுக்கிடையே இந்த மண் - அது தொடரவில்லையா? நாகப்பட்டணத்து இரும்புப் பாலங்கள் என்னவாயின? ரோம சாம்ராஜ்யத்தின் வைரமணி மாளிகைகள் எங்கே போயின? கால ஓட்டத்தில் அவை கபளீகரமாகி ஜீரணிக்கப்பட்டன. அவை அப்படித்தான் படும், பட்டும்கூட - இமய உயரமும், பசிபிக் ஆழமும் இந்த மண்ணில் உண்டா இல்லையா? உலகம் இருக்கும். எத்தனையோ கோடி ஆண்டுகளுக்கு இருக்கும். இருக்கும் இந்த உலகம் வருகின்ற - வாழ்கின்ற மனிதர்களின் வீடாக இருக்கும். அவர்கள் அந்த வீட்டை இடிப்பார்கள்; மாற்றி அமைப்பார்கள், வாழ்வார்கள். அதில் என்ன முக்கியம்? உலகின் தன்மைக்கேற்ப - வாழ்வின் தேவைக்கேற்ப - மனித உணர்வு - அறிவுக்கேற்ப - மனித வாழ்வுக்கு உடன்பாடான ஏற்பாடுகள் இடிக்கப்பட மாட்டாது; மனிதத் தேவைக்கான கண்டுபிடிப்புகள் தூக்கி எறியப்பட மாட்டாது! சக்கரம் - எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது. அதை உலகம் தூக்கி எறியுமா? நெருப்பு - தற்செயலாக மனிதன் கண்ணில்பட்டது. நெருப்பின்றி வாழ முடியுமா? அப்படிக் கண்டுபிடிப்புகளில் எல்லாம் பெரிய கண்டுபிடிப்பு எது என்றால் -

***ஏ, மனிதனே! உன் அறிவை***
***தூசு படியாமல் பார்த்துக் கொள்!***
***ஒட்டடை பிடிக்காமல் செய்துகொள்!***
***அது உனக்கும் உதவும்;***
***உனது சந்ததிக்கும் உதவும்!***
***இந்த உலகிற்கும் எல்லாருக்கும் உதவும்!***

என்ற கண்டுபிடிப்புதான். இதைச் செய்தவர் பெரியார்.

ராஜ கம்பீர - மதவாதமவுடீக - புத்திச - பிரச்சார அடி உதை சிந்தனைகளுக்கு எல்லாம் மேலே - நிரந்தர இமயமாக - அடித்தளம் தெரியா ஆழ்கடல் பசிபிக்காக இருப்பது, மனிதனே - அறிவைத் தூய்மை செய் என்ற சிந்தனைதான்!

**அதை வழங்கியவர் பெரியார்!**

**அந்த இமயமும் பசிபிக்கும் எமக்குச் சொந்தம்!**

**– நன்றி: பெரியார் 107 ஆவது பிறந்த நாள் 'விடுதலை' மலர் (1973)**

**நன்கொடை**

ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் 5.5.2012 அன்று நடைபெற்ற நாத்திகர் விழாவில் தங்கள் ஆண் குழந்தைக்கு 'கபிலன்' என்று பெயர் சூட்டியதன் நினைவாக ரூ.500 நன்கொடையாக கழக ஏட்டுக்கு வழங்கப்பட்டது.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி கேள்வி

# இராமன் பாலம் கட்டுவதற்கு முன்பு – இங்கே இராவணன், சூர்ப்பனகை எப்படி வந்தார்கள்?

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சென்னை–தாம்பரத்தில் மார்ச் 31 ஆம் தேதி நடந்த கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து:*

வால்மீகி இராமாயணத்தை சீனிவாச அய்யங்கார் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சி.ஆர். நரசிம்ம ஆச்சாரியார் தமிழில் மொழி பெயர்த்தார். அதில்... எண்பது மைல் அகலம், எண்ணூற்று எட்டு மைல் நீளத்திற்கு இராமன் பாலம் கட்டியதாகத்தான் வால்மீகி இராமாயணம் சொல்கிறது. இங்கிருந்து இலங்கைக்கு முப்பது மைல் தூரம் தான். எனவே எண்ணூற்று எட்டு மைல் நீளத்திற்கு இங்கு பாலம் கட்டியிருக்க முடியாது. அப்படியே இருந்தாலும் கூட இராமாயணப்படி இராமன் கட்டியது மிதக்கும் பாலம் தானே தவிர, நிலம் வரைக்கும் இருந்த பாலம் அல்ல. அது மட்டும் அல்லாமல் இராமாயணக் கதைப்படி இராமன் திரும்பி வந்தவுடன், இதன் வழியாக அரக்கர்கள் வந்துவிடுவார்கள் எனக் கருதி, அம்பு எய்தி பாலத்தை அழித்து விடுகிறான்.

நாம் வைக்கும் வாதங்கள் என்னவென்றால்.... சூர்ப்பனகை இங்கு வருகிறாள், அவள் தாக்கப்பட்ட பிறகு, இராவணன் இங்கு வருகிறான். சூர்ப்பனகை, இராவணன், அனுமன் ஆகிய இவர்கள் அனைவரும் ராமன் பாலம் கட்டும் முன்பே பாலம் இல்லாமலேயே போகிறார்கள் - வருகிறார்கள் என்கிறபோது, கடவுள் அவதாரம்(?) இராமனுக்கு மட்டும் எதற்குப் பாலம்?

இராமாயணக் கதைப்படி, லட்சுமணன் மற்றும் போர் வீரர்கள் எல்லாம் இறந்து விடுகிறார்கள். அவர்களை பிழைக்க வைப்பதற்காக இந்தியாவி லுள்ள சஞ்சீவி வேர் தேவைப்படுகிறது. பறந்து வந்த அனுமனுக்கு சஞ்சீவி வேர் எதுவென்று தெரியாத தால், சஞ்சீவி மலையையே தூக்கிச் சென்று விடுகிறான். அதன் மருத்துவ சக்தியால் இராமனின் படையினர் உயிர்த்தெழுந்தார்கள் என்று இராமாயணம் கூறுகிறது. மீண்டும் அந்த மலையை இங்கு கொண்டு வந்து விட்டால் இங்கு உள்ள நோய்களையெல்லாம் தீர்த்துவிடலாம் அல்லவா? எனவே இராமர் பாலத்தை பாதுகாக்க வேண்டும் என்று போராடுகிற இந்து முன்னணி போன்றவர்கள் எல்லாம், முதலில் அந்த சஞ்சீவி மலையை தேடி கண்டுபிடித்து அதை மீட்பதற்காக போராட்டம் நடத்தலாமே?

வலசை நீரோட்டம், இடசை நீரோட்டம் என்று சொல்வார்கள். அதாவது கடிகார முள் ஓடும் திசை, அதற்கு எதிர் திசை. கடலுக்கு அடியில் ஓடுகிற நீரோட்டங்கள் மூன்று மாதம் வலப் பக்கமாகவும், மூன்று மாதம் இடப் பக்கமாகவும் ஓடுகிறபோது இயற்கையாக ஏற்படுவது தான் மணற்திட்டு. இது உலகம் முழுவதும் பல இடங்களில் காணப்படுகிறது. முதல் மட்டம் பவளப் பாறைகளாகவும், அதற்கு மேல் சுண்ணாம்பு பாறைகளாகவும், அதற்கு மேல் மணலாகவும் மூன்று மட்டங்கள் இருப்பதாகவும், இவை நீரோட்டங்களால் இயற்கையாக உருவானவை என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

ஹோமோ சேப்பியன்ஸ் என்று சொல்லப்படுகிற முழு மனித இனம் தோன்றியது இரண்டு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னால். இந்தியாவிற்கு மனித இனம் வந்தது ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு தான். இங்கு கிடைக்கிற அடையாளங்களை வைத்துப் பார்க்கிறபோது, ஒரு லட்சம் ஆண்டு களுக்கு முன்பு இந்தியாவில் மனித இனமே இல்லை. இராமாயணம் நடந்ததாக சொல்லப்படுவது, பதினேழரை லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு.

பெரியார் எழுதிய இராமாயண குறிப்புகள் என்ற நூலைப் படிக்கும்போது, பொய்யான கதை என்பதை தெரிந்து கொள்ளலாம். இராமாயணத்தில் பல இடங்களில் புத்தரைப் பற்றி பேசப்படுகிறது. புத்தனும் நாத்திகனும் ஒன்று; எச்சரிக்கையாக இரு. புத்தர்கள் திருடர்கள் அவர்களிடம் ஜாக்கிரதையாக இரு என்று ஜாபாலி என்ற அமைச்சன் சொன்னதாகக்கூட அதில் வருகிறது. அதேபோல் மற்றொன்று. அனுமன் இலங்கைக்கு பறந்து செல்லும்போது கீழே பார்க்கிறார். புத்த விகாரங்கள் போல் கட்டப்பட்ட அரண்மனைகள் தெரிகிறதாம். புத்தர் வரலாற்று மனிதர். ஆய்வுகள் நடத்தப்பட் டிருக்கிறது. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இன்றைய கணக்குப்படி 2556 ஆண்டுகள். ஆகவே வால்மீகி இராமாயணமும்கூட புத்தமதம் தோன்றிய பிறகு எழுதப்பட்டவைதான். எனவே இராமாயணம் பழைய கதையும்கூட அல்ல.

இராமாயணம் போன்ற கதைகள் உலகம் முழுவதும் இருக்கின்றது. ரோம் நாட்டில் ஹோமர் எழுதிய ஒடிசி என்ற கதையும் இராமாயணம் போன்றதே. பெண்ணை கடத்திச் செல்வது, காப்பாற்றுவது உள்பட இதே காட்சிகள் அதிகம் உள்ளது. ஆனால், ஒடிசியின் கதாநாயகன் பல பெண்களுடன் தொடர்புள்ள அயோக்கியன். இந்த கதாநாயகனை யோக்கியனாக வைத்திருக்கிறார்கள். மற்றபடி ஒரே கதை தான். இப்படிப்பட்ட உலகம் முழுவதும் உள்ள கதைகளை கொஞ்சம் மாற்றி வால்மீகி எழுதியிருக்கிறார் என்பதுதான் உண்மை.

சங்பரிவார கூட்டங்களுக்குள் இப்போது விவாதம் நடக்கிறது. பி.ஜே.பி. இராமர் பாலத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்கிறது. காரணம் என்னவென்றால், அயோத்தி பிரச்சினையில் இசுலாமியர்களை எதிரிகளாகக் காட்டி, (இராமனின் அரண்மனையை, இந்து கோவிலை இடித்து மசூதி கட்டியதாக) இந்துக்களை ஒன்றாக்க முடிந்தது. இராமர் பாலம் விவகாரத்தில் நமது எதிரியாகக் காட்ட யாரும் இல்லை. எனவே, நம் அரசியலுக்கு பயன்படாது, விட்டு விடலாம் என்கிறது. சச்சார் ஆணைய அறிக்கை இருக்கிறது. அதில் இசுலாமியர் களுக்கு நிறைய சலுகைகள் செய்திருக்கிறார்கள். எனவே, அந்தப் பிரச்சினையை கையில் எடுத்தால் இதைவிட கூடுதலான இலாபம் இருக்கிறது என்று ஒரு கூட்டம் மறுப்பு தெரிவிக்கிறார்கள்.

வாஜ்பாயின் ஆதரவாளர்கள் இராமர் பாலம் விசயத்தை விட்டு விடலாம் என்கிறார்கள். அத்வானி யின் ஆதரவாளர்கள் விடக் கூடாது என்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொருத்தவரை விசுவ இந்து பரிசத் பார்த்துக் கொள்ளும், பி.ஜே.பி. தலையிடத் தேவையில்லை என்று வி.எச்.பி.யினர் சொல் கிறார்கள். இப்படி வடநாட்டு அரசியல்வாதிகள் இதை விட்டுவிட்டாலும், தமிழ்நாட்டிலுள்ள ஜெயலலிதாவிற்கு இதைவிட்டால் வேறு பிரச்சினை இல்லை. ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சச்சார் ஆணைய பிரச்சினையைப் பேசுவார்கள். ஆனால், இங்கு ஜெயலலிதாவால் இசுலாமிய எதிர்ப்பை வெளிப் படையாகப் பேச முடியாது. எனவே ஜெயலலிதா விற்கு இந்தப் பிரச்சினை தேவைப்படுகிறது.

இலங்கையைச் சுற்றி அனைத்து கப்பல்களும் போகிறபோது, கொழும்பு துறைமுகம் சென்று எரிபொருள் நிரப்பிக் கொண்டு செல்ல வேண்டும். எனவே வணிகம் பெருகுவதற்கான வாய்ப்பு கொழும்பில் இருக்கிறது. சேது கால்வாய் திட்டம் அமைக்கப்பட்டால் கொழும்புவின் முக்கியத்துவம் குறைந்துவிடும். ஆக இலங்கைக்கு ஆதரவாக இந்தியாவில் இருக்கிற கைக்கூலிகளில் சிலர் நேரடியாக எதிர்க்க முடியாமல், இந்த திட்டத்தை நிறுத்த முயற்சிக்கிறார்கள்.

தமிழ்நாடு வளர்வது பொறுக்காமலோ, இலங்கை அரசின் மறைமுக தூண்டுதலாலோ, இப்படி நடக்கிறது என்றுதான் கலைஞர் அவர்கள்கூட பேசினார்கள். புலிகளின் ஆதரவாளர் என்று சொல்லிவிடுவார்கள் என்ற காரணத்தினாலோ என்னவோ அதோடு நிறுத்திக் கொண்டார். இதை செய்கிறவர்களைப் பார்த்தால் தெரியும். இந்தத் திட்டத்திற்கு எதிராக எழுதும் 'இந்து' இராமிற்கு 2004 ஆம் ஆண்டு 'லங்கா ரத்னா' (இங்கு வழங்கும் பாரத ரத்னா போன்றது) என்ற பட்டம் இலங்கையில் வழங்கியுள்ளார்கள். இலங்கை நாட்டின் மிக உயரிய விருதை அந்நாட்டு குடிமகன் அல்லாத, இந்திய நாட்டின் குடிமகனான 'இந்து' இராமிற்கு வழங்கு கிறார்கள் என்றால், இவர் இலங்கைக்கு ஆற்றி யிருக்கும் சேவை எவ்வளவு இருக்கும்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'இந்து' இராம். சுப்ர மணியசாமி போன்ற இலங்கைக்கு கைக்கூலிகளாக இருப்பவர்கள் இதை எதிர்க்கிறார்கள். எனவே இந்த கோணத்திலும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ரொமிலா தாப்பர் என்பவர் எழுதியிருக்கிறார். அதற்கு முன்பு இரவிக்குமார்கூட ஒரு கட்டுரை எழுதினார். ஆதரிப்பது எதிர்ப்பது என்பது, "சுற்றுச் சூழல் கெட்டுவிடும், சுனாமி வந்துவிடும், கடல் வளங்கள் பாதிக்கப்படும், கடல்வாழ் தாவரங்கள் அமுக்கப்படும்விடும். இப்படி ஏதேனும் காரணங்கள் இருந்தால் அதைச் சொல்லி எதிர்ப்பதில் வேண்டுமானால் நியாயம் இருக்கிறதே தவிர, இராமன் பெயரைச் சொல்லி எதிர்ப்பதில் எந்த நியாயமும் இல்லை" என்று. ஆனால், அதுவும்கூட, முப்பது மைல் நீளமுள்ள மணல் திட்டில், முன்னூறு மீட்டர் மட்டுமே வெட்டவிருக்கிறார்கள். ஒப்பீட்டளவில் பார்த்தால் ஒரு இருபது அடி சுவரில் இரண்டு செ.மீ. அளவிற்கு துளையிடுவது போன்றது. நமது வீடுகளில் ஒயரிங் செய்ய சுவரை உடைப்பார்கள் அல்லது சுற்றுச்சுவர் கட்டும்போது இரண்டு அங்குல இடைவெளிவிட்டுக் கட்டுவார்கள். ஒப்பீட்டு அளவில் இவ்வளவுதான்.

தமிழ்நாட்டிற்கான வளர்ச்சித் திட்டம் ஒன்று தடுக்கப்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அறிவியல் ஆதாரமற்ற ஒரு கதை காரணமாக சொல்லப்படு கிறது. சொல்லப்படுகிற கதையும் தமிழர்களைத் தாழ்த்துகிற, வடவர்களை உயர்த்துகிற, ஒரு கதை அல்லது திராவிடர்களைத் தாழ்த்துகிற, ஆரியர்களை உயர்த்துகிற ஒரு கதை. எனவே நாம் இவற்றை எதிர்க்க வேண்டியதும், இதை மக்களிடையே விளக்க வேண்டியதும் நமது கடமை ஆகும்.

நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்கு பதில் அளித்ததில், திட்டம் தொடங்குவதற்கு யாரேனும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களா? என்று கண்டறிய, 2004 செப்டம்பர் முதல் 2005 பிப்ரவரி வரைக்கும், ஆறு கடலோர மாவட்டங்களிலும், மூன்று சுற்றுகளாக, மொத்தம் பதினான்கு இடங்களில் மக்கள் கருத்தறியும் நிகழ்வு நடத்தப்பட்டதாக கூறப்பட்டது. எந்த தரப்பில் இருந்தும் இதற்கு எதிர்ப்பு வரவில்லை. அப்போது இந்த திட்டத்தைக் கொண்டுவர வேண் டும் என்ற ஜெயலலிதா, இப்போது எதிர்க்கிறார்.

பெரியார் ஒரு முறை சொன்னார், "நான் தமிழ்நாடு தமிழருக்கே என்றேன். அண்ணா அவர்கள் சென்னை ராஜ்ஜியத்தை தமிழ்நாடு என்று பெயர் மாற்றி விட்டார். பாதி வேலை முடிந்தது. இனி தமிழருக்கே என்று மாற்றுவது மட்டும் தான் நம் வேலை" என்று. அதுபோலவே இதுவரை ஆடம் பிரிட்ஜ் என்று சொல்லி வந்ததை இராமர் பாலம் என்று சொல்ல வைத்துவிட்டார்கள். இனி இதுபற்றி பேசுகிறவர்கள் ஆடம் பிரிட்ஜ் என்று சொல்லாமல், இராமர் பாலம் என்று மட்டுமே பேசுவார்கள். இது இந்துத்துவா அமைப்புகளுக்கு கிடைத்துள்ள ஒரு வெற்றிதான்.

எம்.ஆர். இராதா நடித்த நாடகத்தின் பெயர் இராமாயணம் தான். ஆதித்தனார் தனது பத்திரிகை யில் அதை கீமாயணம் என்று எழுதினார். கி.சுப்ர மணியம் சட்டமன்றத்தில் பேசும்போது, கீமாயாணம் என்ற நாடகம் நடப்பதாக பேசினார். இதைக் கண்டித்து, இராதா நடிப்பது கீமாயாணம் அல்ல, அதுதான் உண்மையான இராமாயணம் என்று அப்போது பெரியார் ஒரு அறிக்கை விடுத்தார். ஆனால், இன்றளவிலும் இராதா, கீமாயணம் என்ற நாடகத்தைப் போட்டார் என்று சொல்லப்படுகிறது. பத்திரிகைகள் அப்படி ஆக்கிவிட்டன. அது போலவே இராமர் பாலம் என்று பேசப்படுவதற்கு பத்திரிகையின் பங்கும் அதிகமாக இருக்கிறது.

முதலில் பிருந்தா காரத் (சி.பி.எம்.) என்பவர், பகவான் இராமரைப் பற்றி சொல்லியிருக்கக் கூடாது என்று சொன்னார். எப்படி இமயமலை என்பது உண்மையோ, கங்கை என்பது உண்மையோ அது போல இராமர் என்பதும் உண்மை என்று சட்ட அமைச்சர் பரத்வாஜ் (காங்கிரஸ்காரர்) பேசினார். இந்த பரத்வாஜ் தான் 1980-85 வாக்கில் சட்டத்துறை இணை அமைச்சராக இருந்தார். 1949 இல் அயோத்தியை சர்ச்சைக்குரிய பகுதி என்று அறிவித்து உள்ளே நுழையக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். 1989 இல் இராஜீவ்காந்தியின்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மாட்டிறைச்சி உணவுத் திருவிழாவுக்கு ‘மனுதர்மக் கும்பலின்’ எதிர்ப்பு

பார்ப்பனர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டவர்கள் என்பதற்கு அவர்களின் வேதங்களே சான்று கூறுகின்றன. வால்மீகி இராமாயணத்தில் இராமன் மாட்டுக்கறியை சுவைத்து சாப்பிட்டதை விரிவாக எடுத்துக் கூறுகிறது. புத்தர் இயக்கம் கால்நடைகளை தீயிலிட்டு எரிக்கும் பார்ப்பன யாகங்களை எதிர்த்தது. உழைக்கும் மக்களின் உற்பத்திக் கருவிகளான ஆடு மாடுகள், உயிருடன் நெருப்பில் பொசுக்கப்படும் யாகத்தால், விவசாயம் கடும் நெருக்கடிக்குள்ளானது. எனவே விவசாயத்தை தொழிலாகக் கொண்ட திராவிடர்கள் புத்தரின் கருத்துகளை ஏற்றனர். பார்ப்பனர்களின் செல்வாக்கு இழந்தது. மீண்டும் தங்களை உயிர்ப்பித்துக் கொள்ள பார்ப்பனர்கள் புத்த மதத்தில் மக்கள் செல்வாக்குள்ள கருத்துகளை தங்கள் கருத்துகளாக ‘சுவீகரித்து’க் கொண்டனர். அப்போதுதான் பார்ப்பனர்கள் ‘மாட்டிறைச்சி’ சாப்பிடுவதை கைவிடுகிறார்கள். ‘சைவ’த்துக்கு மாறுகிறார்கள்.

மாட்டிறைச்சி உண்பவர்கள் தீண்டத்தகாதவர்கள்; இழிவானவர்கள் என்ற மனுதர்ம சிந்தனையை பார்ப்பன சிந்தனையை சமூகத்தில் திணித்தார்கள். இப்போதும் இங்கே உணவு முறையில் மூன்று பிரிவினர் உண்டு.

ஒன்று - சைவம்;

இரண்டு - அசைவம்;

மூன்று - மாட்டிறைச்சி சாப்பிடும் அசைவம்.

அதிலும் ‘செத்த மாட்டை’ சாப்பிடுவதற்கும் அந்த மாட்டை தூக்கிப் போய் புதைப்பதற்கும் ஒரு ‘சமூகம்’, ஒரு ‘சாதிப் பிரிவு’ உருவாக்கப்பட்டது.

அந்த இழிநிலை இன்றும் தொடருகிறது.

அண்மையில் அய்தராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் மாட்டிறைச்சி உணவுத் திருவிழா ஒன்றை நடத்தினர். உடனே ‘மனுதர்ம’வாதிகள் எதிர்த்தனர். இப்படி ஒரு உணவுத் திருவிழாவை நடத்தியதை பெரும் குற்றம் என்று சீறினார்கள். சில பேராசிரியர்கள் மாணவர்களைத் தூண்டிவிட்டு நடத்தியதாக புகார் செய்தனர். மாநில காவல்துறையும், உணவுத் துறையும் சில பேராசிரியர்களிடம் விசாரணை நடத்தியுள்ளது.

இப்படி ஒரு ‘மாட்டிறைச்சி உணவு விழா’ நடத்தினாலே அது ஏதோ இரு சமூகங்களுக்கிடையே ‘பகைமையை’ உருவாக்கும் முயற்சியாக கருதப்படுகிறது. ‘மனுதர்ம’ பார்ப்பன சிந்தனை சமூகத்தை ஆட்டிப் படைப்பதே இதற்கு காரணம். இந்த நிகழ்வை முன் வைத்து, ‘உணவுக் கண்காணிப்பு வழியாக ஒழுங்குபடுத்தப்படும் கலாச்சாரம்’ என்ற தலைப்பில் பேராசிரியர் கல்பனா கண்ணபிரான் ‘இந்து’ நாளேட்டில் (மே 1, 2012) விரிவான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

உணவு முறையில் மதம், சமூக அந்தஸ்து, சாதிகள் பின்னிப் பிணைந்து நிற்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பல்வேறு கலாச்சாரங்களுக்கிடையே உணவு முறைகள் மாறுபட்டு இருப்பது இயற்கை என்றாலும், இந்தக் கலாச் சாரங்கள் சாதியோடும், சமூக வாழ்நிலையோடும் மதத்தோடும் பிணைக்கப்பட்டுவிட்டன. குறிப்பாக மாட்டிறைச்சியும் பன்றி இறைச்சியும் இழிவு கலாச்சார அடையாளங்கள் என்று சித்தரிக்கப்படுகின்றன.

இந்த கலாச்சாரம் அரசியலாக கட்டமைக்கப்படுகிறது. உஸ்மானியா பல்கலையில் மாட்டிறைச்சி உண்பதை ஏற்றுக் கொண்ட மாணவர்கள் நடத்திய ‘உணவுத் திருவிழா’ கூட சட்டவிரோதமானது என்று கருதக்கூடிய அரசு நிர்வாகமும் சமூகமும் இருக்கவே செய்கின்றன.

இது எதைக் காட்டுகிறது?

**மனுதர்ம சிந்தனை உயிருடன் இருக்கிறது என்பதைத் தானே?**

**எனவேதான் பெரியார் திராவிடர் கழகம் அறைகூவி அழைக்கிறது.**

**மனுதர்மத்துக்கு தடைபோடு;**

**மனுதர்மத்தை நெருப்பில் போடு!**

## மேட்டூரில் ‘மே’ நாள்

பெரியார் தொழிலாளர் கழகம் மேட்டூர் அனல் மின்சார நிலையத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் சார்பாக மே 1 தொழிலாளர் தினத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சேலம் மேற்கு மாவட்ட தலைவர் தோழர் கி.முல்லைவேந்தன் தலைமை வகித்து கழகக் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினார். பெரியார் தொழிலாளர் கழக தலைவர் சக்திவேல், செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொடியேற்று விழா நிகழ்வில் ஏராளமான தொழிலாளர்களும் கழகப் பொறுப்பாளர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி, ‘மே’ நாள் கொண்டாடப்பட்டது.

## ‘திராவிடர் இயக்க வரலாறு’ அடுத்த இதழில்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியின்போதுதான் நுழைவதற்கு முதல் அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கு காரணமானவர்தான் பரத்வாஜ். அடுத்து சிலா பூஜை என்ற அடிக்கல் நாட்டு விழா செய்தபோது, அதற்கு அனுமதி வழங்க காரணமாயிருந்தவரும் இவர்தான்.

அம்பிகாசோனி கலாச்சாரத்துறை அமைச்சராக இருந்தபோது, அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் எழுதினார்கள். இராமாயணம் என்பதில் நடந்ததாக சொல்லப்படுகிற நிகழ்ச்சிகள் நடந்ததுமில்லை. அதில் வருகிற கதாபாத்திரங்கள் வாழ்ந்ததுமில்லை என்று. இப்படி சொல்வதற்கு முன்னால்கூட ஒன்று சொல்கிறார்கள். இராமாயணமும் இராமரும் இந்த இந்து சமுதாயத்தின் உணர்வுகளில் எப்படி கலந்திருப்பார்கள் என்பதை நாங்கள் அறிந்தே சொல்கிறோம். உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள் இராமாயணத்தின் மீது வைத்திருக்கும் மதிப்பையும், இந்துக்களின் உணர்வுகளையும் மதிக்கிறோம். ஆனால், இருக்கிற தொழில்நுட்ப அறிவியல்களைப் பயன்படுத்தி, அறிவியல் ரீதியாக ஆராய்ந்து, உண்மையை சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதால், சொல்ல வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள்.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் முன்னாள் தலைவர் சூரஜ்பன் சொல்கிறார், “அரசு, ராமன் பாலம் இருந்ததற்கு வரலாற்று ஆவணங்கள் இல்லை என்று முதலில் தாக்கல் செய்த மனுவை திரும்பப் பெற்றிருக்கக் கூடாது. அயோத்தி பிரச்சினையின்போது வால்மீகி இராமாயணம் கி.மு. 400 இல் எழுதி முடிக்கப்பட்டிருப்பதற்குத்தான் ஆதாரங்கள் உள்ளன. 700 ஆண்டுகளுக்கு முன்பு அயோத்தியில் மனிதர்களே இல்லை என்று அப்போதே சொல்லியிருக்கிறேன்” என்று கூறினார். மக்களுக்கு அறிவியல் மனப்பான்மையை உண்டாக்க வேண்டும் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. எனவே இந்த அரசு பின்வாங்கியதன் மூலம் அரசியல் சட்டத்துக்கு எதிராக அறிவியலை தூக்கி குப்பையில் வீசி விட்டதாகத்தான் பொருள் என்று ‘பிரண்ட்லைன்’ பத்திரிகையின் கட்டுரையாளர் எழுதுகிறார்.

இராமர் பாலம் பற்றி ஆய்வு செய்வதற்கு ஒருவர் ஆர்.எஸ்.எஸ்.சால் அழைத்து வரப்பட்டார். அவர் பெயர் டாக்டர் புனிஷ்த்னேஜா. விஞ்ஞான ஆய்வு மய்யத்தின் மூத்த செயலாளராகப் பணியாற்றியவர் என்றெல்லாம். விஎச்பி. தலைவர் அசோக் சிங்கால் இவரை ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் இவர் இது சம்பந்த மாக எந்தப் படிப்பையும் படிக்காத, ஒரு பித்த லாட்டக்காரர் என்று தெரிந்து, அவரை அடுத்த மாதம், விசுவ இந்து பரிசத் அமைப்பில் இருந்து நீக்கிவிடுகிறார்கள். இவர்தான் ஆரம்பத்தில் இராமர் பாலம் என்ற பிரச்சினையைத் துவக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**(நிறைவு)**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## கழகத்தின் புதிய வெளியீடுகள்

பரப்புரைப் பயணத்துக்காக கழக சார்பில் வெளியிடப்பட்ட புதிய நூல்கள்:


இந்துவாகச் சாக மாட்டேன் - டாக்டர் அம்பேத்கர் - பக். 32; நன்கொடை : ரூ.10.
தேச பக்தி - தேசியம் என்னும் சூழ்ச்சி - பெரியார் - பக். 32; நன்கொடை : ரூ.20.
ஜனநாயகத்தின் முட்டாள்தனம் - பெரியார் - பக். 32; நன்கொடை : ரூ.20.
புராணங்களை எரிக்க வேண்டும் - பெரியார் - பக். 32; நன்கொடை : ரூ.20.
சபாஷ் அம்பேத்கர் - பெரியார் - பக். 30; நன்கொடை : ரூ.10.
இடஒதுக்கீடு உரிமைப் போராட்ட வரலாறு - கொளத்தூர் மணி - பக். 46; நன்கொடை : ரூ.30.
தீண்டாமையை ஒழிக்கும் வழி - பெரியார் - பக். 32; நன்கொடை : ரூ.10.

மேற்கண்ட சிறு வெளியீடுகள் புதிதாக மக்களிடம் பரப்பப்பட்டன.

தொடர்புக்கு :
**சேலம்:** 9786316155 - **கோவை :** 9843323153
**சென்னை:** 9941613535-**புதுச்சேரி:** 9443045614-**திருச்சி:** 9865596940

## ‘இராமன் பாலம்’ புரட்டைக் கண்டித்து சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பில், “மணல் திட்டு இராமன் பாலமா? அது தேசிய சின்னமா” கண்டன ஆர்ப்பாட்டம் 7.4.2012 சனிக்கிமை மாலை 4 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் செ.நாவாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி.ஆசைத்தம்பி, திருமால், திருநாவுக்கரசு, பெ.கோவிந்தன், லோ.கோபி, சு.தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வழக்கறிஞர் ப.கண்ணன், பெரியார் தி.க. இல. சிலம்பன், ந. வெற்றிவேல், ந. அய்யனார், விடுதலை சிறுத்தை ஆ.இராமலிங்கம், வி.வி.மு. பெரியார் வெங்கட் ஆகியோர் உரையை தொடர்ந்து, நங்கவள்ளி அன்பு கண்டன உரை நிகழ்த்தினார். ச.கா. இளையராசா, கு.க. சாக்ரடீசு, விழுப்புரம் மா.கணேசன், சங்கர் உள்பட பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ஆர்ப் பாட்டத்தில் இராமர் பாலம் தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டும் என்கிற அதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கண்டித்து தோழர்கள் முழக்கமிட்டனர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th May 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே 24, 2012 | புரட்சி 11 | முழக்கம் 19 | விலை: ரூ.2.50

## இனப்படுகொலை ஆட்சியில்இணைந்து வாழ இயலாது; ஈழ விடுதலை மலரும் வரை இந்த முழக்கம் ஓயாது

# மக்கள் கடலில் கழகக் கூட்டம்



ஈழத்தில் முள்ளி வாய்க்காலில் மே 16, 17, 18 தேதிகளில் ராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்ட தமிழர்களுக்கும், தமிழ் ஈழத்தில் ராணுவத்தால் மரணத்தைத் தழுவிய பல லட்சம் தமிழர்களுக்கும் வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு உருக்கத்துடனும் உணர்வலைகளுடனும் கடந்த 19 ஆம் தேதி சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பெரியார் திராவிடர் கழக சார்பில் நடைபெற்றது.

“இனப்படுகொலை ஆட்சியின் கீழ் இணைந்து வாழ இயலாது; ஈழ விடுதலை மலரும் வரை இந்த முழக்கம் ஓயாது! அய்.நா.வே! இந்திய அரசே! ஈழ விடுதலைக்கு வாக்கெடுப்பு நடத்து” என்ற முழக்கத்தை முன் வைத்து நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். பெரும் மாநாடு போல் காட்சி அளித்தது.

தேனிசை செல்லப்பா குழுவினரின் எழுச்சி இசையோடு தொடங்கிய நிகழ்ச்சிக்கு கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியை முன்னின்று மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கரு. அண்ணாமலை வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் குமாரதேவன், பொதுச்செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை. இராமகிருட்டிணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். தொடர்ந்து சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இனமான நடிகர் சத்யராஜ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சிறப்புரையாற்றினர்.

நடிகர் சத்தியராஜ் தனது உரையில்:

“ஈழத் தமிழர்கள் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளில் நான் அய்தராபாத்தில் படப்பிடிப்பில் இருப்பதால் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. அதற்காக அனைத்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடமும் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து நிகழ்ச்சிகளின் சார்பில் பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே நான் அய்தராபாத்திலிருந்து படப்பிடிப்பு நிகழ்ச்சிக்கு இடையே வந்துள்ளேன். பெரியார் திராவிடர் கழக மேடையில் நான் நின்று பேசுவதை பெருமையாகக் கருதுகிறேன். பெரியார் திராவிடர் கழக நிகழ்வுகளை நான் உன்னிப்பாகக் கவனித்து வருகிறேன். இந்த இயக்கம் மிகச் சிறந்த சிந்தனையாளர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கோவைப் பகுதியில் நான் எனது ஊருக்குப் போகும் போதெல்லாம் பல கிராமங்களில் தீண்டாமைக்கு எதிராக இரட்டை குவளை முறைகளுக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் கூட்டங்களின் சுவரொட்டிகளைப் பார்க்கிறேன். ஈழத்திலே வாக்கெடுப்பு ஏன் நடத்த வேண்டும் என்பதை விளக்கி இந்த கூட்டத்துக்கான துண்டறிக்கையின் பின்பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றே போதும். இதைவிட சிறப்பாக வாக்கெடுப்புக்காக காரணங்களைக் கூற முடியாது. உலகத் தரம் மிக்கதாக இந்த கருத்துகள் அமைந்துள்ளன.

இங்கே இந்தக் கழகத்தின் சார்பில் பேசிய அதன் பொறுப்பாளர்கள் ஒவ்வொருவருமே மிக அருமையாகப் பேசினார்கள். மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த இயக்கத்துக்கு ஆதரவைத் தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டியது எங்களது கடமை. அதற்காகவே இதில் பங்கேற்க வந்தேன். பிரபஞ்சத்தில் உலகம் உருவானபோது இத்தனை நாடுகள் கிடையாது. பல்வேறு நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக விடுதலை பெற்றுள்ளன. அதேபோல் ஈழமும் ஏன் தனி நாடாக விடுதலை அடையக் கூடாது? உண்மையில் சொல்லப் போனால், தமிழ் ஈழம் தமிழர்களிடமிருந்து சிங்களர்களால் அபகரிக்கப்பட்ட, திருடப்பட்ட நாடு. திருட்டுக் கொடுத்த நாட்டை திரும்பக் கேட்கிறோம். அதற்காக அய்.நா. என்ற காவல் நிலையத்தில் புகார் செய்கிறோம். நமது நாட்டை திருடியவனிடமிருந்து

(4 ஆம் பக்கம்)

### தி.க.விலிருந்து விலகி கழகத்தில் இணைந்தனர்

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடந்த கழகக் கூட்டத்தில் தாம்பரம் மாவட்ட திராவிடர் கழகத் தோழர்கள் இளைஞரணி தலைவர் இரா. பரந்தாமன் தலைமையில் குன்றத்தூர், அனகாபுத்தூர் பகுதிகளைச் சார்ந்த தோழர்கள் சிலம்பம் சிவாஜி, து.முருகவேல், கு.கரிகாலன், மு.திவாகரன், ஆர். விஜயகுமார், ஜெய்சி, பிரபு, முருகன், நெடுஞ்சேரலாதன், சார்லஸ் ஆன்டணி மற்றும் செல்லதுரை ஆகியோர் திராவிடர் கழகத்திலிருந்து விலகி, கழகத்தில் இணைந்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி அனைவருக்கும் கருப்பு ஆடை அணிவித்தார்.

**தலையங்கம்**

## நாடாளுமன்றத்தில் சாதி எதிர்ப்புக் குரல்!

*“ஜனநாயகமும் – சாதி அமைப்பும், ஒன்றையொன்று சார்ந்து பயணிக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. ஜனநாயகம், சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. சாதி அமைப்போ, சமூகத்தில் மேலானவர், கீழானவர் என்ற வேறுபாடுகளின் மீது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அமைப்புகளில் ஏதேனும் ஒன்று சாகடிக்கப்பட வேண்டும். இன்றைக்கு நாம் ஒன்றுபட்டு, ஜனநாயகத்தின் பெருமைகளை முழுமையான மகிழ்ச்சியில் கொண்டாடுகிறோம். அதே நேரத்தில் நாம் சாதி அமைப்பை நம்மிடமுள்ள அனைத்து சக்திகளையும் பயன்படுத்தி, வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்.”*

– இவ்வாறு நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டிருப்பவர் நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் திருமதி மீரா குமார். நாடாளுமன்றம் தொடங்கி 60 ஆண்டுகள் உருண்டோடிய நிலையில் அதற்காக கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் (மே 13, 2012) தமது உள்ளக் குமுறலை சமூகத்தின் உண்மை நிலையை படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஜாதி அமைப்புக்கும், பார்ப்பனிய இந்து மதத்துக்கும் எதிராக வாழ்நாள் இறுதிவரை உறுதியாகக் குரல் கொடுத்த பாபு. ஜெகஜீவன்ராம் அவர்களின் மகள் மீராகுமார். எனவே, தந்தை வழி வந்த சிந்தனை மரபு அவரைப் பேச வைத்திருக்கிறது. அவரைத் தவிர, இந்த உண்மையை நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு வேறு எவரும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. அவர் தொடங்கி வைத்த விவாதத்தைத் தான் சரத் (யாதவ்), லல்லு பிரசாத் (யாதவ்) வழி மொழிந்திருக்கிறார்கள்.

அவரே குறிப்பிட்டதுபோல, ஜனநாயகமும்–சமத்துவமும், ஒன்றுக்கொன்று முரணாக இருந்தும், ஜனநாயகத்தின் நோக்கத்தையும், சாதியமைப்பு சீரழித்துவிட்டது. ஜனநாயகத்தை உறுதி செய்யும் தேர்தலில் ‘ஜாதி’ தான் முதன்மையாக பங்காற்றுகிறது. வேட்பாளர் தேர்வுக்கும் கட்சிகளில் தலைவர்களின் அரசியல் வலிமைக்கும் அடித்தளமாக சாதியே பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய உறுப்பினர்களைக் கொண்டே நாடாளுமன்றமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. புத்தமதத்தை செரிமானம் செய்த பார்ப்பனியம், ஜனநாயகத்தையும் ஜாதி நாயகமாக்கிவிட்டது. இதனால்தான் பெரியார், “பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படாவிட்டால், இந்தியாவில் எதிர்கால ஜனநாயகம் பார்ப்பன நாயகமாகிவிடும்” – என்று 1925 ஆம் ஆண்டிலேயே எச்சரித்தார்.

தீண்டாமை – ‘ஜாதி’ எதிர்ப்பு என்பது சாதி அமைப்பையே முழுமையாக எதிர்ப்பதில் தான் முழுமை பெற முடியும் என்பதே, பெரியாரும், அம்பேத்கரும் முன் வைத்த உறுதியான கருத்து. மீரா குமார் அவர்களும் தமது உரையிலே இதை துல்லியமாக சுட்டிக்காட்டியிருக்கிறார். (We should also root out caste system with all the might at our command)

ஜாதி அமைப்பை வேரோடு அழித்தொழிப்பது என்பதற்கான அர்த்தம் என்ன? அது மனுஸ்மிருதியில் இருந்தாலும் பகவத்கீதையில் இருந்தாலும் இராமாயணத்தில் இருந்தாலும் எதிர்த்து ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான். சாதி அமைப்பைப் பாதுகாக்கும் மேற்குறிப்பிட்ட “புனிதங் களை” கேள்விக்குள்ளாக்கினாலேயே “மதத்தைப் புண்படுத்துகிறார்கள்” என்று பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள் கூக்குரலிடுகின்றன. அரசியலமைப்பின் சிவில் சட்டத் தொகுதிகளில் இந்துக்களுக்கான பிரிவுகளில் பலவும் சாதியமைப்பைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. காலங்காலமாக பின்பற்றப்படும் பழக்க வழக்கங்களை மாற்றக் கூடாது (customs and usage) என்ற பிரிவும் சாதியமைப்புக்கு உறுதியான பாதுகாப்பை வழங்கியுள்ளது. சமூகத்தில் தீண்டாமை சட்டப்படி குற்றம் என்று கூறும் சட்டம், இந்து மதத்தில் மட்டும் நிபந்தனைக்குட்பட்ட “தீண்டாமை”யைப் பாது காத்துக் கொண்டிருக்கிறது. கோயில் கர்ப்ப கிரகத்தில் “சூத்திரர்களும் பஞ்சமர் களும்” இன்று வரை தீண்டப் படாதவர்களாகவே நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இப்படி ‘பழக்க வழக்கங்களின்’ பெயரால் சாதியை பார்ப்பனியத்தைப் பாதுகாப்பதை ஒழித்துக் கட்ட அம்பேத்கர் 1948 இல் இந்து சட்டத் திருத்த வரைவை முன்மொழிந்தார். அவர் தயாரித்த வரைவு, இந்தப் “பழக்க வழக்கங்கள்” தொடர்ந்து கடைபிடிக்கப்படுவதை தடை செய்தது. வைதீக வெறியரான அன்றைய குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத், பார்ப்பனிய நிறுவனத் தலைவர் காஞ்சி சந்திரசேகரேந்திர சரசுவதி மற்றும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், பிரதமர் நேருவை மிரட்ட, நேருவும் பார்ப்பனியத்துக்கு பணிந்து, அந்த ‘வரைவு’ சட்டமாகாமல் தடுத்து விட்டார். அம்பேத்கர் அதனாலேயே தனது சட்ட அமைச்சர் பதவியை உதறித் தள்ளினார். இதே இந்திய நாடாளுமன்றம் தான் இந்த வரலாற்று நிகழ்வுகளைக் கடந்து வந்திருக்கிறது. பெரியாரும் அரசியல் சட்டம் உருவாக்கப்படும்போது இது குறித்து கவலையுடன் சுட்டிக் காட்டினார்.

“இப்போதுள்ள பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கின. இந்திய யூனியன் அமைப்பு முறையிலும் ஜாதி வகுப்பு விஷயமாய் செய்யப்படப் போகும் விதிகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கிற வார்த்தைகளுக்கு இடமளிக்கப்படுமா? இந்து மத சமுதாய ஆதாரங்கள், இடங்கள் முதலியவைகளில் பிராமணன், சூத்திரன், ஹரிஜனன் என்கிற வார்த்தைகள் இருக்க இடம் அளிக்கப்படுமா? அந்தப்படி இருப்பவைகளை சர்க்கார் அங்கீகரிக்குமா? என்கிற விஷயம் இதுவரை தெளிவாக்கப்படவில்லை” என்று சுட்டிக்காட்டினார். (குடிஅரசு 24.4.1948)

பெரியாரும் அம்பேத்கரும் ஒழிக்கப்பட வேண்டும் என்று போராடிய சாதியமைப்புக்கான பாதுகாப்புகள் சட்டத்தில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. நியாயமாக ‘திராவிட அரசியல்’ கட்சிகள் இந்தச் சாதி எதிர்ப்புக் கருத்துகளை நாடாளுமன்றத்தில் பேசியிருக்க வேண்டும். ஆனால், கொள்கை அடையாளத்தை இழந்து நிற்கும் அக்கட்சிகள் வாய் திறக்காத நிலையில் ஒற்றைக் குரலாய் நின்று ‘சாதியமைப்பை’ச் சாடிய மீராகுமார் அவர்களைப் பாராட்டுகிறோம்!

# ‘விவாக’ங்களை நிர்ணயிக்கும் மனுதர்மம்: நியாயப்படுத்தும் பார்ப்பன ஏடுகள்

‘மனுதர்மம்’ இப்போது எங்கே இருக்கிறது? இப்படி ஒரு கேள்வி சிலரால் முன் வைக்கப்படுகிறது. அவர்கள் நாட்டின் நடப்புகளைப் புரிந்து கொண்டால், இந்தக் கேள்வியை கேட்க மாட்டார்கள். ‘மனுதர்மம்’ புதிய பதிப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ‘தினமலர்’, ‘துக்ளக்’ போன்ற பத்திரிகைகள், அதன் உள்ளடக்கங்களைப் பாராட்டி, நூல் மதிப்புரைகள் எழுதி வருகின்றன.

இதோ கடந்த 13 ஆம் தேதி ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் வெளி வந்த ஒரு கட்டுரையை சுட்டிக்காட்டுகிறோம். திருமணங்களில் பார்ப்பனர்கள் உச்சரிக்கும் மந்திரங்கள் பற்றி ‘மனுதர்மம்’ என்ன கூறுகிறது என்பதை விளக்கி சாது ஹரிதாசா என்ற வேதப் பார்ப்பனர் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார். மனுதர்மத்தை முழுமையாக நியாயப்படுத்தி எழுதப்பட்டுள்ளது இக்கட்டுரை. ‘மனுதர்மம்’ குலத்துக்கு ஒரு திருமண முறையை முன் வைப்பது மிகவும் நியாயமானதுதான் என்றும், அதை முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் மோட்சம்


MARRIAGE MANTRAS ACCORDING TO MANU

போகலாம் என்றும் கூறுகிறது அக்கட்டுரை.

வர்ணங்களைக் கடந்து சாதிகளைக் கடந்து நடக்கும் திருமணங்களில் பிறக்கும் குழந்தைக்கு சமூக அங்கீகாரம் கிடைக்காது என்ற ‘நல்ல நோக்கத்தோடு’ தான் மனுதர்மம் குலங்களுக்கு இடையே கலப்பு ஏற்படக் கூடாது என்று கூறுகிறதாம். ஒவ்வொரு வர்ணத்துக்கும் (பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்கள்) - ’மனுதர்மம்’ விதிக்கும் கடமைகள் அவர்களின் ‘குண’த்தை வெளிப்படுத்துவதாம். இப்படி மனுதர்மத்தை நியாயப்படுத்துகிறது அக்கட்டுரை.

மனுதர்மத்தை 2012-லும் நியாயப்படுத்தும் பார்ப்பனர்கள், பல உண்மைகளை மறைத்து விடுகிறார்கள். இது தொடர்பாக கடலாங்குடி நடேச சாஸ்திரிகள் தொகுத்த ‘மந்திரப்பிரச்சனம்’ என்ற நூலிலிருந்து சில உண்மைகளை சுட்டிக் காட்டுகிறோம்.

திருமணங்களில் பார்ப்பனர்கள் ஓதும் மந்திரங்கள் ‘மனுதர்மம்’ அல்ல; ஆனால், எந்தெந்த ‘குலத்துக்கு’ எத்தகைய திருமண சடங்குகளை நடத்த வேண்டும் என்று ‘மனுதர்மம்’ தான் கூறுகிறது.மனுதர்மம் 8 வகையான திருமண முறைகளை ‘கட்டளையிட்டுள்ளது’ பிராம்மம், தைவம், ஆர்ஷம், பிராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸசம், பைசாசம் - என்ற 8 வகை திருமண முறைகளில் ஒவ்வொரு குலத்துக்கும் பின்பற்ற வேண்டிய முறையை ‘மனுதர்மமே’ நிர்ணயிக்கிறது. இதன்படி - தர்மத்தை விட்டு விலகாத உயர்வான திருமண முறைகளில் ஒன்று ‘பிராஜாபத்யம்’; இந்தத் திருமண முறை ‘பிராமணனுக்கு’ மட்டுமே உரியது; சத்திரியன், வைசியன், சூத்திரனுக்கு இந்த முறையைப் பயன்படுத்தும் உரிமையே இல்லை என்கிறது மனுதர்மம்.

சத்திரியர்களுக்கு காந்தர்வம், ராட்சம் என்ற திருமண முறை மட்டுமே உரியதாம். ஆணும் பெண்ணும் காதலிப்பதை மணமகன் தரப்பில் எதிர்த்தால், அவர்களை எதிர்த்து போரிட்டு வென்று பெண்ணை மண முடிப்பது ‘ராட்சசம்’ என்ற திருமண முறை.

‘பைசாசம்’, ‘ஆசுரம்’ என்ற இரண்டு திருமண முறைகளும் எக்காலத்திலும் செய்யக் கூடாதவை என்கிறது ‘மனுதர்மம்’. பெண்களை ஏமாற்றி உடலுறவு கொள்ள முயற்சிப்பதை ‘பைசாசம்’ என்கிறது மனுதர்மம். இத்திருமண முறைகளை பார்ப்பன புரோகிதர்கள எவருக்குமே செய்யக் கூடாது என்று ‘மனுதர்மம்’ கூறுகிறது. ஆனால், மேற்குறிப்பிட்ட இரண்டு திருமண முறையும், வைசியர், சூத்திரர்களுக்கு மிகச் சிறந்தது என்று அதே மனுதர்மம் கூறுகிறது.

இப்போது புரோகிதப் பார்ப்பனர்கள் நடத்தும் திருமணங்களில் ஓதப்படுவது வேதங்கள்தான். ஆனால், எந்த சாதிக்கு எந்த வகையான திருமணம் என்று ‘மனுதர்மம்’ விதித்த கட்டளைப்படியே இன்றும் திருமண சடங்குகளை பார்ப்பன புரோகிதர்கள் நடத்தி வருகிறார்கள். ‘சூத்திரர்’ களுக்கு, பார்ப்பன புரோகிதர்கள் திருமணம் செய்து வைக்க ‘மனுதர்மம்’ தடை போட்டுள்ளதால், “சூத்திரர்”களை பூணூல் போட்டு, “இரு பிறப்பாளராக்கி” பார்ப்பன புரோகிதர்கள் சத்திரியர்களுக்கு உரிய திருமண சடங்குகளை நடத்தி வருகிறார்கள்.

**ஆக, இப்போதும் ஒவ்வொரு புரோகிதப் பார்ப்பனர் நடத்தும் திருமண முறைகளை ‘மனு தர்மமே’ கட்டளையிட்டு வருகிறது. ‘மனுதர்மம்’ சட்டப்படி தடை செய்யப்படாததால் தானே இந்த நிலை?**

இப்படி குலத்துக்கு ஒரு திருமண முறையை பேசுவதே மனுதர்மம். அதிலும் “சூத்திரர்களை” திருமணத்துக்கு உரியவர்களாகவே அங்கீகரிக்காத ஒரு ‘இன ஒதுக்கலை’ வலியுறுத்துவது மனுதர்மம். இந்த மனுதர்மம் தடை செய்யப்பட வேண்டாமா?

அம்பேத்கரை அவமதித்து வெளியிட்ட கார்ட்டூனைத் தடை செய்யக் கோரும்போது அதைவிடக் கொடுமையான அம்பேத்கரால் தீயிடப்பட்ட ‘மனுதர்ம’த்தை தடை செய்யப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டாமா?

**– இரா**

### இந்திய துரோகங்களை விளக்கி கழகத் தலைவர் உரை

# சலகண்டாபுரம் – தாரமங்கலத்தில் கழகக் கூட்டங்கள்

***சேலம் (மேற்கு) மாவட்டக் கழகம் தீவிரமாக பரப்புரை இயக்கங்களை நடத்தி வருகிறது. பம்பரமாய் சுழலும் கழகத் தோழர்களின் செயல்பாடுகள். கடந்த இதழின் தொடர்ச்சி.***

சேலம் மேற்கு மாவட்டம் சலகண்டாபுரத்தில் 10.2.12 வெள்ளி மாலை 5 மணிக்கு கழகத்தின் சார்பாக மத்திய அரசின் தமிழின விரோதப் போக்கைக் கண்டித்து மாநாடு, பொதுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் கி.முல்லைவேந்தன், செயலாளர் சூரியகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். மாலை 5 மணிக்கு பறை முழக்கத்துடன் துவங்கிய நிகழ்ச்சி 30 நிமிடங்கள் பறை முழக்கமும், 5.30 மணி முதல் 7.00 மணி வரை காவை இளவரசனின், ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்ச்சியும், 7 மணி முதல் 8 மணி வரை பகுத்தறிவு இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இரவு 8 மணிக்கு தொடங்கிய பொதுக் கூட்டம், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுமார் ஒன்றரை மணி நேரம் சிறப்புரையாற்றினார். மாலை 5 மணிக்கு தொடங்கிய நிகழ்ச்சி இரவு பத்தரை மணிக்கு நிறைவுற்றது. குமார் நன்றி கூறினார்.

சலகண்டாபுரம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற கூட்டத்தில் 2000 பேருக்கு மேலாக திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1971 ஆம் ஆண்டு சலகண்டாபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு உரையாற்றியது தொடர்பான செய்திகளை அன்றைக்கு பெரியார் உரையாற்றிய கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்த மூத்தவர்கள், தங்களது அனுபவங்களை தோழர்களுடன் பகிர்ந்து கொண்டதும், அவர்களில் சிலர் இன்றும் மிகுந்த மனநிறைவுடன் நன்கொடை தந்து உதவியதும் நெகிழ்ச்சியானது. குறிப்பாக சலகண்டாபுரம் சாமி போட்டோ ஸ்டுடியோ செந்தில்குமார், திருக்குறள் புத்தக நிலையம் பாண்டியன் ஆகியோர் சுவரொட்டிக்கான முழு செலவை பகிர்ந்து கொண்டனர். இரவு தோழர்களுக்கான உணவிற்குண்டான செலவினை சண்முகராசா (சி.பி.எம்.) ஏற்றுக் கொண்டதுடன், சேலம் மாவட்டத்தில் எங்கு கழக நிகழ்ச்சி நடந்தாலும் தனது பங்களிப்பாக ரூ.2000 தருகிறேன் எனக் கூறியது, நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்களை உற்சாகமூட்டியது.

தோழர்கள் யாருமே இல்லாத ஊரிலும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்த முடியும் என்பதையும் பெரியார் கொள்கைப் பிரச்சாரத்துக்கு உதவிட பொது மக்கள் எப்போதும் தயாராக இருக்கிறார்கள் என்பதையும்உணர முடிந்தது. மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், நங்கவள்ளி அன்பு, கிருட்டிணன், இராசேந்திரன், சிவக்குமார், குமார், மேச்சேரி தமிழ் இளஞ்செழியன், செந்தில் குமார், அருள்செல்வம், காவை இளவரசன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

### தாரமங்கலம்

சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் கழகத்தின் சார்பாக இந்திய தேசத்தின் துரோகம் ஈழத்தில், முல்லை பெரியாறில், கூடங்குளத்தில் என்ற தலைப்பில் 1.3.2012 வியாழன் மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் துவங்கியது. முதல் நிகழ்வாக பறை முழக்கம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சமர்பா குமரனின் மற்றும் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இன எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மேட்டூர் கோவிந்தராசு ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்ச்சி நடத்தினார். நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் தலைமை தாங்கினார். தோப்பூர் கண்ணன் வரவேற்புரையுடன், மாவட்ட அமைப்பாளர் முத்து மாணிக்கம், தாரமங்கலம் ஒன்றிய பொறுப்பாளர் சரவணன் முன்னில வகித்தனர். மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு உரைக்குப்பின், கழகத் தோழர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இரவு 10 மணிக்கு குடந்தைபாலன் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

நிகழ்ச்சியில், இந்திய தேசியத்தின் துரோகத்தை விளக்கி, நகர் முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டறிக்கை வழங்கப்பட்டது.

- ஒரு சில தோழர்கள் மட்டுமே உள்ள தாரமங்கலத்தில் சுமார் ரூ.30000/- நன்கொடையாக திரட்டப்பட்டது.
- ஒரு வார காலத்தில் நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- குடந்தை பாலன் துணைவியார் வனிதா, மகன்கள் திலீபன், குட்டிமணி, சிவராசன் ஆகியோர் பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற தோழர்களுக்கு தங்கள் குடும்பத்தின் சார்பாக வான்கோழி பிரியாணி விருந்து அளித்து உபசரித்தனர்.

பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், செயலாளர் சூரியகுமார், அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, குடந்தை பாலன், அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள் விஜயகுமார், குமரப்பா, கிருட்டிணன், தோப்பூர் கண்ணன், பவளத்தானூர் தனசேகர், சரவணன் ஆகியோர் செய்திருந்தனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான தோழர்களும், பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

### மேட்டூரில் ஆர்ப்பாட்டம்

மேட்டூரில் தொடர் மின்வெட்டுக்கு காரணம் மத்திய அரசின் சதியே! மத்திய அரசே, நெய்வேலி மின்சாரம் முழுமையும் தமிழ்நாட்டுக்கே வழங்கு! மின்சாரம் வேண்டும்; ஆனால் மக்களை கொல்லும் அணு மின்சாரம் வேண்டாம்! கூடங்குளம் அணுமின் நிலையத்தை திறக்காதே! என வலியுறுத்தி, மத்திய அரசுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 19.3.2012 திங்கள் மாலை 5 மணிக்கு மேட்டூர் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. கண்டன ஊர்வலம் ஆர்ப்பாட்டத்திற்கு கழக மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார்.

கண்டன ஊர்வலம் ஆர்ப்பாட்டத்தில் ஆதி தமிழர் பேரவை, நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி ஆகிய அமைப்புகளை சார்ந்த தோழர்களும், பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, தமிழக வாழ்வுரிமை கட்சி அமைப்பாளர் வைத்தியர் மணி, ஆதி தமிழர் பேரவை மாவட்ட அமைப்புச் செயலாளர் வெ.சிவராமன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக மேட்டூர் நகரத் தலைவர் பாஸ்கர் நன்றி கூறினார். முன்னதாக மேட்டூர் மாதா கோவில் அருகில் கண்டன ஊர்வலம் தொடங்கி, சின்ன பார்க், தினசரி அங்காடி, காந்தி சிலை, பேருந்து நிலையம் வழியாக தலைமை தபால் நிலையத்தை ஊர்வலம் வந்து சேர்ந்தது.



"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535



ஊர்வலத்தில் அணுஉலைக்கு எதிராகவும், மத்திய அரசின் தமிழின விரோத போக்கைக் கண்டித்தும் மத்திய அரசுக்கு எதிராக ஒலி முழக்கம் எழுப்பப்பட்டது. கோரிக்கைகளை விளக்கி ஏராளமான துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன.

### பெரியார் படிப்பகம் திறப்பு

சேலம் மேற்கு மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள காவேரி கிராஸ் பகுதியில் பெரியார் படிப்பகம் திறப்பு விழா, பொதுக் கூட்டம் 28.3.2012 புதன் மாலை 6 மணிக்கு நடைபெற்றது. படிப்பகம் திறப்பு விழா பொதுக் கூட்ட நிகழ்வுகளுக்கு மாவட்ட தலைவர் கி.முல்லைவேந்தன் தலைமை வகித்தார். காவேரி கிராஸ் பகுதி மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். தோழர்கள் ரத்தினசாமி, ரகுநாதன் முன்னிலை வகித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பலத்த கரவொலிக்கிடையில் படிப்பகத்தை திறந்து வைத்து கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.

படிப்பக திறப்பு விழாவில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பறை முழக்கமும், பகுத்தறிவு இன எழுச்சி இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. தலைமை கழக பேச்சாளர் கோபி வேலுச்சாமி நகைச்சுவையுடன் பகுத்தறிவு கருத்துகளை எடுத்துரைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் படிப்பகங்களின் தேவை குறித்தும் பெரியாரியலின் தேவைகள் குறித்தும் விளக்கமாக சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் சூரிய குமார், சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்கள் சக்திவேல், டேவிட், வீரமணி, மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள் விஜயகுமார், கிருட்டிணன் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த பெரியார் பிறந்த நாளில் புதிய கிளை காவேரி கிராஸ் பகுதியில் தொடங்கப்பட்டது. குறைந்த அளவு தோழர்கள் இருந்தாலும் பெரியார் கொள்கையின் அவசியத்தை உணர்ந்த காரணத்தால் மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி வழிகாட்டுதலுடன் ஒரே மாதத்தில் காவேரி கிராஸ் பகுதியில் ஒரு படிப்பகத்தை கட்டி முடிக்கின்ற பணியினை நிறைவு செய்த காவேரி கிராஸ் பகுதி தோழர்கள் புதிய தோழர்களுக்கு வழிகாட்டிகள். காவேரி கிராஸ் பெரியார் படிப்பகத்தின் சுவர்களில் அம்பேத்கர் படங்களை கழக ஓவியர்கள் குமரப்பா, ஓவியர் தர்மராசு, அண்ணா துரை ஆகியோர் சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

மேட்டூர் நகர கழக சார்பாக பொறுப்பாளர்கள் பாஸ்கர், சம்பத்குமார் மற்றும் தோழர்கள் படிப்பக திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு மாமிச உணவு வழங்கி, படிப்பக திறப்பு விழா நிகழ்வுகளுக்கு தங்களின் பங்களிப்பை சிறப்பாக செய்திருந்தனர். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் கிராமப் பகுதியான இங்கு அமைந்துள்ள பெரியார் படிப்பகம் கட்ட பெரும் தொகை அம்மக்களிடையே நன்கொடையாகத் திரட்டப்பட்டது.

காவேரி கிராஸ் சுந்தரம் நன்றி கூற நிகழ்ச்சி இரவு 10 மணிக்கு நிறைவுற்றது.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## மனம் திறக்கிறார் நீதிபதி கே. சந்துரு

# சாதியமைப்புப் பற்றிய விவாதங்கள் தொடங்கப்பட வேண்டும்

*கிராம ஊராட்சிகளில் காந்தியடிகள் சொன்னதுபோல் கிராம ராஜ்யம் வாழ்கிறதா, அம்பேத்கர் சொன்னது போல சாதி ஆதிக்க சக்திகளின் ராஜ்யம் நிலவுகிறதா என உயர்நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு கேள்வி எழுப்பினார்.*

திருநெல்வேலியில் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் ஏப்.28 அன்று உள்ளாட்சி அமைப்புகளின் பட்டியலின பிரதிநிதிகளின் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது. கலந்துரையாடலை துவக்கி வைத்து நீதிபதி கே. சந்துரு உரையாற்றினார். அவரது பேச்சு:

அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பிரிவு தான் தீண்டாமை ஒழிப்பு. அந்த வகையில் பொதுவான வழக்கங்களை மீறி, ஒரு நீதிபதியாகிய நான் இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்பது என்பது நாங்கள் எடுத்த உறுதி மொழியின் ஒரு பகுதிதான். மேலும், தற்போது எங்களுக்கு விடுமுறை காலம் என்பதால் என்னுடைய பணிக்கு எந்த பங்கமும் இல்லாமல் நான் இந்த கூட்டத்தில்கலந்து கொள்கிறேன்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் விவேகானந்தர் சென்னையிலுள்ள தன்னுடைய ஆசிரியர் மூலம் உதவி பெற்று அமெரிக்காவிற்குச் சென்றார். அப்படி சென்ற அவர், தனது ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில், "இந்து மதத்தைப் பரப்ப நான் இங்கு வந்தேன். இந்தியாவில் மனிதர்கள் மனிதர்களை மனிதர்களாக நடத்துகிறார்களா?" என்று கேள்வியை எழுப்புகிறார். இது 19 ஆம் நூற்றாண்டின் சூழல் என்பதல்ல. இன்றைக்கும் இந்த நிலை இப்படியே தான் தொடர்கிறது.

ஊராட்சி மன்ற வழக்குகள் பல உயர்நீதிமன்றத்திற்கு வரும்போது, தீர்ப்புகள் பல நேரங்களில் ஊராட்சிகளுக்கு எதிராக வழங்கப்படுவதை பார்க்கிறோம். காரணம், இந்த வழக்குகளை திறமையாகக் கையாள்வதற்கான வழக்குரைஞர்கள் இருப்பதில்லை. எனவே, இந்த வழக்குகளை கையாள்வதற்கென்று பிரத்யேகமான வழக்குரைஞர்களை ஊராட்சிகள் நியமித்துக் கொள்ளலாம். ஊராட்சிகள் அதற்கான அதிகாரம் பெற்ற அமைப்புகள் தான். மேலும், ஊராட்சி மன்ற தலைவர்களும் திறம்படச் செயல்படுவதற்கான தகுதியினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தலித்துகளுக்கு இரட்டை வாக்குரிமை வேண்டும் என்று கோரிக்கை எழுந்தபோது 1930 ஆம் ஆண்டு வந்த பூனா ஒப்பந்தத்தைப் பற்றி கேள்விப்பட்டிருப்போம். அன்றைக்கு தலித் மக்களின் இந்த கோரிக்கைக்கு எதிராக காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தபோது, டாக்டர் அம்பேத்கருக்கு இக்கட்டான ஒரு சூழல் ஏற்பட்டது. அண்ணல் காந்தியின் உயிர் என்ற உணர்ச்சிப்பூர்வமான போராட்டம் ஒரு புறம்; தலித் மக்களின் உரிமைப் போராட்டம் மறுபுறம். அந்தச் சூழலில் டாக்டர் அம்பேத்கர் எடுத்த முடிவு வரலாற்றுப் புகழ் பெற்றது. இலட்சியம் தொடரும், தற்போது இந்த கோரிக்கையினை விலக்கிக் கொள்கிறேன் என்றார். இது வரலாறு.

உண்மையான அதிகாரம் என்பது உள்ளாட்சிகளுக்கு இருக்கிறதா என்றால், இல்லை என்பதே பதிலாக இருக்கும். உள்ளாட்சித் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவர முடியும். அவர்களுடைய நிதி அதிகாரத்தை இல்லாமல் செய்ய முடியும். மாவட்ட ஆட்சியாளரின் விசாரணைக்கு உட்படுத்த முடியும் எனும்போது, தலித் ஊராட்சி மன்றத் தலைவர்களின் நிலை இன்னும் மோசம்.

இத்தகைய உள்ளாட்சி அதிகாரம் பற்றிய கருத்து மோதலும் காந்தியடிகளுக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையில் இருந்தது. காந்தி, கிராமம் வாழ்கிறது என்றும், கிராம ராஜ்யம் பற்றியும் பேசுகிறார். டாக்டர் அம்பேத்கர், கிராமங்களில் ஆதிக்கச் சக்திகளின் அதிகாரம் இருக்கும் வரையில், கிராமங்கள் வாழ்வதற்கான வாய்ப்பில்லை என்பதோடு, கிராமங்கள் நசுக்கப்படுகின்றன என்கிறார். இதுபோன்ற விவாதங்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை. அதற்கு பொருள் இன்று இந்த சூழல் என்பதே இல்லை என்பதல்ல. இதற்கான விவாதங்கள் மக்களிடையே இல்லை. கருத்து மோதல்கள் இல்லை. இப்படிப்பட்ட விவாதங்களை நாம் மக்கள் மத்தியில் பெரிய அளவில் கொண்டு செல்ல வேண்டும். சில அடிப்படையான கருத்து மோதல்களை உருவாக்க வேண்டும்.

தலித்துகளுக்கென்று இந்த அரசாங்கம் விசேஷமாக நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆனால்,அவை முறையாக தலித் மக்களுக்குச் சென்று சேர்வதில்லை. வரையறுக்கப்பட்ட அதிகாரத்திற்குள் உள்ளாட்சி தலைவர்களால் சுதந்திரமாக செயல்பட முடிவதில்லை. பல கிராமங்களில் செயல்படும் சுய நிதிக் கல்லூரிகள் ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்று வரி கட்ட வேண்டும். ஆனால், தடை யாணை வாங்கி வைத்துக் கொண்டு இந்த வரியினை கட்டுவதில்லை. அரசாங்கம் பஞ்சாயத்துகளுக்கு வரவேண்டிய நிதி பற்றி போதிய அக்கறை செலுத்துவதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம்.

ஒரு ஊராட்சியில் ஒரு நூலகம் கட்ட தீர்மானிக்கப்படுகிறது. அந்த கிராம சபை அலுவலகத்திற்குப் பக்கத்தில் ஒரு ஜாதி இந்துவின் வீடு உள்ளது. அவர் நூலகம் இங்கு இயங்கினால், தலித் மக்கள் இந்த தெருவுக்குள் வருவார்கள் என்பதால், ஊராட்சியை அணுகி ஒரு புறம்போக்கு நிலத்தில் நூலகத்தை அமைப்பது என்ற தீர்மானத்தை இயற்றச் செய்கிறார். அதன் பிறகு, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில், நூலகத்தை புறம்போக்கு நிலத்தில் கட்ட வேண்டும் என்று கோரி அவரே வழக்கு தொடர்கிறார். இந்த வழக்கின் உள்ளடக்கம் தீண்டாமை என்பது தான். ஆனால், தீண்டாமை வெளியே தெரியாமல் வழக்கு ஜோடிக்கப்படுகிறது. இதில் உள்ளது ஆதிக்கச்சாதி வெறி என்பதாகும். இங்கே பெரும்பான்மையினரின் முடிவு என்பதோ, தீர்மானம் என்பதோ பிரச்சனையல்ல. சமூகநீதி அமலாக்கப்பட வேண்டும் என்பதுதான். அந்த அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

பிறக்கும்போதும் ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த உலகம் இது. இறப்பிற்குப் பிறகும் சாதி ரீதியான சுடுகாடுகளும், இடுகாடுகளும் இங்குள்ளது. "சமரசம் உலாவும் இடமே" என்ற சினிமா பாடல் அனைவரும் கேட்டிருப்பீர்கள். அதனால்தான், ஒவ்வொரு பஞ்சாயத்திலும், ஒவ்வொரு மாநகராட்சியிலும், ஒவ்வொரு ஊராட்சியிலும் தனித் தனி சுடுகாடு இருக்கக் கூடாது. முதலில் வருபவர்களுக்கு முதல் இடம் நிலை இருக்க வேணடும். இறப்பின் போதாவது சமூகநீதி பாதுகாக்கப்பட வேண்டும்.

**– நன்றி: 'தீக்கதிர்' 29.4.2012**

## கழக ஏட்டுக்கு 100 சந்தாக்கள்: தென் சென்னை மாவட்டக் கழகம் வழங்கியது

30.4.2012 அன்று காலை சென்னையில் மறைந்த கழகத் தோழர் பத்ரி நாராயணன் 8 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரது நினைவிடத்தில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்களும், குடும்பத்தினரும் வீரவணக்கம் செலுத்தினர். அன்று மாலை இராயப்பேட்டை வி.எம். தெருவில் தோழர் பத்ரி நாராயணன் நினைவு நாள் மற்றும் திராவிடர் இயக்க நூற்றாண்டு விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கத்தில் புதுச்சேரி தலித் சுப்பையாவின் விடுதலைக் குரல் கலைக் குழுவினர் சாதி ஒழிப்பு மக்கள் விடுதலை, ஈழ விடுதலை இசை நிகழ்ச்சி நிகழ்த்தினர். தோழர் பா. செல்வக்குமார் தலைமை யில் சு.பிரகாசு முன்னிலை வகிக்க, கழகப் பொதுச்செய லாளர் விடுதலை இராசேந்திரன், மனித நேய மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் அப்துல் சமத், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனி டம் 100 பெரியார் முழக்க சந்தாக்களுக்கான பட்டி யலையும், ரூ.15000 பணத்தையும் வழங்கினார்.




(முதல் பக்கத் தொடர்ச்சி)

நாம் திரும்பக் கேட்பது தவறா?" என்று நடிகர் சத்யராஜ் பேசினார்.

இறுதியில் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக எழுச்சியுரையாற்றினார் வைகோ. பெரியார் திராவிடர் கழகம் போர் வீரர்களின் பாசறை என்று கூறிய அவர், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டக் களத்தில் இணைந்து செயல்படுவோம் என்று அறைகூவல் விடுத்தார்.

### கூட்டத்தின் வெற்றிக்கு உழைத்த தோழர்கள்

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடந்த எழுச்சியான பொதுக் கூட்டத்திற்கு கடந்த ஒரு மாதமாக இரவு பகல் பாராது உழைத்த தோழர்கள்:

தென் சென்னை மாவட்ட பொருளாளர் கரு. அண்ணாமலை, எம்.ஜி.ஆர். நகர் பகுதி பொறுப் பாளர்கள் சு. துரைராசு, அ.குமரேசன், செ.செயசீலன், வி.பொற்கோவன், வழக்கறிஞர் ப.அமர்நாத், சிவ. வல்லரசு, ஆட்டோ சங்கர், க.சரவணன், ம.மூவேந்தன், மு.வெங்கடேசன், மதிவாணன், மாசிலா விநாயகமூர்த்தி, தஞ்சை தமிழன், மணி மொழியான், வ.தாமரைக்கண்ணன், சிவ.மனோகரன், தி.செல்வமணி, டயில்ஸ் குமார் உள்ளிட்ட தோழர்கள்.


நகரம் முழுதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட தோடு அறிவிப்பு பதாகைகள் ஏராளமாக நிறுவப்பட்டிருந்தன. நாளேடுகளிலும் விளம்பரங்கள் செய்யப்பட்டன. கழகத் தோழர் செல்லையா முத்துசாமி, இணையதளம் வழியாக நிகழ்ச்சியை நேரடி ஒளிபரப்பு செய்தார்.

ஈழத் தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் நடத்திய பாலியல் வன்முறைகள் இனப் படுகொலைகளை விரிவாக எடுத்துரைத்தார். இறுதி வரை கடல் போல் திரண்டிருந்த மக்கள் கருத்துரைகளைக் கேட்டனர். மு.வெங்கடேசன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th May 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | மே 31, 2012 | புரட்சி 11 | முழக்கம் 20 | விலை: ரூ.2.50


## பார்ப்பனர் என்றால் ஆய்வாளராம்; அந்தணர் என்றால் உயர்ந்தோராம்; பெரியார் தமிழனை அடிமையாக்கி இனப் பெருமையை சிதைத்தவராம்

# நாம் தமிழர் கட்சியின் "கொள்கை" அறிவிப்பு

'நாம் தமிழர் கட்சி'யின் கொள்கை ஆவணம், கோவையில் கடந்த 18 ஆம் தேதி வெளியிடப்பட்டுள்ளது. மக்களிடம் கட்சிக் கொள்கையாக முன் வைக்கப்பட்டுள்ள அந்த ஆவணம், பெரியாரை தமிழினத்தின் பகைவராக சித்தரிக்கிறது.


திராவிட எதிர்ப்பு என்ற போர்வையில், பெரியார் எதிர்ப்பை முன் வைத்து, பார்ப்பனர்களுடன் நேச சக்திகளாக அடையாளம் காட்டிக் கொள்ள முன் வந்திருக்கும் சில குழுக்களோடு, நாம் தமிழர் கட்சியும், தன்னை இணைத்துக் கொள்ள முன் வந்திருக்கிறது. பெரியார் முன் வைத்த கருத்துகள் தமிழர்களையும் ஏமாற்றும் நோக்கம் கொண்டவை. அவைகளில் தமிழர்களை அடிமைப்படுத்தும் உள்நோக்கம் இருந்தது என்றும் அந்த ஆவணம் கூறுகிறது. அந்த ஆவணத்தில் பெரியாருக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள சில கருத்துகளை மட்டும் அப்படியே இங்கு பதிவு செய்துள்ளோம்.

1938 ஆம் ஆண்டில் பார்ப்பன இராஜகோபாலாச்சாரி இந்தியைத் திணித்தபோது, அதை எதிர்த்துத் தமிழ்நாடு தமிழருக்கே என்று முழக்கமிட்டு, போராட்டத்துக்குத் தலைமை ஏற்றதே நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் மட்டும் தான் என்றும், அவர்களை ஆதரிப்பதுபோல் ஆதரித்து பெரியார் நாடகமாடி பிறகு தமிழர்களை அடிமைப்படுத்தத் தொடங்கி விட்டதாகவும் பெரியார் பெயர் குறிப்பிடாமல், அந்த ஆவணம் கூறுகிறது.

"தமிழ்நாட்டில் சாதிக் கொடுமைகளையும், சமற்கிருத மேலாளுமையையும் புகுத்தி, நிலை நிறுத்திய கிருட்டிண தேவராயர் காலத்திலிருந்தே, தமிழர் நிலங்களைப் பறித்துத் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த திராவிடர்கள் மட்டும், இராசாசி இந்தியைத் திணித்தபோது, அதை எதிர்த்துத் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் ஆகியோர் தலைமையில் திரண்ட போது, அவர்களை ஆதரிக்கிறாற்போல ஆதரித்துப் பின், தங்களுடைய தமிழரைத் தொடர்ந்து அடிமைப்படுத்தும் திட்டத்தின் கீழ், அண்ணல் தங்கோ முயற்சியினால் முகிழ்த்த தமிழர் கழகத்தை முறியடித்துத் திராவிடர் கழகத்தை நிறுவினர். திராவிட நாட்டு முழக்கத்தை முன்னெடுத்தனர்.

தமிழர் அறிவையும் தன்மானத்தையும் மீட்டெடுப் பதாக முழங்கிக் கொண்டு, "தமிழ் அறிவியல் அற்ற மொழி; அதை வாழ்வியலிலிருந்து தலை முழுகி விடுவதே அறிவுடைமை" என்று பகுத்தறிவுப் பரப்புரையும் தன்மானப் பரப்புரையும் செய்தனர். தமிழை வாழ்வியலில் இருந்துத் தவிர்க்கச் சொல்லிவிட்டு, தமிழ் வழிப்பட்ட தமிழ்த் தேசிய முழக்கமான "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற செயல் திட்டமற்ற வெற்று முழக்கத்தை அடையாளமாக முன் வைத்துக் கொண்டே, "அறிவியல் மொழியான ஆங்கிலமே, தமிழர்க்கு மதிப்புமிக்க நல்வாழ்வு தரும்" என்று பேரளவில் பரப்பினர். தமிழர்களை ஆங்கில மோக வலைக்குள் வீழ்த்தினர். மேலும், மூடநம்பிக்கை ஒழிப்பின் பெயரால், சில வரலாற்றுச் சான்றுகளையும், பல வாழ்வியல் விழுமியங்களையும் தாங்கி நிற்கிற தமிழ் இலக்கியங்களிலிருந்து, தமிழர்களை அயன்மைப்படுத்தினர். தமிழர் என்ற அடையாளம் இழிவுபடுத்தப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டது."

– என்கிறது ஆவணம்.




• ஈழத் தந்தை செல்வா, தந்தை பெரியாரிடம் தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவு கேட்டபோது, "நாங்களே அடிமையாக இருக்கிறோம்; இன்னொரு அடிமைக்கு எப்படி உதவ முடியும்?" என்று கூறியதை சிங்களத்திடம் பணிந்து போகுமாறு பெரியார் அறிவுரை கூறியதாக இந்த ஆவணம் கூறுகிறது. சிங்களமே, திராவிடம் தான் என்றுகூறும் இந்த "ஆராய்ச்சி" ஆவணம், அதனால் சிங்களர்களிடம் தமிழர்களை அடிமைப்படுத்தவே பெரியார் கருதியதாகவும் பதிவு செய்துள்ளது.

ஆவணத்திலிருந்து:

"ஈழத்தைச் சேர்ந்த திராவிடமாம் சிங்களம், தமிழர் மீது அரச பயங்கரவாதத்தை ஏவி, அழித்து வந்தது. அதை எதிர்த்துப் போராடிய தந்தை செல்வாவிற்குத் திராவிடம், சிங்களத்திடம் பணிந்து போகுமாறு அறிவுரை கூறியது. தமிழ்நாட்டிற்குள், "தமிழ்நாடு தமிழர்க்கே" என்று தான் முழங்குவதாக உரிமை கொண்டாடிய திராவிடம், "நானே அடிமை; இன்னொரு அடிமைக்கு உதவுவது எப்படி?" என்று வினவி, கைவிரித்தது.

**இந்திய ஒருமைப் பாட்டைக் காப்பாற்ற தொண்டர்களுக்கு அறைகூவல்!**

- தமிழ்நாட்டில் பின்பற்றப்பட்டுவரும் கல்வி, வேலை வாய்ப்புக்கான இடஒதுக்கீட்டினால் தங்கள் ஆதிக்கம் பறிப் போய்விட்டதே என்று குமுறிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்களின் கண்ணீரைத் துடைக்க, 'நாம் தமிழர்' கட்சி முன் வந்திருக்கிறது. சாதிவாரி இட ஒதுக்கீட்டினால் தமிழ்ச் சாதிகளுக்கிடையே முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முரண்பாடு முற்றி வருகிறதாம்.

ஆவணத்திலிருந்து:

"பற்றாக்குறைகளுக்கிடையே நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முழுமையற்றதும், பொருளற்றதும், மாநில உரிமையையும், மகளிர் உரிமையையும் பற்றிக் கவலைப்படாததும் ஆன சாதிவாரி ஒதுக்கீட்டினால், தமிழ்ச் சாதிகளுக்கிடையே முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முரண்பாடுகள் முற்றி வருகின்றன."

- பார்ப்பனர் என்ற சொல்லைத் தவிர்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ள இந்த ஆவணம், 'மனுவியல்' என்ற சொல்லை அதற்கு மாற்றாகப் பயன்படுத்துகிறது. இறுதிப் பகுதியில் 'கலைச் சொல் விளக்கம்' தரப்பட்டுள்ளது. அதில் தரப்பட்டுள்ள விளக்கங்கள்:

"அந்தணன் – ஈவு இரக்கங் கொண்ட அறநெறியாளன்

பார்ப்பான் – ஆய்வாளன், இளைஞன்

ஆரியன் – சீரியன், உயர்ந்தவன், சீரிய தவசமான கேழ்வரகு. (தர்மபுரி, சேலம் மாவட்ட வழக்கு)

பிரமணன் – பேரமணன்"

திராவிடம் பல காலக்கட்டங்களில் தமிழிலிருந்து பிரிந்து சென்று, மனுவியம் சார்ந்துப் பல்வேறு மொழிகளாய்த் திரிந்து போன கோட்பாடு.

- மேற்குறிப்பிட்ட உயர்ந்த பண்புகளைக் கொண்டவர்களே பார்ப்பனர்கள் என்பதே நாம் தமிழர் கட்சியின் பார்வை என்று ஆவணம் தெளிவுபடுத்தியுள்ளது.

மனு நெறியார் என்பதற்கு -

"ஒரு குலத்துக்கு ஒரு ஞாயம் என்று சட்டம் எழுதிய மனு என்பானின் பின்பற்றாளர்கள்" - என்று இந்த ஆவணம் விளக்கம் தருகிறது.

பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவைதான் - மனு பிறப்பின் அடிப்படையில் பிரித்த 'குலங்கள்' என்று எந்த ஒரு இடத்திலும் இந்த ஆவணம் குறிப்பிடவில்லை.

- தமிழர் அரசியல் விடுதலையை வென்று எடுக்காமல், பெரியார் முன்னிறுத்திய பார்ப்பன எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, இடஒதுக்கீடு, பெண்ணுரிமை எல்லாம் தமிழர்களை இரண்டக நிலைக்குத் தள்ளிய சீர்திருத்தமே என்று கூறுகிறது இந்த ஆவணம்.

ஆவணத்திலிருந்து:

"2000 ஆண்டுகளுக்கு மேலாக, வள்ளுவர் தொடங்கி வள்ளலார் ஊடாக மனுவிய எதிர்ப்பு மரபினைப் போற்றி வந்த அறிவு நெறிப் பொதுமைத் தமிழர் ஏற்றுக் கொள்ளும் வகையில், தமிழர்க்குத் தலைமையாய் உட்கார்ந்துகொண்டே திராவிடத்தின் குமுகாயத் தளம், மனு நெறியர் ஆளுமை எதிர்ப்பு, மனுவிய மடமை எதிர்ப்பு, சாதிய இடஒதுக்கீடு, சமனியம், பெண்ணுரிமை ஆகிய தளங்களில் எண்ணற்ற தமிழர் ஒற்றுமையுடன் பாடாற்றித் தமிழர்க்கு அறிவும் மானமும் ஊட்டி, அரசியல் விடுதலையும், பொருளியல் விடுதலையும் வாங்கித் தருவதாய் ஓங்கி உரைத்தது.

திராவிடத்தின் அரசியல் தளமும், தமிழர்க்கு அரசியல், பொருளியல் சார்ந்த முழு உரிமையைப் பெற்றுத்தந்துத் தமிழுக்கும் தமிழர்க்கும் பொற்கால நல்வாழ்வு படைப்பதாகச் சொல்லி தலைமுறை கோடிகண்ட தலைமொழியாம் தமிழின் புகழ் பாடி, தமிழர்க்குத் தமிழின்ப உணர்வு ஊட்டியது. நூற்றாண்டுப் பெருமை கொண்டாடும் திராவிடத்தின் இரு தளங்களும் தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வினைத் தீர்மானிக்கும் மேற்கட்டுமானக் கூறுகளோடு தங்கள் சீர்த்த பணிகளை நிறுத்திக் கொண்டு, அடிக்கட்டுமானக் கூறுகளான தமிழர் அரசியல் விடுதலை, பொருளியல் விடுதலை என்பவற்றில் உளதுபோலக் காட்டி, இலதாக நாட்டும் இரண்டக நிலை கொண்டனர்."

- என்கிறது இந்த ஆவணம்.

(4 ஆம் பக்கம்)

# ‘மனுவாதிகளின்’ – கடூர் தீர்மானம்

“இரு பிறப்பாளராம் வருணங்களில், முதல் திருமணத்திற்கு அதே வர்ணத்தைச் சேர்ந்த பெண்ணையே மணம் செய்ய பரிந்துரைக்கப் படுகிறது.”

– மனுநீதி அத்தியாயம் 3; சுலோகம் 12

“சூத்திரனின் மனைவி சூத்திரச்சியாகவே இருத்தல் வேண்டும்.”

– மனுநீதி அத்தியாயம் 3; சுலோகம் 13.

“மனு கலப்பு மணத்தை எதிர்ப்பவர். ஒவ்வொரு வர்ணத்தாரும் தமக்குள்ளே மணம் புரிதல் வேண்டும் என்பவர்.”

– அம்பேத்கர்.

மனுவின் இந்த பார்ப்பன சட்டங்களே சமூகத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. மனு கூறிய பிராமண - சத்திரிய - வைசிய - சூத்திரப் பிரிவுகளில் ஏற்பட்ட கலப்பு சாதிக் குழுக்களாக சமூகத்தைப் பிரித்துப் போட்டு விட்டது. இந்த சாதிக் குழுக்கள் தங்கள் சாதி அடையாளத்தை பாதுகாக்கவே துடிக் கின்றன. மீறினால் குடும்பப் பாசம் உறவுகளையே பின்னுக்குத் தள்ளிவிட்டு, பெற்ற மகளையே கொலை செய்யக்கூடிய வெறிக்கு உள்ளாகி விடுகிறார்கள். ‘தமிழினப் போராளியாக’ பெருமைபடுத்தப்படும் மருத்துவர் ராமதாசு முன்னிலையிலேயே அவரது “தளபதி”யாக அவராலேயே பெருமைப்படுத்தப் படும் காடுவெட்டிகுரு என்பவர், ‘வன்னியப் பெண் களை அன்னிய சாதியினர் திருமணம் செய்தால் வெட்டு’ என்று பேசினார். இது அப்பட்டமான ‘மனுவின்’ குரல் என்று நாம் கண்டித்தோம்.

இப்போது, கொங்கு வேளாளர் கவுண்டர் பேரவை என்ற அமைப்பிலிருந்து இதே ‘பார்ப்பனக் குரல்’ ஒலித்திருக்கிறது.

**கொங்கு வேளாளக் கவுண்டர்களின் பண்பாடு, கலாச்சாரம், குலப் பெருமைகள் அழிந்து விடாமல் காக்கவும், சாதி மோதல் ஏற்படாமல் அனைத்து சமுதாயத்தினருடனும் எப்போதும் நட்புறவை தொடரவும், கொங்கு இன மக்கள் கலப்புத் திருமணங்களை தவிர்த்து, நம் சமூகத்திற்குள்ளேயே திருமண உறவை ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழ்நாடு முழுவதும் கொங்கு வேளாள கவுண்டர்கள் வசிக்கும் கிராமந் தோறும் மற்றும் கொங்கு இன மாணவ மாணவிகள் கல்வி பயிலும் கல்லூரி தோறும் இயக்கத்தின் சார்பில் தீவிர பிரச்சாரம் மேற்கொள்வது என தீர்மானிக்கப்படுகிறது.**

- இப்படி ஒரு மனுதர்ம பார்ப்பனிய தீர்மானத்தை ஏப்.15 ஆம் தேதி கரூரில் கொங்கு வேளாளர் திருமண மண்டபத்தில் நடந்த பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளார்கள்.

மனு என்ற ஏதோ ஒரு பார்ப்பனிய மன நோயாளி, சமூகத்துக்கான சட்டங்களை நிர்ணயிக்கும் அதிகாரங்களை தனக்குத் தானே எடுத்துக் கொண்டு, சமூகத்தை பார்ப்பன சாக்கடையாக்கிவிட்டான். மனு என்பவன் ஒருவன் தானா? பலரா? அவன் காலம் என்ன? - இதற்கெல்லாம் தெளிவான விடைகள் கிடையாது. ஆனால் சமூகத்தை நாற்றமடிக்கச் செய்து நாசமாக்கிடும் பார்ப்பனிய தொற்று நோயைப் பரப்பும் அதிகாரத்தை எவனும் கையில் எடுத்துக் கொள்ளலாம் என்ற செய்தியை மனு விட்டுச் சென்று விட்டான், அதே நாசகார வழியை சாதிக் குழுக்களும் பின்பற்றத் தொடங்கி விட்டன. ஒவ்வொரு சாதி குழுவிலும் சில தனி மனிதர்களே சங்கம் அமைத்துக் கொண்டு, ஏதோ அந்த சமூகத்துக்கு தாங்களே ‘நாட்டாமை’ என்று கருதிக் கொண்டு ஆணையிடத் தொடங்கி விடுகிறார்கள்.

இப்படி ஒவ்வொரு சாதியும் தங்கள் சாதிக்குள்ளே தான் திருமண உறவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் இதைப் பின்பற்றுவார்களா?

*சாதிக்காரன் தெருவில்தான் வாழ வேண்டும்;*

*சாதிக்காரன் பள்ளியில்தான் படிக்க வேண்டும்;*

*சாதிக்கார மருத்துவரிடம் தான் சிகிச்சைக்குப் போக வேண்டும்;*

*சாதிக்காரர்களிடம் மட்டும்தான் சொத்துக்களை விற்க வேண்டும்; வாங்க வேண்டும்;*

*ஆனால், இவர்களுக்கு துணி வெளுக்க, பிணம் எடுக்க, முடிசிரைக்க, உழைத்துக் கொட்ட, அடிமைத் தொழில் செய்ய மட்டும் இவர்களுக்கு ‘கீழான’ சாதி வரவேண்டும்;*

*அப்படித்தானே?*

இந்தப் பார்ப்பனிய பிற்போக்கு கருத்துகளை ஏற்க மறுக்கும் சமத்துவத்தை நேசிக்கும் முற்போக்கு சிந்தனையாளர்கள் இந்த சாதிக் குழுக்களிலேயே ஏராளம் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம், இந்த பார்ப்பனியத்தைக் கண்டித்துக் குரல் எழுப்ப வேண்டிய சமுதாயக் கடமை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்படி ஒரு சந்தர்ப்பத்துக்காகவே காத்துக் கிடந்த பார்ப்பனர்களும், இப்போது துணிச்சலாக வெளியே வந்து விட்டார்கள். “தமிழ்நாடு பிராமண சங்க”த் தலைவர் என்.நாராயணன், இயக்கத்துக்காக நடத்தி வரும் ‘பிராமின் டுடே’ பத்திரிகையில் பார்ப்பன இளைஞர்கள் வேறு சாதியில் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று எழுதியுள்ளார். “பார்ப்பனியம் என்பது ஒரு சாதி மட்டுமல்ல; அது ஒரு வாழ்க்கை முறை; ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பண்டிகையின்போது, 15 வயது வந்த ஒவ்வொரு இளைஞரும் பார்ப்பனிய வாழ்க்கை முறையைத் தொடர்ந்து பாதுகாப்பேன்” என்று உறுதி மொழி ஏற்று வருவதாகவும், அவர் பெருமையுடன் பூணூலை உருவிக் கொண்டு எழுதியிருக்கிறார்.

எந்த பார்ப்பனியத்தின் மனுதர்மத்தை எதிர்த்து சுயமரியாதையைப் பெற்று, கல்வியிலும், பதவிகளிலும் தொழில்களிலும் தடைகளைத் தகர்த்து வாழ்வில் ஏற்றம் பெற்றார்களோ, அதே “சூத்திர” கூட்டம் வரலாறுகளை மறந்துவிட்டு மீண்டும் மீண்டும் பார்ப்பனிய மலத்தை மடியில் எடுத்துக் கொண்டு, ‘ஆகா மணம் கமழ்கிறது’ என்று சுவாசிக்கத் தொடங்கியிருக்கிறது.

மனுதர்மத்தைக் காப்பாற்ற ‘சூத்திரர்’களே தொடை தட்டிக் கிளம்பும் காலம் திரும்புவது மாபெரும் அவலம்!

மனுதர்ம சிந்தனைக்கு எதிரான இயக்கத்தின் தேவை இப்போது புரிய வேண்டுமே?

தோழர்களே! மீண்டும் பெரியார் தந்த, அந்த அறிவாயுதத்தை கரங்களில் ஏந்தி நாம் களம் இறங்க வேண்டிய கட்டாயம் வந்து விட்டது.

பார்ப்பானிடம் பாசத்தைக் கொட்டி, “வாங்கோ, வாங்கோ; இந்த திராவிடத்தை ஒழிச்சுடுவோம்; இவாள் தான், தமிழனுக்கு துரோகம் செஞ்சவாள்” என்று, விபீடணர்களும் நடைபாடை விரிக்கக் கிளம்பிவிட்டார்கள்!

பெரியார் திராவிடர் கழக செயல்வீரர்களே!

தமிழர் சமுதாய அவலத்தைக் கண்டு கொதிக்கும் நெஞ்சங்களே!

களப்பணியில் எதிரிகளை திக்குமுக்காடச் செய்து வரும் தீரர்களே!

நாம்தான் மீண்டும் இந்த சவால்களை சந்திக்க வேண்டியிருக்கிறது.

நவம்பர் 26 இல் மனுதர்மத்தை நெருப்பில் போட்டுக் கொளுத்துவோம்; வாருங்கள்!

பார்ப்பனியத்துக்கும் அதற்கு துணை போகும் கோடாரிகாம்புகளுக்கும் பாடம் புகட்டுவோம்!

தயாராவீர்! தயாராவீர்!!

## ஜப்பானின் கடைசி அணுமின் நிலையம் மூடப்பட்டது

உலகில் அணுமின் நிலையங்களை அதிகமாகப் பயன்படுத்தும் மூன்றாவது நாடாக இருந்த ஜப்பான், அந்நாட்டில் புக்குஷிமா ஆலையில் நிகழ்ந்த விபத்துக்குப் பிறகு அணுஉலைகளை படிப்படியாக மூடிவிட்டது. 50 அணு ஆலைகள் மூடப் பட்டுவிட்டன. கடைசி அணுஉலையாக ஹொக்காய்டோ தீவில் செயல்பட்டு வந்த ‘டோமன்’ அணுமின் நிலையம் கடந்த மே 12 ஆம் தேதி மூடப் பட்டுவிட்டது. மாற்று மின் சக்தி தயாரிப்பு முறைகளில் ஜப்பான் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

## மும்பையில் கூடங்குளம் எதிர்ப்பு: பினாயக் சென் பங்கேற்பு



Binayak Sen and Anand Patwardhan Appeal to Mumbai on Koondakulam (20 May 2012)

மும்பை தாதர் டாக்டர் அம்பேத்கர் நினைவு இடமான சைத்ய பூமியில் மே 20 ஆம் தேதி மாலை 6 மணிக்கு கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு தேசிய அளவிலான போராட்டம் நடைபெற்றது. இதில் டாக்டர் பினாயக் சென், இயக்குநர் ஆனந்த் பட்வர்தன், வழ. கமயாணி, மா.கதிரவன், நாடோடி தமிழன், பால்வண்ணன், கத்துவாராயண், ருடேஸ், தமிழ்மணி பாலா, ஆதி வருண் என பெரும் திரளாக அணுஉலை எதிர்ப்பாளர்கள் கலந்துகொண்டனர்,.

கூடங்குளம் அணுஉலையை உடனே மூட வேண்டும் எனவும், போராடுபவர்கள் மீது பொய் வழக்கு போட்டதை திருப்பிப் பெற வேண்டும் எனவும், முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நிகழ்ச்சியை சி.என்.டி.பி. கொங்கன், வினஷ்கரி பிரகல்ப் விரோதி சமிதி, கொங்கன் பசாவ் அந்தோலன், பெரியார் திராவிடர் கழகம் ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## குடிஅரசு வாசகர் வட்டத்தில் கொளத்தூர் மணி ஆய்வுரை

குடிஅரசு வாசகர் வட்டம் கடந்த 20.4.2012 அன்று வடசென்னை பெரம்பூரில் இராஜலட்சுமி அரங்கத் தில் திராவிடர் இயக்க வரலாறு ஆய்வு, தொடர் சொற்பொழிவு மாதந்தோறும் சென்னையில் நடைபெற்று வருகிறது. அந்த வரிசையில் குடிஅரசு வாசகர் வட்டத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில், திராவிடர்-தமிழர் என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆய்வுரை நிகழ்த்தினார். திராவிடர்-தமிழர் இயக்கத்தினர்மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைக்கும் தமிழ் தேசியவாதி களுக்கு வலிமையான மறுப்புரையாக அமைந்த இந்த உரை இணையத்தின் வழியாக நேரலை செய்யப் பட்டது.

அரங்கத்தில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றது போலவே உலகமெங்கும் வாழும் தமிழர்களும் நிகழ்ச்சியை நேரிடையாகக் கண்டு மகிழ்ச்சி தெரிவித்தனர். இக்கூட்டத்தில் வழக்கறிஞர் சங்கர் தலைமையேற்க, வழக்கறிஞர்; பா.அமர்நாத் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் குருமாரதேவன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். குடிஅரசு வாசகர் வட்டத்தின் சார்பாக கழக தலைவருக்கு கேடயமும் பொன்னாடையும் வழங்கப்பட்டது. திலீபன் நன்றியுரையாற்றினார். நிகழ்வை இணைய தளம் வழியாக நேரலை செய்ய உதவியவர் செல்லையா முத்துசாமி.

### அன்புச் செழியன் – சுமதி இணையரின் இல்லத் திறப்பு

மேட்டூர் கழக ஆதரவாளர் பொறியாளர் அன்பு செழியன் - சுமதி இணையர், ஈரோட்டில் 13.5.2012 அன்று நடந்தேறிய அவர்களது இல்லத் திறப்பு விழா மகிழ்வாக கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக கழகத் தலைவரிடம் ரூ.5000 அளித்தனர்.

### சுதா – கார்த்திக் மணவிழா

சேலம் மாவட்டம் தாரமங்கலம் பகுதி அசோக்-சரஸ்வதி ஆகியோரது மகன் ஏ.கார்த்திக்குக்கும் சேலம் மாவட்டம் கொளத்தூர் ஒன்றியம் பகுதி வீரப்பன் மகள் வி.சுதாவுக்கும் கடந்த 6.4.2012 அன்று மதியம் 12 மணியளவில் மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் நாமக்கல் மாவட்ட கழகத் தலைவர் மு.சாமிநாதன் தலைமையில் கொமரபாளையம் கேப்டன் அண்ணாதுரை முன்னிலையில் மணவிழா சிறப்புடன் நடந்தது.

மணமக்கள் கழகத் தலைவரிடம் கழக வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினர்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்.)

# ஓமலூரில் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி





*26.5.2012 சனிக்கிழமை மாலை 4 மணி முதல் சேலம் மாவட்டம் ஓமலூரில், கழகம் சார்பாக நாத்திகர் விழா மற்றும் மனுதர்ம எரிப்புப் போராட்ட விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது.*

ஓமலூர் செவ்வாய் சந்தையிலிருந்து பறை முழக்கத்துடன் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி பேருந்து நிலையம் வரை எழுச்சியுடன் நடை பெற்றது. பேரணியின் முன்பே நங்கவள்ளி அன்பு, மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி வருவதையும், அதன் நோக்கத்தையும் ஒலிபெருக்கியின் மூலமாக அறிவித்துக் கொண்டு வந்தார்.

பேரணியில் பெண்கள் தீச்சட்டிகளை எடுத்துக் கொண்டனர். குழந்தைகளெல்லாம் உடல் முழுவதும் ஊசிகளை குத்தி, அதில் எலுமிச்சைப் பழங்களை தொங்கவிட்டு வந்தனர். சிந்தாமணியூர் ஜெயபிரகாஷ் கன்னத்தில் அலகு குத்தி வந்தார். தோழர்கள் ஆத்தூர் மகேந்திரன் மற்றும் கோவிந்தபாடி சென்னியப்பன் ஆகியோர் முதுகில் அலகு குத்தி ஒரு ஆம்னி வேனையும், அம்மாபேட்டை செந்தில் மற்றும் இளம்பிள்ளை தனசேகர் ஆகியோர் முதுகில் அலகு குத்தி ஆம்னி வேனையும் இழுத்து வந்தனர். இளம்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் கொளத்தூர் அய்யனார் ஆகியோர் பறவைக் காவடி அலகு குத்தி உயரத்தில் தொங்கி வந்தனர். எருமாபாளையம் கலைவாணன் தலையில் தீயை எரியச் செய்து, அதன் மீது ஒரு பாத்திரத்தில் பால் காய்ச்சி, இதற்கும் பக்திக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று மக்களிடையே விளக்கி வந்தார். நங்கவள்ளி இராசேந்திரன் ஆனிப் படுக்கையில் படுத்து வந்தார். கிணத்துக் கடவு நிர்மல் குமார் கத்தி (அரிவாள்) மீது நின்று காண்பித்து வந்தார்.

கழகத் தோழர்கள் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான ஒலி முழக்கங்களை எழுப்பி வந்தனர். முதன்முறையாக இந்தப் பகுதியில் நடைபெறும் இந்தப் பேரணியை ஆர்வமுடன் பார்த்த பொது மக்கள் வியப்படைந்தனர். இளம்பிள்ளை சந்திர சேகர், பார்த்திபன் ஆகியோர் தீச்சட்டிகளை தயார் செய்து வந்தனர். கோவை வடக்கு மாவட்டத் தலைவர் சென்னிமலை இராமசாமி, கோவை நகர கழகப் பொருப்பாளர் கோபால், இரஞ்சித் பிரபு ஆகியோர் தலைமையில் வந்திருந்த குழுவினர், தோழர்களுக்கு அலகுகளை குத்திவிட்டு, மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணியை வழி நடத்தினர்.

மாலை 6 மணிக்கு ஓமலூர் பேருந்து நிலையம் அருகே பொதுக் கூட்டம் நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பகுத்தறிவு மற்றும் சாதி ஒழிப்புப் பாடல்களுடன் துவங்கிய இந்த பொதுக் கூட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்திவேல் தலைமையேற்றார். போலிச் சாமியார்களின் மோசடிகளை விளக்கியும், மூடநம்பிக்கைகளை நகைச்சுவையுடன் எடுத்துக் கூறியும், மந்திரமில்லை தந்திரமே என்ற தந்திர நிகழ்ச்சிகளை சிற்பி இராசன் செய்து காட்டினார். சிந்தாமணியூர் பிரகாஷ் வரவேற்புரையாற்றினார்.

சிற்பி இராசன் நிகழ்ச்சியின் இடையிடையே மேற்கு மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் பெரியப்பட்டி அன்பரசன் ஆகியோரும் உரையாற்றினர். ஆரம்ப காலங்களில் இந்த ஓமலூர் பகுதியில், பல பெரியார் இயக்கக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. பல முக்கிய தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனாலும் அவைகளை விட அதிகமான கூட்டத்தையும், பகுத்தறிவு விளக்கத்தையும் தற்போது பார்ப்பதில் வியப்பாக இருப்பதாக கூறிய தலைமை ஆசிரியர் அன்பரசன், கழகத்தின் செயல்பாடுகளை பாராட்டிப் பேசினார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'மனுதர்ம எரிப்பு போராட்டம் ஏன்' என்பதை விளக்கி சிறப்புரையாற்றினார். மீண்டும் சிறிது நேரம் சிற்பி இராசன் நிகழ்ச்சிகளை நடத்தி, சாமியார்கள் மோசடிகளை விளக்கினார். சிந்தாமணியூர் இரவி நன்றி கூற நிகழ்ச்சி நிறைவடைந்தது. தோழர்கள் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

# சோலையார்பேட்டையில் தமிழர் சமூகவியல் கல்வி முகாம்

*2012 மே மாதம் 12, 13 மற்றும் 14 ஆம் தேதிகளில் வேலூர் மாவட்டம் சோலையார்பேட்டை கே.கே.சி. திருமண மண்டபத்தில் தமிழர் சமூகவியல் கல்வி முகாம் நிகழ்த்தப் பெற்றது.*

12.05.12 காலை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முகாமைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். கேசி.காமராஜ் (முன்னாள் நகராட்சித் தலைவர் மற்றும் அ.மே.பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்) தலைமையேற்றார். புலவர் பூபதி வரவேற்புரையாற்றினார். சிவலிங்கம், அன்பு தனசேகர், டேவிட் பெரியார் சோலை வி.கே. செல்வ ராஜ், கே.சி.கே. பிரபாகரன், பூங்குளம் வேலரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிய தென் செய்தி ஆசிரியர் பூங்குழலி வருகை புரிந்தார்.

பெரியாரியலாளர் ஓவியா, 'பெண் அடிமைப் படுத்தப்பட்ட வரலாறு' குறித்தும், 'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியன், 'தமிழினத்தின் சமூக ஜனநாயகம்' என்னும் தலைப்பிலும் கற்பித்தனர். இறுதியில் மாணவர் அய்யங்களுக்குத் தலைவர் கொளத்தூர் மணி விடையளித்தார்.

13.5.12 அன்று புலவரேறு கி.த. பச்சையப்பன் (ஒருங்கிணைப்பாளர், தமிழ் உரிமைக் கூட்டமைப்பு) 'தமிழும் தமிழரும்' என்னும் பொருளிலும், தியாகு (பொதுச் செயலாளர், தமிழ்ச் தேசிய விடுதலை இயக்கம்) 'விடுதலை வென்ற நாடுகளின் வரலாறு' என்னும் பொருளிலும், தமிழ் வாணன், 'முதலீடுகள்' என்னும் பொருளிலும் பாடம் கற்பித்தனர். சிற்பி இராசன் இருபொழுதும் 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சி மூலம் மாணவர்களுடன் மக்களையும் சிரிக்க வைத்ததுடன் பகுத்தறிவைச் சிந்திக்க வைத்தார்.





14.5.12 அன்று கவிஞர் தமிழேந்தி (தமிழக செயலாளர், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்), பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் மூலம் தமிழுணர்வை ஊட்டினார். சிந்தனையாளன் முகிலன் (தலைமைக் குழு உறுப்பினர், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி), 'மார்க்சியம்' என்னும் தலைப்பில் இருபொழுதும் கற்பித்தார். சிற்பி இராசன், இரு பொழுதும் தந்திரக் காட்சிகளை நிகழ்த்தினார்.

வாணியம்பாடி ஜெயச்சந்திரன் (நாம் தமிழர் கட்சி) தலைமையில் மேகநாதன், மோகன், ஆம்பூர் பன்னீர்செல்வம், குரிசில் சண்முகம் ஆகியோர் முன்னிலையில் புலவரேறு கி.த.பச்சையப்பன் உரையாற்றினார். பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'இளைஞர்களின் இன்றைய கடமை' என்ற தலைப்பில் கருத்தாழமிக்க உரை நிகழ்த்தினார். அய்யநாதன் (துணை ஒருங்கிணைப்பாளர், நாம் தமிழர் கட்சி) உரையாற்றினார். இறுதியாக செந்தமிழன் சீமான் (ஒருங்கிணைப்பாளர், நாம் தமிழர் கட்சி) முகாமிற்கு உற்ற துணை புரிந்த தோழர்களுக்கு பயனாடை அணிவித்துச் சிறப்பித்தார். மாணவர்களுக்குச் சான்றளித்தார். தொடர்ந்து நிறைவுரையாற்றினார். காஞ்சி பொன்னப்பன் (பேரறிவாளன் கல்விப் பாசறை அமைப்பாளர்) நன்றி கூறினார்.

திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம் இம்முகாமை ஏற்பாடு செய்திருந்தது. சென்னை, காஞ்சி, ஆம்பூர், பூங்குளம், வாணியம்பாடி மற்றும் உள்ளூர் மாணவர் என 40 மாணவர்கள் மண்டபத்தில் தங்கியும், வீட்டுக்குச் சென்று வந்தும் பங்கேற்றனர். நிதி அளித்த அனைவருக்கும் குயில்தாசன் நன்றி தெரிவித்தார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ‘விந்து’ வங்கியிலும் வீரியம் பெற்றுள்ள மனுதர்மம்

குழந்தை பெறுவதற்கான தடைகளை மருத்துவ விஞ்ஞானம் தகர்த்து விட்டது. கருத்தரிக்கும் சக்தி இல்லாமல் போவோருக்கு, நன்கொடை மூலம் குருதிக் கொடை பெறுவதுபோல், விந்துக் கொடை பெறும் முறைகளும் வந்து விட்டன. இதற்காக குருதிகளை சேகரிப்பதுபோல், ‘விந்து’ களை கொடையாகப் பெற்று, சேகரிக்கும் மய்யங்கள் செயல்படுகின்றன. இந்த மய்யங்களிலிருந்து விந்துக்களைப் பெற்று, ஊசி மூலம் உடலில் செலுத்தி, கருவை வயிற்றில் வளர்த்து பெறப்படும் விஞ்ஞானக் குழந்தைகள் ஏராளமாக பிறந்து வளர்ந்து வருகின்றனர்.

குருதிக்கு, சாதி-மத வேறுபாடுகள் கிடையாது. விஞ்ஞானம், ரத்தத்தின் பிரிவுகளை பட்டியலிட்டுள்ளது. சாதிகளைக் கடந்து, ஒவ்வொரு தனி மனிதருக்கும் ரத்தத்தின் பிரிவுகளை கண்டறிந்து, தேவைப்படும்போது அந்தப் பிரிவு ரத்தம் மட்டுமே ஏற்றப்படுகிறது. அதை மட்டுமே உடலும் ஏற்கும்.

இதேபோல், சாதி மத அடையாளங்களைக் கடந்து பெறப்படும் விந்துகளும், பெண்களின் கருப்பையில் செலுத்தப்படுகின்றன. ஆனாலும்கூட மருந்துவ விஞ்ஞானம் மகத்தான சாதனைகளை செய்து, மனித குலத்தை உய்விக்க வந்தாலும்கூட, ‘மனுதர்ம’ சிந்தனை மட்டும் மாறவே இல்லை.

கடந்த மே 13 ஆம் தேதி ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டில் வெளிவந்த செய்தி இது:


Infertile & shopping for Brahmin sperms

விந்துக்கள் சேமிப்பு வங்கிக்கு வந்து, பணம் கொடுத்து, விந்துக்களை வாங்கி, கருவுற விரும்பும் இணையர்களில் பெரும்பாலோர் ஒரு கேள்வியை கேட்கிறார்கள். “இந்த விந்தைத் தந்தவர் எநத சாதி?” என்பதாகும். பீகாரைச் சேர்ந்த பிரபல குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் கவுரவ குமார், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அளித்த ஒரு பேட்டி, நாட்டில் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியது. விந்துக்களை வாங்க விரும்பும் இணையர், தங்களுக்கு குறிப்பிட்ட சாதிக்காரர்களின் விந்து மட்டுமே வேண்டும் என்று வற்புறுத்துவதாக அவர் பேட்டியில் கூறியிருந்தார்.

இது, பீகார் போன்ற சாதிவெறிப் பிடித்த மாநிலங்களில் மட்டுமல்ல, டில்லி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் இதே ‘மனுதர்ம’ சிந்தனைதான் நிலவுகிறது.

மும்பையில், ‘டிரிவெக்டர்’ என்ற விந்து வங்கி நடத்தும் திலிப்பட்டீல், மற்றொரு தகவலைக் கூறியுள்ளார். ‘பிராமணர்’ விந்து வேண்டும், எவ்வளவு பணம் தரவும் தயார் என்று கேட்பவர்களே அதிகமாக இருக்கிறார்கள் என்று அவர் கூறியுள்ளார். முஸ்லீம்கள்கூட ‘சன்னி’ விந்து, ‘சீயா’ விந்து என்று குறிப்பிட்டுக் கேட்கிறார்கள் என்று கூறும் அவர், மருத்துவ ஆய்வு வழிகாட்டுதலின்படி ‘விந்து’ தந்தவர் சாதியை வெளிப்படுத்துவது குற்றம். ஆனால், மதத்தை வெளிப்படுத்தலாம் என்றார், அவர். சிவப்பு நிறமுள்ள அடர்த்தியான கூந்தல் உள்ள, கூர்மையான பார்வைக் கொண்டவர்களிடமிருந்து பெறக்கூடிய ‘விந்து’வை கருவில் சுமக்க விரும்புகிறார்கள். அதிலும், தான் சார்ந்திருக்கிற ‘சாதி’க்கே அவர்கள் முன்னுரிமை தருகிறார்கள். எல்லாவற்றையும்விட “பிராமணர்” விந்துக்கு சந்தையில் கடும் போட்டி!

குழந்தைப் பெற வாய்ப்பற்றவர்களுக்கு விஞ்ஞானம் தனது ஆராய்ச்சியில் கண்டறிந்த மகத்தான கண்டுபிடிப்புகளிலும் ‘மனுதர்மமே’ ஆட்டிப் படைக்கிறது என்றால், இது நாகரிகமான நாடு தானா? இதைப் போன்ற வெட்கக்கேட்டை தலைகுனிவை வேறு எங்கும் பார்க்க முடியுமா?

விந்துக் கொடையிலும் பார்ப்பனியமே ‘வீரியமானது’ என்ற மனு தர்ம சிந்தனையை மரணப்படுகுழியில் ஆழக் குழித் தோண்டி புதைக்க வேண்டாமா?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

(குறிப்பு: இதில் பயன்படுத்தப்பட்டுள்ள மேற்கட்டுமானம், அடிக்கட்டுமானம் என்ற சொற்றொடர்கள் மார்க்சியம் தொடர்பானவை; இதற்கான கலைச்சொல் விளக்கம், என்ன காரணத்தினாலே தரப்படவில்லை.)

- பெரியார், திராவிடம் பேசிய தமிழன் அரசியல் விடுதலையை வென்றெடுக்காமல், ‘இரண்டகம்’ செய்து விட்டார் என்பதால், அந்த புரட்சியை வென்றெடுக்க, படை திரட்டிக் கிளம்பியிருக்கும், நாம் தமிழர் கட்சி, தமது அமைப்பில் சேருவோர் “புரட்சிகர” உறுதிமொழியை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறது.

அந்த உறுதிமொழிப் பிரகடனம் இது தான்:

*“நாட்டின் அரசியல் சட்டத்திற்கு உண்மையாக இருப்பதுடன், சமனியம் (சோசலிசம்), மதச்சார்பின்மை, குடிநாயகம் ஆகிய கொள்கைகளின்பால் உண்மையான நம்பிக்கைக் கொண்டு, நாட்டின் இறையாண்மை, ஒற்றுமை ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்தி, வலிமைப்படுத்தக் கட்சி உறுதி அளிக்கிறது.”*

- திராவிடம் இழைத்த துரோகங்களை நேர் செய்யக் கிளம்பியிருக்கும் நாம் தமிழர் கட்சி, இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற மேற்கண்ட ‘மாபெரும் அறைகூவலை’ விடுத்திருப்பதோடு அதன் பொதுக் கூட்ட மேடைகளில் பெரியார் படத்துக்கும் தடை விதித்துவிட்டது.

*“கட்சி நிகழ்ச்சிகளுக்கு உரிய பதாகைகளில் நம் வாழ்வியல் வழிகாட்டி திருவள்ளுவர், நம் உரிமை மீட்சியியல் வழிகாட்டி தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் (பெரும்பாகரன்) ஆகிய இருவரின் உருவங்கள் தவிர வேறெந்த உருவமும் பயன்படுத்தக் கூடாது.”* – என்றது அந்த ஆவணம்.

# ‘திராவிடர் இயக்கம் உருவாகிய பின்னணி (10)

1919 ஜனவரியில் டாக்டர் டி.எம். நாயர் சென்னை திரும்பியதும், ‘சவுத் பரோ’ கமிட்டியைப் புறக்கணிக்கும்படி பார்ப்பனரல்லாதாரைக் கேட்டுக் கொண்டார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கும் தனித் தொகுதிக்கும் விரோதமான கருத்துக் கொண்ட இரு பார்ப்பனர்கள் அடங்கிய இக்குழுவினரால் எந்த நியாயமும் கிடைக்காது என்று எடுத்துக் கூறினார். எதிர்பார்த்தது போலவே ‘சவுத்பரோ’ குழு வகுப்பு அடிப்படையில் சட்ட மன்றத்தில் தொகுதி ஒதுக்கக் கூடாது என்று தீர்ப்புக் கூறி விட்டது. ஆனால், இக் கமிட்டியின் முடிவை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ‘மாண்டேகு-செம்ஸ் போர்டு’ மசோதா ஜூன் மாதம், இரண்டாவது முறையாக பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு, அதற்கென நியமிக்கப்பட்ட நாடாளு மன்ற பொறுக்குக் குழு (Joint Select Committee)வின் முன் தங்கள் வாக்கு மூலங்களை அளிக்க, இந்தியாவிலிருந்து பல்வேறு அரசியல் கட்சிகளும், சங்கங்களும் இங்கிலாந்து சென்றிருந்தன. ஹோம்ரூல் இயக்கம், முஸ்லிம் லீக், காங்கிரஸ், சென்னை மாகாண சங்கம், நீதிக்கட்சி ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். உடல்நலம் பெரிதும் குன்றியிருந்தபோதிலும், கடமை உணர்ச்சி காரணமாக, நாயர் நீதிக்கட்சி சார்பில் பார்ப்பனரல்லாதார் நலனுக்காக வாதாடு வதற்காக லண்டன் புறப் பட்டார். நடேசனாரிடம் நான் மீண்டும் வரும் வரையில் போர்க் கொடி தாழாமல் பார்த்துக் கொள்க! நம் நீதிக்கட்சியை உங்களிடம் ஒப்படைத்துச் செல்லுகிறேன்!’ என்று கூறினார்.

**லண்டனில் உயிர் நீத்த டாக்டர் டி.எம்.நாயர்**

சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் புறப்படுமுன், வழி அனுப்ப வந்த தனது நண்பர் புதுக் கோட்டை ராஜாவிடம் சொன்னார்: ‘நல்லது! நான் அதுவரை உயிருடன் இருப்பேன்!’ இவரது குழுவினரான கே.வி. ரெட்டி, (கே.வெங்கடா ரெட்டி நாயுடு), ஏ.ஆர். முதலியார், கே.ஏ. அப்பாராவ் (நாயுடு), எல். கே.துளசிராம் ஆகியோர் டாக்டர் நாயருடன் செல்லாது தனியே, பின்னர் லண்டன் சென்று அடைந்தனர். பனகல் அரசர் அகில இந்திய நிலச்சுவான்தார் குழுவின் பிரதிநிதி என்ற பெயரில் லண்டன் சென்றார். லண்டன் அடைந்ததும், உடல் நலமற்ற நிலையிலேயே பாராளுமன்ற குழுவக்கு முன் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கையைத்தயாரிக்க முயற்சி செய்தார். இதற்கிடையில் நாயர் உடல் நிலை மேலும் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார். இந்த நிலையில் கே.வி.ரெட்டியும், சர்.ஏ.ராமசாமி முதலியாரும் ஜூன் 21 இல் லண்டன் சென்று மருத்துவமனையில் நாயரைக் கண்டனர். அவர்களைக் கண்டதும் நாயர், ‘தங்களைக் கண்டது எனக்கு நிம்மதி’ என்று கூறினார். பிறகு கே.வி.ரெட்டியும் நாயரும் மருத்துவ மனையிலேயே அறிக்கையைத் தயாரிக்க முனைத்தனர்.

**(தொடரும்)**

# உடுமலையில் திராவிடர் இயக்க நூற்றாண்டு விழா

திராவிடர் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவை திருப்பூரில் மிகச் சிறப்பாக கொண்டாடும் விதத்தில் மாவட்டத்தில் 100 இடங்களில் பிரச்சார நிகழ்ச்சியை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, திராவிடர் இயக்க நூற்றாண்டு தொடக்க விழாப் பொதுக் கூட்டம் 18.5.2012 வெள்ளி மாலை 7 மணிக்கு உடுமலைப் பேட்டைவெங்கட கிருஷ்ணா ரோடில் நடைபெற்றது. உடுமலைப் பேட்டை நகர, ஒன்றிய கழகம், இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியது.

தொடக்க விழாப் பொதுக் கூட்டத்திற்கு உடுமலை நகர கழகத் தலைவர் யாழ். நடராசன் தலைமையேற்றார். உடுமலை நகரப் பொருளாளர் மு.வேல்முருகன், க.இரமேசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக பகுத்தறிவாளர் பேரவைப் பொறுப்பாளர் பல்லடம் திருமூர்த்தி, ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சியை நடத்தினார். தொடர்ந்து மாவட்ட கழகச் செயலாளர் கா.கருமலையப்பன், தலைமைச் செயற்குழு உறுப்பனிர் இரா. மனோகரன், தலைமைக் கழகப் பேச்சாளர் திண்டுக்கல் துரை. சம்பத், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஆர்.டி. மாரியப்பன் ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரையாக ம.தி.மு.க. அரசியல் ஆய்வு மையச் செயலாளர் மு.செந்தி லதிபன் இரண்டு மணி நேரம் திராவிடர் இயக்கத்தின் தோற்றம், தலைவர்களின் தியாகம், நீதிக் கட்சியின் சாதனைகள் என நீண்ட வரலாற்றை ஆய்வுச் சொற்பொழிவாக நிகழ்த்தினார். இறுதியில் உடுமலை ஒன்றியச் செயலாளர் கோ.விசுவநாதன் நன்றியுரை கூறினார்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st May 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.